உ

# தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.


| | | |
|---|---|---|
| துணர் ச. | விபவ—ஐப்பசி, கார்த்திகை, மார்கழி. | மலர் எ, அ, கூ. |


## பள்ளிக்கூடப் பாடங்களின் உரை ஆராய்ச்சி.


திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், மன்னார்குடி.


[1928—29-ஆம் ஆண்டு 'S. S. L. C.' வகுப்பின் 'A. Group' பாட புத்தகத்திற்குப் பண்டிதர் A. K. சீநிவாச ஐயங்காரவர்கள் முதலியோர் எழுதிய உரைகளின் ஆராய்ச்சி.]

### குறுந்தொகை.

1. திரு. ஐயங்கார் அவர்கள் 'தாமரை புரையும் காமர் சேவடி' என்னும் பாட்டில் 'எய்தின்றால்' என்பதில் ஆல் சாரியை என்றார், சாரியைக்கும் அசைநிலைக்கும் உள்ள வேறுபாடு அறியார் போலும்.

2. 'எய்தின்றால் உலகு' என்புழி உலகு என்னும் இடத்தின் பெயர் அதன்கண் வாழும் உயிர்ப்பன்மையை உணர்த்தி நின்றதனால் இடவாகு பெயர் என்றார். இவர் ஆகுபெயர்ப்

பெற்றி அறிந்திலர் போலும். பன்மைப்பொருள் கருதியதாயின் எய்தின்று என ஒன்றன்பால் வினைகொண்டு முடிதல் வழுவாதல் அறிக. நன்னூற்குக் காண்டிகையுரை எழுதிய சடகோபராமா னுசர் முதலியோர் ஊர் அடங்கிற்று என இடவாகு பெயர்க்கு உதாரணம் காட்டினர். அதுவும் தவறு. ஊர் என்பது அதன் கண் வாழும் மக்களைக் குறித்ததெனின் அடங்கினர் என முடிவ தன்றி அடங்கிற்று என முடியாது. 'வானின்றுலகம்', 'பிற னில் விழையாமை', 'கடலிற் கரைத்த காயம்', 'ஆற்றில் மூழ்கி னன்' என்புழி வான், இல், கடல், ஆறு என்பனவே இடவாகு பெயர் என்க.

அற்றேல், 'எய்தியது உலகு' என்பதில் இலக்கண முடிபு யாதோவெனில், 'உலகு' என்பது உயர்திணைப் பொருட்கண் வந்த அஃறிணைச் சொல் என்பது. 'கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்-டல்லவை செய்தொழுகும் வேந்து' என்னும் குறளில் 'வேந்து கொடியன்' என முடியாமல் 'வேந்து-கொடிது' என முடிந்தது பற்றி, 'வேந்து' என்பது 'உயர் திணைப் பொருட்கண் வந்த அஃறிணைச்சொல்' எனப் பரிமே லழகர் உரையிற் கூறியது காண்க. அவர் 'தினற்பொருட்டாற் கொள்ளாது உலகெனின் யாரும்-விலைப்பொருட்டால் ஊன்றரு வார் இல்.' (குறள்) 'குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்-அடிதழீஇ நிற்கும் உலகு.' (குறள்.) இவற்றுள் உலகு என்பது உலகத்தாரைக் குறித்தது என்றுரைத்தவர் அது ஆகுபெயர் என்று கூறாமை காண்க.

'செப்பின் புணர்ச்சிபோற் கூடினும் கூடாதே-உட்பகை யுற்ற குடி' என்னும் குறள் உரையில் "குடிகூடாது' என்பதை 'நாடு வந்தது' என்றாற் போலக் கொள்க" என்று அவர் உரைத்ததும் அக்கருத்துப்பற்றியே. இதற்கு இலக்கண விதி, 'கால முலகம்........................பால் பிரிந்திசையா உயர்திணை மேன' என்னும் தொல்காப்பியச் சூத்திரம். அதன் உரையில், 'உலகம் என்னும் சொல் நிலத்தையும் குறிக்கும், அதன்கண் வாழும் மக்களையும் குறிக்கும். எனவே இது பலபொருள் குறித்த

ஒரு சொல். மக்களைக்குறித்த வழியும் இயற்பெயரே; ஆகுபெயர் அன்று' எனச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் விளங்க உரைத்தவாறு காண்க. கல்லாடரும் பேராசிரியரும் அதுவே கருத்தினர் ஆயினும் அதனைக் 'குடிமை ஆண்மை' என்னும் சூத்திரவுரையில் விரிப்பர். அதில் பேராசிரியர் 'உலகு வந்தது' 'நாடுவந்தது' 'ஊர் வந்தது' என்பது அவ்விடத்துள்ள மக்களைக் குறித்தது. இவையெல்லாம் ஆகுபெயர் அல்லவோ வெனின், ஆகுபெயராயின் தன் பொருட்குரிய (உயர்திணைச்) சொல்லால் முடியும். இவை வேறுபட்டு (அஃறிணை) முடிவு கொள்ளுதலால் ஆகுபெயர் அல்ல' என்று இலக்கணம் தெளிவுறக் கூறியது காண்க.

அற்றேல் இவ்வாறு வருவதற்கு நன்னூலில் இலக்கண விதி இல்லையோவெனின் உளதென்க. 'உருவக வுவமையில் திணை சினை முதல்கள், பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே' என்னும் சூத்திரத்தில் 'பிறவும்' என்றதனால் இவ்வகை முடிபு கொள்ளப்பட்டது. அதன் உரையில் 'தஞ்சாக்கண்ண வடபுலத் தரசே' என உயர்திணையை அஃறிணையாகக் கூறுதல் வழு வமைதி எனக் கூறப்பட்டது காண்க. ஆகவே, 'எய்தியது உலகு' என்பது மேற்கூறியவாறு முடிந்த வழுவமைதி எனவும் உலகு என்பது ஆகுபெயர் அன்றெனவும் தெற்றென உணர்க.

3. 'எய்தின்றால் உலகு' எய்தியது உலகு என்னும் பொருளை முடித்து அதன்மேல் 'அத்தகைய கடவுளை யாம் வணங்குவோமாக' எனச் சொற்களை வருவித்துரைத்து, அது சொல்லெச்சம் என்றார். சொல்லெச்சத்துக்கும் குறிப்பெச்சத் துக்கும் வேற்றுமை அறியார் போலும். நன்னூல் இலக்கண பாடம் கொண்ட மாணவர்க்கு எழுதிய உரையுள் 'இசையா ஒரு பொருள் இல்லென்றல்' என்புழி என்றல் என்று சொல்லுதல் என வருவதே சொல்லெச்சம் என்க. இனி அது வேறோர் உரையாசிரியர் கொள்கையெனின், பால்குடிக்கும் குழவிக்குச் சோறூட்டுவார் உளரோவென மறுக்க.

## சிலப்பதிகாரம்.

4. 'கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே, கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே' என்புழிப் பிந்திய அடிக்கு 'அவ்வாறு (கண்ணனைப்) பார்க்குங்கால் இமைகொட்டாமல் பார்ப்பதில்லாமல் இடையிடையே இமைகொட்டிப் பார்ப்பவர்களுடைய கண்கள் என்ன கண்களோ' என்று அடியார்க்கு நல்லார் எழுதியபடியே எழுதினர். இவர்க்கு இமை கொட்டிப் பார்ப்பார் கண்கள் பயனற்றன என்பது கருத்தாயின் இமைக்கும் இயல்புடைய மானிடர் இமையாது பார்த்தல் கூடுமோ? கண்ணனைப் பார்க்காத கண்கள் கொன்னே இமைத்தலுக்கும் விழித்தலுக்குமே படைக்கப்பட்டன என்பது கருத்தாகக் கொள்க. 'இமையா நாட்டம் பெற்றிலம் என்றார்' (கம்பர்) என்றாற்போல அலங்கார வகையாற் கூறியதெனினும் ஒக்கும்.

## தேவாரம்.

5. திருமழபாடி- தேவாரம். தே–தெய்வத்திற்கு, வாரம்– விருப்பமுடையது என்று உரைத்தார். ஆரம்–மாலை. தேவாரம் தெய்வத்தைப்பாடிய பாமாலை என்பது செம்பொருள். இதனை 'உரைத்த தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வுபெற உணர்ந்துரைப் பார்' (திருநாவு–புராணம்–69). 'தேமாலைச் செந்தமிழின் செழுந் திருத்தாண்டகம் பாடி' (ஷை 93) என்பன நோக்கி அறிக.

6. 'கீளார் கோவணம்' என்பதற்குக் கிழித்தமைக்கப் பட்ட கோவணம். கீள், கீழ் என்பதன் விகாரமாகக் கொள்ளின் கீழ்ப்புறத் தமைக்கப்பட்ட கோவணம் எனப்பொருள் கூறலாம் எனவும் உரைத்தார். இது சைவநூல் வழக்கறியாது பிதற்றுரை. கீள் என்பது துறவியர் கோவணம் தரித்தற்கு அரைநாண்போலக் கட்டும் துணி. இதனை 'நற்கந்தைகள் உடைகீள் யாணர் வெண் கிழிக் கோவணம்' 'கந்தை கீளுடை கோவணம்' (அமர்நீதி— புராணம். 11. 16) இவற்றால் அறிக.

7. 'வாளார் கண்ணி பங்கா' என்புழி, வாள் போலும் கண்ணையுடையாள் என்னும் உவமைப் பொருளைச் சிதைத்து ஒளி

பொருந்திய கண்ணையுடையாள் என்று உரைத்தார். 'வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமல்' (தேவாரம்) 'வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார்' (கம்பர்) என வழங்கி வருதலை அறியார்போலும்.

8. 'எம்மான் எம்மனை என்றனக்கு எட்டனைச் சார்வு ஆகார்' என்புழி, எம்மான் எம்மானே எனவிளி எனவும், எம்மனை மனைவி முதலானவர்கள் எனவும் எம்மனை என்பதற்குத் தந்தையர் என்றும் பொருள் கூறலாம் எனவும் உரைத்தார். இவையும் பிதற்றலே. பாடநூலின் (Text Book) குறிப்புரைகாரர் எம்மான் எம்து தந்தை ; இதில் மான் இங்குத் தந்தையைக் குறிக்கும் எனவும், எம்மனை என்புழி அன்னை என்பது அனையென இடைக்குறை விகாரம் எனவும், அம்மான் என்பது அந்த மகான் என்று பொருள்படும் எனவும் எழுதினர். இவையும் தவறே.

எம்மனை என்பதை எம்முடைய மனையெனப் பிரித்துரைத்தால் மேல்வரும் என்றனக்கு என்னும் ஒருமை முடிபோடு பொருந்தாமை நோக்கிலர். எம்மான் எம்மனை என்பனவற்றின் பாகுபாடும் அறிந்திலர். என் தந்தை என்பது எந்தையென மருவி வந்தாற்போல, என் அம்மான் எம்மான் எனவும், என் அம்மனை எம்மனை எனவும் மருவி வந்தவாறு தெளிக. அம்மான்—தந்தை. அம்மனை—தாய். இதற்கு இதுவே பொருள் என்பதை 'என்றுந்தை தாதைக்கும் எம்மனைக்கும் தம்பெருமான்' (திருவா-கோத்தும்பி) என்பது கொண்டு தெளிக.

அம்மான் என்பது அந்த மகான் எனச் சுட்டுப் பெயர் ஆனால் எட்டாம் வேற்றுமை உருபு ஏற்காது என மறுக்க. 'நுவ்வொடு வினச்சுட் டுற்ற னஎா-வைதுத் தாந்தான் இன்னன விளியா' என்பது நன்னூற் சூத்திர விதி.

9. 'மின்னார் செஞ்சடைமேல்' என்புழி மின் ஆர் என்பதற்கு ஒளிபொருந்திய என்று உரைத்தார். (Text Book) குறிப்புரைகாரரும் அதுவே உரைத்தார். இருவரும் மின்னல் போலும் சிவந்த சடை என்னும் உவமைப் பொருளைச் சிதைத்து

உரைத்தார். சிவன் சடைக்கு மின்னல் உவமானம் என்ப அறியார்போலும். 'மின் துன்னிய செஞ்சடை' என்னு திருச்சிற்றம்பலக் கோவையார் உரையில் மின்னலை ஒத்த சிவந் சடை என்று பேராசிரியர் உரைத்தது காண்க.

10. 'மைம்மாம் பூம்பொழில் சூழ்' என்புழி மாம் பூம் இரண்டையும் பொழிலுக்கு அடையாக்குக என்றார். மா பூ எனக் காட்டாமல் மாம் பூம் எனப்பிழைபட்ட வாய்பாட்டால் காட்டியது குற்றமாதல் அறிக.

11. 'பண்டே நின்னடியேன்' இதில் அடங்கிய கதை இன்னதென்று காட்டவில்லை. ஆலாலசுந்தரர் என்பவர் பரம சிவன் திருவருளால் கயிலையினின்றும் போந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளாக அவதரித்தார் என்பது பெரியபுராணம்.

12. 'மாளா நாள்அருளும் மழபாடியுள் மாணிக்கமே' இதில் பொதிந்து கிடந்த கதையைப்பும் விளக்கவில்லை. சிவன் மார்க்கண்டர் பொருட்டு யமனை உதைத்த கதை இதில் குறிக்கப் பட்டது என அறிக.

13. 'வெந்தார் வெண்பொடியாய்' என்பதற்கு 'வெந்து அடங்கிய விபூதியை அணிந்தவனே' என்று உரைத்தார். வெந்து அடங்கிய விபூதி என்பதில் பொருட் பொருத்தம் இல்லாமை காண்க. வெந்தார் என்பதை வினையாலணையும் பெய ராகக் கொண்டு நெற்றிக்கண் நெருப்பால் தகிக்கப்பட்டவர் ஆகிய தேவர் முதலியோர் உடம்பு வெந்த சாம்பலை அணிந்தான் என்று செம்பொருள் உரைக்க வெள்கினர் போலும். 'தேவர் வெந்த சாம்பரும் பூசுமோ' (ததீசியுத்தரப்படலம் 1) என்பதனாலும் இப்பொருள் துணிக. இதனாலும் இவர் சைவநூற் பயிற்சி யின்மையை விளக்கினார்.

14. 'ஐயா உன்னை யல்லால்' இதில் ஐயன் என்பது ஆரியன் என்னும் வடமொழியின் சிதைவு என்றார். இவர் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் வேற்றுமை அறியார்

போலும். தமிழ்மொழி யெல்லாம் வடமொழியின் சிதைவெனச் சாதிக்கத் தலைப்படுவாருள் இவரும் ஒருவர் போலும். ஆசிரியன் என்னும் வடமொழிப்பொருளை உணர்த்தும் செந்தமிழ்ச்சொல் ஐயன் என்று உணர்க. ஐயன் என்பது தந்தைக்கும் கடவுட்கும் பெயர். இதனை உலகவழக்கினும் கண்டுகொள்க.

15. 'நெடுமாலயன் போற்றிசெய்யும் குறியே.' இதனுள் அடங்கிய கதை இன்னதென்று விளக்கினரிலர். திருமாலும் பிரமனும் சிவபெருமான் அடிமுடி தேடிச்சென்றது இங்கே குறிக்கப்பட்டது என அறிக.

## பெரியதிருமொழி.

16. 'குன்றேய் மேகம் அதிர் குளிர்மாமலை வேங்கடவா' இதனுள் 'குன்றேய்மேகம்' என்பதற்கு 'மலையிடத்துத் தங்கிய மேகம்' என்று உரைத்தார். மேலே மாமலை என்று வருவதனால் இப்பொருள் பொருந்தாது. குன்று மேகத்துக்கு உவமை. ஏய் உவமவுருபு. இஃது அறியாது இவ்விடத்திலும் உவமைப் பொருளைச் சிதைத்துரைத்தார்.

17. 'நோயே பட்டொழிந்தே னுனைக் காண்பதோ ராசையி னால்' என்புழி ஒழிந்தேன் நுன்னையென்று பிரித்து உரையாமல், ஒழிந்தேன் உன்னை யென்று பிரித்து மோனைத் தொடைபழுதுற உரைத்தார். 'நோற்றேன் பல்பிறவி நுனைக்காண்பதோர் ஆசை யினால்' என மேல்வரும் பாட்டினும் நுன்னையெனப் பாடம் காட்டாமல் உன்னையென்று பாடம் காட்டி உரைத்தார். இவர் நுன்னை யென்று வருதல் பிழையென்று கருதினர் போலும். (சிந்தாமணி நாமகள்) 'நுன்பழம் பகைதப நூறுவாயென' என்பதன் உரையில் நச்சினார்க்கினியர் நுன் என்பது ஓர்திசைச் சொல் என்று காட்டியது அறியார் போலும். (Text book) குறிப்புரை எழுதினவரும் நீ என்பது நுன் எனத் திரிந்த தென்றார். அதுவும் தவறென்க

18. 'செப்பார் திண் வரைசூழ் திருவேங்கட மாமலை' என்பதில் செப்பார் என்பதற்கு மாந்தளிர் நிறம் அமைந்த என்றும், செப்பு என்பது செப்புச்சிலை யென்றும் உரைத்தார். குறிப்புரைகாரர் செம்பு நிறைந்த என்றார். இவை யெல்லாம் பொருந்தா உரை. செப்பு என்பது, உரை என்பது போலப் புகழ் என்னும் பொருளைக் குறிக்கும் பெயர் என்க. 'வட வேங்கடம் தென் குமரி' 'நெடியோன் குன்றம்' என ஆன்றோரால் புகழப்பட்டவாறு அறிக.

## பெரியநாயகியம்மை திருவிருத்தம்.

19. 'காமமென் கின்ற கதுவுவெந் தீயும்' என்னும் பாட்டில் மணிமுத்தநதி வருணனை விரித்துரைத்த இவர், 'எலும்பு கங்கையில் இடப்படும், மணிமுத்தநதியும் எலும்பை இழுத்துக் கொண்டு வரும்; கங்கை தெய்வத்தன்மை பொருந்தியது, மணிமுத்தநதியும் அது பொருந்தியது; கங்கை நீர் பனி இவற்றால் வெண்ணிறமுள்ளது', மணிமுத்தநதி அன்னங்களால் வெண்மையுள்ளது; ஆதலால் இது கங்கையையும் பரிகசிக்கத்தக்கது. இதற்குத் தாழ்வு சொல்லத்தக்க விஷயம் ஒன்றேனும் இல்லை, ஆதலால் இதற்கு நிகர் வேறொன்றும் இல்லை என்று சொல்லத் தக்க நதி' என்று உரைத்தார். புத்தகத்தின் குறிப்புரைகாரர் உரையும் அதை ஒத்ததே. இருவரும் இப்பாட்டில் உள்ள அலங்காரங்கள் இன்னவெனத் தெரியாமையால் அவ்வாறு உரைத்தார். 'இருந்து நல்லன்னம்' என்புழி இருந்தும் என்பதின் ஈற்று மகரம் கெட்டதெனக்கொண்டு பொருள் புலப்படக் காண்க. மணிமுத்தநதியோடு கங்கையை ஒப்பிட்டு மணிமுத்தநதிக்கு ஏற்றமும் கங்கைக்குத் தாழ்வும் சொல்லவேண்டுவது ஆசிரியர் கருத்து. அன்னங்கள் நிறையப்பெற்றதனால் மணிமுத்த நதிக்கு ஏற்றமும் எலும்புகள் இடப்படுவதனால் கங்கைக்கு இழிவும் கருதப்பட்டன. அக்காரணம்பற்றி அவ்வன்னங்களின் தொனியைக்கொண்டு மணிமுத்தநதி பற்கள் தோன்றச் சிரித்துக் கங்கையை இகழ்ந்து சொல்வதாகக் குறிக்கப்பட்டது. இது தற்குறிப்பணி. வடநூலார் உத்பிரேக்ஷாலங்காரம் என்பர்.

இனி, மணிமுத்தநதிதான் எலும்பை ஆரமாக அணிந்த கடவுள் மாநதியாயிருந்தும், அதனை மறந்து, எலும்பு இடப்படுதல் பற்றிக் கங்கையை இகழ்ந்தது தகாதது. அக்குற்றம் ஒன்றும் இல்லாவிடின் மணிமுத்தநதியின் குணம் கிடைக்கத்தக்கதன்று என்று கூறினர். இது பழிப்பதுபோலப் புகழ்தல் என்னும் அணி. வியாஜ ஸ்துதி அலங்காரம் என்பர் வடநூலார்.

## பாரத வெண்பா.

20. 'சேனையின் முன்சென்று திறல் அழிக்கப் புக்கானே ஆனையின்மேல் சியம்போல் அன்று' என்புழி ஆனையின்மேல் ஏறிக்கொண்டு வருகிற சிங்கம்போலச் சேனையின்முன் ........புகுந்தான் என்றுரைத்து இது இல்பொருள் உவமையணி என்றார். இதனாலும் இவர் அணியிலக்கணப் பயிற்சியிலர் என்பதை விளக்கினர்.

21. (செய்-17). வென்றி என்பது வெற்றி என்பதன் மெலித்தல் விகாரம் என்றார். இதனால் இவர் நிகண்டு நூற் பயிற்சியின்மையை விளக்கினர். 'விசயமும் வெற்றமும் வென்றியும் வெற்றி' என்பது பிங்கல நிகண்டு.

22. (செய்-20). 'வீரர், விலங்கிலார் தம்மேலும் வெஞ் சரங்கள் தூவ' என்பதில் விலங்கினர் எனப் பாடம் கொண்டு 'ஓடிப்போன வீரர் மேலும் கொடிய பாணங்களைத் தொடுத்துவிட' என்று உரைத்தார். அது யுத்த தருமம் அன்று என்பது தெரியார் போலும்.

23. (செய்-24). பல்வேந்தர்—இருபெயரொட்டு என்றார். பண்புத்தொகைக்கும் இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கும் பேதம் தெரிந்திலர்.

24. (செய்-26). 'என்மகனைக், கொன்றுளனாய் நிற்க ஓர் கூனல்வில் வேள்போல்மால், இன்றுளனாய் என்செய்கேன் யான்' என்பதற்கு '(அபிமன்னு) என்மகனை ஓர் கூனல்வில்வேள்போல் கொன்று உளனாய் நிற்க, யான் இன்று மால் உளனாய் என்

செய்கேன்' என்று இயைபு கூறி உரைக்க அறியாது 'கூனல் வில்வேள்போல்' என்னும் உவமையைத் துரியோதனனுக்கு ஏற்றி, வேள்போல் என்பதற்கு 'ஆண்மகனைப்போல' எனப் பழுதுபடக் கூறினர். புத்தகக் குறிப்புரைகாரரும் அவ்வாறே கூறினர்.

25. (செய்-32). 'உழிதந்து' என்பதில் பகுதி உழிதரு என்றார். வந்து என்பதற்கு வரு பகுதி என்பர்போலும். இதனல் இவர்க்குப் பதவியற் பயிற்சிக்குறை வெளியாயிற்று.

26. (செய்-35). 'கடுஞ்சிலைநாண் கால்அலைப்ப' என்பதில் கால் அலைப்ப என்பதற்குக் காற்றை அசைக்க என்றுரைத்தார். கால் என்பது வில்லின் அடி யாகும் 'கொண்டான் பகழி தொடுத்தான் சிலை கால் குனிந்தது' (சிந்தாமணி–காந்தருவ--216) என்பதற்கு நச்சினர்க்கினியர் கூறிய உரையும் பார்த்திலர்போலும்.

27. (செய்-39). ஒற்றை, அற்றை—வலித்தல் விகாரம் என்றார். செய்யுள் விகாரத்துக்கும் புணர்ச்சி விகாரத்துக்கும் வேற்றுமை அறியார் போலும். நன்னூலில் 'ஐயீற்றுடைக் குற்றுகரமும் உளவே' என்னும் சூத்திரவிதியால், ஒன்று ஒற்றை எனவும், அன்று அற்றை எனவும் முடியும் என அறிக. வலிந்த வாய்பாடு 'ஒன்றை அன்றை' அல்ல வென்பதும் அறிக.

28. (செய். 20). 'திண்கருங்கை வெண்கோட்டுக்கார் மேலும்' என்புழிக் 'கார்' என்பது ஆகுபெயராய் யானையை உணர்த்திற்று என்றார். இவர் அலங்கார நூற் பயிற்சியிலர் என்பதற்கு இதுவும் ஒரு சான்று. இங்கே யானையைக் கார் (மேகம்) ஆக உருவகம் செய்யப்பட்டது. காருக்குக் கோடு (கொம்பு) மிகையாகச் சொல்லப்பட்டது. எனவே, இது மிகை ஒற்றுமை உருவகவணியாம். இவ்வாறு வரும் உருவகங்களை ஆகுபெயரெனல் ஆகாது என்று ஆகுபெயர்ச் சூத்திரவுரையில் சங்கரநமச்சிவாயப்புலவர் கூறியவாற்றால் தெளிக.

## அங்கதன் தூதுப்படலம்.

[மேற்கண்ட உரையாராய்ச்சியுடன் அருங்கவி விளக்கமும் அரிய இலக்கணக் குறிப்புக்களும்.]

29. (செய்-1.)

வள்ளலும் விரைவின் எய்தி வடதிசை வாயில் முற்றி,
வெள்ளம்ஓர் எழுபத்துக் கணித்தவெஞ் சேனையோடும்,
கள்ளனை வரவுபார்த்து நின்றனன் காண்கி லாதான்,
ஒள்ளியது உணர்ந்தோன் என்ன வீடணற்கு உரைப்பதானான்.

இப்பாட்டில் 'கணித்தவெஞ் சேனையோடும்' என்பதை கணித்தவன் சேனையோடும்' எனவும், 'காண்கிலாதான்' என்பதைக் 'கணக்கிலாதான்' எனவும், 'ஒள்ளியது உணர்ந்தோன் என்ன' என்பதை ஒள்ளியது உணர்ந்தேன் என்ன' எனவும் பாட புத்தகத்தில் (Text Book) பதிப்பானது பிழையான பாடம். அதனைத் திருத்திக்காட்டும் ஆற்றல் இல்லாதவராய்ப் பிழைபட்ட பாடமே கொண்டு பிழைபட்ட உரையே கூறினர். இதற்குக் காரணம் பழைமையான எட்டுப்பிரதி முதலியவற்றில் ஆராய்ச்சி யின்மையே. பாடம் பிழை என்பதற்கு இரண்டாம் அடியில் மோனைத்தொடை பிழைத்து வருதலே அமையும் சான்றாகும். 'வெஞ்சேனை' என்ற பழம்பாடம் 'வெள்ளம்' என்பதற்கு மோனை ஒத்து வந்தது அறிக. கம்ப ராமாயணத்தில் யாண்டும் மோனைத்தொடை பிழைத்து வாராமை காண்க.

(இப்பாட்டின் பொருள்) வள்ளல் ஆகிய இராமனும், எழுபது வெள்ளம் என்று கணக்கிடப்பட்ட (போரில்) கொடிய வானரப் படையோடும் விரைவுடன் இலங்கைக் கோட்டையின் வடக்கு வாயிலை அடைந்து முற்றுகைசெய்து, கள்ளத்தன்மை உடையவன் ஆகிய இராவணனைப் போர்க்குப் புறப்பட்டு வருதலைப் பார்த்து நின்றான். அவன் வருதலைக் காணான் ஆயினான். ஆகவே, விபீடணன் மேலான பொருளை உணர்ந்தவன் என்னக் கருதி, அவனுக்கு (மேல் உரைக்கும் பொருளைச்) சொல்வான் ஆயினான். எ. று.

வள்ளல் என்பது வரையாது கொடுப்போனுக்குப் பெயர். வள்ளல் என்னும் வகுப்பினர் மூவகையர். அவர் பெயரையும் இயல்பையும் நிகண்டு, சிறுபாணாற்றுப்படை முதலியவற்றுள் காண்க. அவருள் ஒருவரல்லாத இராமரை இங்கே வேறு அடைமொழியோடு கூட்டிச் சொல்லாமல், வள்ளல் என்றே குறித்தது, அவர்க்கெல்லாம் இல்லாத வள்ளற்றன்மை உடைமைபற்றிப் போலும். 'திருவளர் தாமரை' யென்னும் திருக்கோவையாரில், தாமரை முதலியவற்றிற்கு அடைகொடுத்துக் (கொங்கையாக உருவகம் செய்யப்பட்ட) கோங்க மலர்க்கு அடைகொடுத்தால் பிற உறுப்புகளோடு ஒப்பித்தவாறும் ஆதலின் அடைகொடுக்கக் கடவதன்று எனப் பேராசிரியர் உரை விரித்தது காண்க. இனி அவ்வளவு மிகவும் அருமையான வள்ளற்றன்மைதான் யாதோ? இப்போது யுத்த முனையில் நின்று இராவணனை வதம் செய்யும் நோக்கமே உடைய இராமருக்கு வள்ளற்றன்மையை ஏற்றிச் சொல்வது தகுமோ? என்னின், நன்று சொன்னாய். இராவணனை வதம் செய்வதனாலே இந்திரனுக்கு அவன் இழந்த உலகத்தை அளிக்கின்றார். விபீடணனுக்கு இலங்கையை அளிக்கின்றார். சீதாபிராட்டிக்கு உயிரை அளிக்கின்றார். பாதனுக்கும் உயிரை அளிக்கின்றார். முன்னமே விசுவாமித்திரருக்கு யாகப்பலனை அளித்தார். அகலிகைக்கு உருவமும் பதியும் அளித்தார். ஒரு வேதியனுக்குச் சீதா பிராட்டி புன்சிரிப்புக்கொள்ளப் பொருள் அளித்தார். பாதனுக்குப் பாதுகமும் அரசும் ஈந்தார். விராதன், கவந்தன், வாலி முதலியோர்க்கு மோட்சம் அளித்தார். சுக்ரீவனுக்குக் கிட்கிந்தை அளித்தார். பண்டைநாள் தேவர் உண்ண அமுதத்தையும் அளித்தார். இன்னும் அவர் அளித்தவை கணக்கில் அடங்கா. ஆகவே அப்பெருமானை வள்ளல் என்பதற்கு இழுக்கு என்னை? வள்ளல் ஈண்டு இரட்சகன் என்னும் வடமொழிப் பொருள் குறித்தது. 'கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ், களைகட்டதனோடு நேர்' என்றார் திருவள்ளுவர். ஆகையால் இராவண வதத்தினால் தேவர் முதலியோர் நன்மை அடைவதுபற்றி இராமரை வள்ளல் என்றார்.

மேலும் இவ்வாறு உரைப்பின் விரியும். இராவணனைக் கள்ளன் என்றார், பிராட்டியை மாயத்தால் கொண்டு வந்தது பற்றியும், வாசவன் திரு, புட்பக விமானம், இலங்கை முதலிய வற்றைக் கவர்ந்து கொண்டமைபற்றியும், கோட்டைக்குள் பதுங்கியிருத்தல் பற்றியும்.

'ஒள்ளியது உணர்ந்தோன்' என்புழி, ஒள்ளியது-நல்லது, செம்பொருள். இது ஓர் திசைச்சொல். சிந்தாமணி காந்தருவதத்தையார் இலம்பகத்தில் ஒள்ளியன்-நல்லவன், இது திசைச்சொல் என்று நச்சினார்க்கினியர் கூறியது காண்க. முக்கால நிகழ்ச்சிகளையும் பார்த்து, இப்போது இன்னது செய்யத்தக்கது என்னும் தெள்ளிவுணர்ச்சியுடையோன் விபீடணனே ஆதலால், அவனை 'ஒள்ளியது உணர்ந்தோன்' என்றார். இலட்சுமணனையும் சுக்ரீவனையும் 'தவிர்த்து விபீடணனுக்குச் சொல்லுதலை மேற்கொண்டார் என்றதனாலும் அவன் பேரறிவு விளங்கும். விபீடணன் பேரறிவுடைமையைப் பலவிடத்தும் கம்பர் எடுத்து வருணிப்பதனாலும் இதற்கு இதுவே பொருள் என்று துணிக.

'முழுதுணர் புலவனை முளரிக் கண்ணினான்' (இலங்கைக் கேள்வி) 'நல்லாறுடை வீடணன்' (அதிகாயன் வதை) 'அறிவினுக்கறிவு போல்வான் வீடணன் அலங்கற்றோளான்' (மீட்சிப் படலம்) 'மின்னையேர் மவுலிச் செங்கண் வீடணப்புலவர்—கோமான்' (விடைகொடுத்த படலம்) 'உம்பர் மந்திரிக்குமேலாம் ஒருமுழம் உயர்ந்த ஞானத்-தம்பியே சாற்றிப் போனான் என்பதும் சமையச் சொன்னான்' (இலங்கைகாண் படலம்) 'சேர்வுறு பாலின் வேலைச் சிறுதுளி தெளித்த வேனும்-நீரினை வேறு செய்யும் அன்னத்தின் நீரன் ஆனான்' (ஒற்றுக் கேள்விப்படலம்) 'இருவரை ஒருங்கு காணும் யோகியும் என்ன லானான்' (ஷை).

இவற்றில், விபீடணன் தேவர் மந்திரியாகிய பிருகற்பதியின் ஞானத்தைக் காட்டிலும் ஒரு முழம் உயர்ந்த ஞானத்தை உடையவன் என்றும், பாற்கடலில் சிறிது நீர் தெறித்து வீழ்ந்ததாயினும், நீரை வேறாக ஒதுக்கிப் பாலைக்கொள்ளும் அன்னம்

போலக் குற்றத்தை ஒதுக்கிக் குணத்தைக்கொள்பவன் என்றும், யோகியைப்போலத் திரிகால வுணர்ச்சியுள்ளவன் என்றும் புகழப்பட்டவாறு அறிக.

இவ்வாறன்றி, 'ஒள்ளியதை (இப்போது) உணர்ந்தேன்' என்று இராமர் கூறினர் என்றால், அவ்வாறு சொல்வதனுல் ஓர் பயனும் இல்லை; அவரது பேரறிவுக்கும் இழுக்காம் என்க.

'கணக்கிலாதான்' என்ற பாடம் பிழை என்பதை மேலே காட்டும் ஏதுக்களால் துணிக. இப்பாட்டில் நின்றான், காண்கிலாதான், உரைப்பதானுன் என மூன்று பயனிலைகள் வந்தன. அவை இரண்டும் முன்னமே வந்துள்ள வள்ளல் என்னும் எழுவாயைக்கொண்டு முடியும், 'உண்டான் தின்றான் ஓடினன் பாடினன் சாத்தன்' என்புழி வினைமுற்றுக்கள் பல அடுக்கிச் சாத்தன் என்னும் (ஒரு) எழுவாயைக்கொண்டு முடிந்தவாறு போல. இதற்குவிதி 'உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும், ஒரு தம் எச்சம் ஈறுற முடியும்' என்னும் சூத்திரம்.

அவ்வாறன்றி வள்ளல் நின்றான், கணக்கிலாதான் உரைப்பதானுன் என முடித்தால், 'ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க்கிளவி, தொழில் வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே' என்னும் தோல்காப்பியச் சூத்திரத்தில் குறிக்கப்பட்ட 'ஆசிரியன் வந்தான், பேரூர் கிழான் உண்டான், செயிற்றியன் சென்றான்' என்றாற் போலும் மரபு வழுவாம். (நன்னூற் சூத்திரம் 'ஒரு பொருண் மேற் பல பெயர்வரின் இறுதி' என்பது) கணக்கிலாதான் கணிதத்துக்கு எட்டாதவன் என்று முன்னர்ப் பெறப்பட்ட பொருள் பின்னர் வரும் 'நல்லதை உணர்ந்தேன்' என்பதனெடு முரண்படுகின்றது. நின்றவன் விபீடணனுக்கு உரைக்கலுற்றான் அதற்குக் காரணம் என்னவென்றால் விடை இல்லை. இராவணனை வரக்கண்டான் இல்லை. அந்தக் காரணத்தால் விபீடணனுக்கு வள்ளல் உரைப்பதானுன் எனப் பொருள் நிரம்புதலால் 'காண்கிலாதான்' என்ற பாடமே பிழையற்றது எனத் துணிக.

30. (ஷ செய்.) 'வள்ளலும்' என்பதில் உம்மை எச்சப்பொருளது என்றார். சாத்தனும் வந்தான் என்றவிடத்து முன்னே கொற்றனும் வந்தனன் என்னும் பொருள் உடைத்தாகுல் இறந்தது தழீஇய எச்சவும்மையாம். இனிக் கொற்றனும் வருவான் என்னும் பொருள் உடைத்தாகுல் எதிரது தழீஇய எச்சவும்மையாம். அவ்விரண்டினும் வள்ளலும் என்பது எவ்வகையது? 'வள்ளலும் எய்தினன்-சேனையோடும்' என்றபோது முன் எய்தினோர் யாவர்? பின் எய்துவோர் யாவர்? (எவருமிலர்) ஆகலின் உம்மை எச்சப்பொருளில் வந்ததன்று என மறுக்க.

அங்ஙனமாயின், இந்த உம்மைக்குப் பொருள்தான் யாதோவெனின், முன்னே கூறியவாற்றுல் சிறப்புப் பொருள் என்பது அறிக.

இனி இதனை 'இசைநிறை உம்மை' எனக் கொள்ளினும் பொருந்தும். இசைநிறை உம்மையெனத் தொல்காப்பியத்திலாவது நன்னூலிலாவது சொல்லப்படவில்லையே எனின், 'அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருளென' என்னும் புறனடைச் சூத்திரத்தால் கொள்ளப்படும் என்பது பேராசிரியர் உரையால் அறிக. 'அவளுந்தான், அவனுந்தான்,' (சிலப்பதி-காதை. 1.) 'திசையறிமீகானும் போன்ம்' 'பணிவளராவியும் போன்ம்' 'எடுத்தவன்பனும்' (பரிபாடல்) 'அறப்பயனும்' (நாலடி) என்புழி உம்மை இசைநிறையென்று அடியார்க்கு நல்லாரும் பரிமேலழகரும் பேராசிரியரும் குறித்தது காண்க.

(ஷ செய்.) 'கள்ளனை வரவு பார்த்து நின்றனன்' என்பதற்கு 'இராவணனுடைய வரவைப் பார்த்து நின்றான்' என்று பொருள் கூறிக் 'கள்ளனை' என்பதில் உள்ள இரண்டாம் வேற்றுமை உருபு ஆறும் வேற்றுமைப் பொருளில் வந்த உருபு மயக்கம் என்று குறிப்பித்தார். இவர்க்கு இரண்டாம் வேற்றுமைப் பொருள்பட உரைத்தல் குற்றமென்பது கருத்துப் போலும். 'முதற்சினைக் கிளவிக்கு அதுவென் வேற்றுமை-முதற்கண் வரினே சினைக்குஐ வருமே' 'முதல்முன் ஐவரின்

கண்ணென் வேற்றுமை-சினைமுன் வருதல் தெள்ளிது என்ப.'' என்னும் தொல்காப்பியச் சூத்திரவிதியால், 'யானையது கொம்பை அறுத்தான்' என வரினும், 'யானையைக் கொம்பின்கண் அறுத்தான்' என வரினும், 'யானையைக் கொம்பை யறுத்தான்' என வரினும் பொருள் வகையால் ஒக்கும் என்பது உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது.

நன்னூலாரும் 'முதலை ஐஉறின் சினையைக் கண்ணுறும், அது முதற்கு ஆயின் சினைக்கு ஐஆகும்' என்னும் சூத்திரத்தால் அவ்விலக்கணம் கூறினார்.

'யானையைக் கொம்பை அறுத்தான்' என யானையாகிய முதலும் கொம்பாகிய சினையும் இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்று அறுத்தான் என்னும் பயனிலையைக்கொண்டு முடிதல் தொல்காப்பியச் சூத்திரத்தில் 'தெள்ளிது' என்ற இலேசினால் முடிந்தது. நன்னூற் சூத்திரத்தில் 'ஆகும்' என்னும் இலேசினால் முடிக்கப்படும். ஆயினும் அதன் விருத்தியுரையாசிரியர் ஆகிய சங்கரநமச்சிவாயப்புலவர் 'யானையைக் காலை வெட்டினான்' என இரண்டிடத்திலும் ஐஉருபு வாராதென்று (நூலாசிரியர் பவணந்தியார்) அருத்தாபத்தியால் கூறினார் என்றும், வந்தால் செயப்படுபொருள்கள் இரண்டாய், முதலும் சினையும் ஒரு பொருட் பகுதிய அல்லவாம் என்றும், எங்கேனும் அப்படி வருமானால், 'யாதனுருபிற்கூறிற்றாயினும், பொருள்செல் மருங்கின்வேற்றுமை சாரும்' என்னும் சூத்திரவிதியால் 'யானையது காலை' என்றாவது, 'யானையைக் காலின்கண்' என்றாவது திரித்துக் கொள்ளல்வேண்டும் எனவும் கூறினார். அம்மட்டில் ஒழியாமல், 'அது முதற்கு ஆயின்' என்பதற்கு 'கண்' உருபு முதலை அடுத்து வந்தால் என இரட்டுறமொழிதலாற் பொருள் உரைத்து, 'யானையின்கண் காலை வெட்டினான்' என உலகவழக்கில் இல்லாத ஓர் உதாரணமும் காட்டினர். 'யானையின் காலை வெட்டினான்' என வேண்டாத உதாரணம் ஒன்றும் காட்டினர். இது யானையது காலை வெட்டினான் என்னும் பொருட்டே. 'முதலிவை சினை இவை

எனவேறு உளஇல-உரைப்போர் குறிப்பின் அற்றே பிண்டமும்' என்னும் அடுத்த சூத்திரத்துரையில் 'வேறுள இல' என்றமையால், 'யானையைக் காலை வெட்டினன்' என ஐஉருபு முதல்சினை இரண்டிடத்திலும் வாராமைக்கு ஏதுக் கூறினர் என்றும், யானையைக் குறித்தவழி யானை உண்டாய்க் கை கால் கோடு முதலியன வேறில்லையாய், கை கால் கோடு முதலியவற்றைக் குறித்தவழி அவை உண்டாய் யானை வேறில்லையாய் நிற்கும் ஒருபொருட் பகுதியவாம் ஆதலின் இவ்வாறு கூறப்பட்டதெனவும் கூறினர்.

இவர் கூறிய தருக்கவுரை மிகவும் வியப்பானது. ஆயினும் அது ஈண்டைக்குப் பொருத்தமுடையதன்று. ஐயுருபு முதல் சினை இரண்டிடத்திலும் வாராதென்பதே ஆசிரியர் கருத்தானல்; அதனைச் சூத்திரத்தில் எடுத்து ஓதாமல், அருத்தாபத்தியால் கொள்ளவைப்பான் ஏன்? தொல்காப்பியனர் மறந்துவிட்டார் என்ருலும், பவ்ணந்தியாரேனும் எடுத்தோதல் ஆகாதா? 'தெள்ளிதென்ப' என்பது முன்னர் ஓதியவாறன்றிப் பிறவாற்ருனும் வரும் என உணர்த்தவில்லையா? 'இம்மலை நெருப்பை உடையது' என்னும் மேற்கோள் 'புகை உடைமையால்' என்னும் ஏதுவால் சாதிக்கப்படும். அதுபோல 'முதல்சினை இரண்டன்பாலும் ஐஉருபு வாராது' என்னும் மேற்கோள் 'முதல் சினையென வேறுளஇல' என்னும் ஏதுவால் சாதிக்கப்பட்டு நிரம்புமா? நிரம்பாது. உண்மை நோக்கில், முதல்சினை இரண்டும் முடிக்கும் வினைக்குச் செயப்படுபொருளாய் ஐஉருபு 'யானையைக் காலை வெட்டினன்' என இரண்டிடத்தும் வருதல் முறைமையே, ஆயினும் முதல்சினை என்னும் வேறுபாடு அறிதற்கு, அவற்றுள் ஒன்றற்கு ஐஉருபு கொடுத்து, மற்றதற்குக் கண் உருபையேனும் அது உருபையேனும் கொடுக்க என்பதே, ஆசிரியர் கருத்தெனத் துணிக.

வெட்டுதல் வினைக்குச் செயப்படுபொருள் யானையோ காலோ என்னும் வினு எழுந்தால், யானைதான் கால்அன்று என விடை கூறல் ஆகாது. கால்தான் யானைஅன்று என விடைகூறலும் ஆகாது. ஆகவே இரண்டும் செயப்படுபொருளாதற் றன்மையில்

தீரா. ஆதலாலும் 'யானையைக்காலை வெட்டினான்' என வருதல் தவறன்றெனக்கொள்க. 'சினைநிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும்-வினைநிலை ஒக்கும்' என்னும் தொல்காப்பியச் சூத்திரமும் இப் பொருளையே வலியுறுத்தும்.

இதுவேயன்றி 'முதலிவை சினையிவையெனவே றுளவில' என ஏதுவைச் சூத்திரத்தில் எடுத்தோதிய பவணந்தியார், முதல் சினை இரண்டன்பாலும் ஐஉருபு வாராது என்ற மேற்கோளைச் சூத்திரத்தில் எடுத்தோதாது அருத்தாபத்தியாற் கூறினார் என்பதும் பொருந்தாது. ஆகையால் இவர் உரைத்தனவெல்லாம் போலியுரை யென்றொழிக.

இவர் உரை தம்முடைய ஆசிரியர் ஆகிய சாமிநாததேசிகர் இலக்கணக்கொத்தில் உரைத்துள்ளதற்கே மாறுதல் அறிக. அந்நூலில் 'கருத்துண்டாதல் கருத்தின்றாதல்' என்னும் சூத்திரத்தில், 'இருவகைப்பட்டு ஈருருபு இணைதல்' என்னும் விதிப்படி, 'ஆசிரியனை ஐயுற்ற பொருளை வினவினான்' 'பசுவைப் பாலைக் கறந்தான்' 'யானையைக் கோட்டைக் குறைத்தான்' என உதாரணம் காட்டிப், 'பசுவைப் பாலைக் கறந்தான்' என்பதைப் 'பசுவினது பாலைக் கறந்தான்' என்றும், 'யானையைக் கோட்டைக் குறைத்தான்' என்பதை யானையது கோட்டைக் குறைத்தான்' என்றும் கூறத்தகும் ஆயினும் 'ஆசிரியனைப் பொருளை வினவினான்' என்பது 'ஆசிரியனது பொருளை வினவினான்' எனக் கூறப்படாது என்றும் கூறினார்.

'முழுவெனத் திரண்ட திண்டோள் மூரிவெஞ் சிலையினானும்
அழலெனக் கனலும் வாட்கண் அவ்வளைத் தோளினாளும்
மழலையாழ் மருட்டும் தீஞ்சொல் மதலையை மயிலஞ்சாயல்
குழைமுக ஞானமென்னும் குமரியைப் புணர்க்க லுற்றார்.

(சிந்தாமணி நாமகள். 339.) இதன் உரையில் மதலையைக் குமரியைப் புணர்க்கலுற்றார் என்பது 'சாத்தனை நூலைக் கற்பிக்க லுற்றார்' என்றாற்போல நின்றது என்று நச்சினார்க்கினியர் கூறினார்.

'தேவியை ஆண்டகை சென்றுமெய் சார்ந்தான்' (சிந்தாமணி-நாமகள். செய்-199) என்புழி, தேவியை மெய்யை என்ற இரண்டு உருபும் 'தெள்ளிது' என்பதனால் முடியும் என்று, உரையில் நச்சினார்க்கினியர் கூறினார். 'தேவியினது மெய்யைச் சார்ந்தான்' என்றேனும் 'தேவியை மெய்யின்கட் சார்ந்தான்' என்றேனும் ஏன் முடிபு காட்டக்கூடாது? இதனை உற்று நோக்கில், 'தேவியை மெய்யைச் சார்ந்தான்' என்று சொல்லுதலே சிறப்புடைத்து என்பதும் 'தேவியை மெய்யின்கண் சார்ந்தான் என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமானது அன்று என்பதும் புலனாகும்.

செய்யுள் வழக்கிலே பெரும்பாலும் 'தேவியை மெய் சார்ந்தான்' என்புழிப்போல ஐ உருபு முதலிடத்து விரிந்தும் சினையிடத்துத் தொக்கும் நிற்கும். இவ்வழக்குத் திருச்சிற்றம்பலக் கோவையாரிலே பயின்று வரும். அதன் உரையில் பேராசிரியர் ஐ உருபையும் பொருளையும் திரிக்காமலே உரைத்துச் செல்வர்.

'தெவ்வரை மெய்யெரி காய்சிலை' (செய்-114) இதற்குப் 'பகைவரை மெய்யெரித்த காய்சிலை' என்று பொருள் கூறி 'மெய்யெரி என்பன ஒரு சொல்லாய்த் தெவ்வரை என்னும் இரண்டாவதற்கு முடிபாயின' என்றார்.

'அரிவையை நாணுதல் கண்ட' (ஷை செய்-121 துறை) என்புழி, நாணுதல் கண்ட என்பனவற்றை ஒரு சொல்லாக்கி (அரிவையை என்னும் இரண்டாவதை) முடிக்க என்றார்.

'அம்பலம் சீர் வழுத்தா' (ஷை செய் 337) என்புழி, சீர் வழுத்தா என்னும் சொற்கள் ஒரு சொன்னீரவாய் அம்பலத்தை என்னும் இரண்டாவதற்கு முடிபாயின என்றார். 'சிரம் அங்கு அயனைச் செற்றோன்' (ஷை செய். 371) என்பதும் அது. இதனால் சினைக்கண் ஐயுருபு விரிக்கப்படும் வழியும் முதற்கண்ணும் ஐஉருபு வருதல் பொருட் சிறப்புடையது என உணர்ந்து கொள்ளலாம். கம்பர் இராமாயனத்திலே பலவிடத்திலும் இவ்

விலக்கணச் சிறப்புறத் தொடுப்பார். 'வந்தெனைக் காம்பற்றிய வைகல்வாய்' (சூளாமணி-34) 'வேர்த்தானை உயிர்கொண்டு மீண்டானை வெரின்பண்டு பார்த்தானே' (சூர்ப்பநகை-103). 'செருமுயல்வானைத்-தாள் இரண்டையும் இரண்டு வெங்கணைகளால் தடிந்து' (கரன் வதை-134) 'சாம்பனை வதனம் நோக்கி வாலிசேய்' (மூலபலம்-45) 'ஓங்கும் முக்கணன் தேவியைத் தீர்த்துளது ஊடல்' (வருணனை வழிவேண்டு-16) 'ஒருவரைக் காம் ஒருவரைச்சிரம் மற்றங்கொருவர், குரைகழற் றுணை தோளிணைபிற மற்றுங்கொளலால், விரவலர்ப்பெரு வறுமையவாயின வெவ்வேறு, இரவுகற்றன போன்றன இலக்குவன் பகழி' (கும்பகருண-224.) 'சிலவரைக்கரஞ் சிலவரைச் செவி சிலர்நாசி, சிலவரைக்கழல் சிலவரைக் கண்கொளும் செயலான், நிலவரைத்தரு பொருள்வழித் தண்டமிழ் நிரப்பும், புலவர்சொற்றுறை புரிந்தவும் போன்றன சரங்கள்' (ஷை 225) 'ஊக்கித் தாங்கி விண்படர்வெனென் றுருத் தெழுவாளை, .................... மூக்கும் காதும் வெம்முரண் முலைக்கண்களும் முறையால் போக்கி'. (சூர்ப்பநகை-94.) பிறநூலாரும் இவ்வழுகுறத் தொடுத்தார் உளர். 'வெள்ளியங்கயிலை காவல்பூண்டருளும் வீரனை வார்கழல் பணிவாம்' (தணிகைப்புராணம்.) 'திருவினை மணம் புணர்ந்து' (கல்லாடம்-12.) 'கொழுந்தியரைத் துகில் உரியார்' (வில்லி பாரதம்.) 'பெருமானை அருணகிரிப் பெம்மானை அடிபணிந்து பிறவி தீர்ப்பாம்' (அருணசலபுராணம்.)

இனி, உலகவழக்கிலும், 'தலைவனை இயற்பழித்தல்' சோற்றைப் பதம் பார்த்தல்', 'கல்வியைக் கரைகண்டவன்', 'தேங்காயைப் பால் பிழிந்தான்', 'கன்னியைக் கற்பழித்தான்', 'அவனைப் பல்லை உடைத்தான்' என வருதல் காண்க.

இதுவரையிலும் கூறியதனுல், 'கள்ளனை வரவுநோக்கி' என்பதில் 'வரவுநோக்கி' என்பன ஒருசொல் நீர்மைப்பட்டுக் 'கள்ளனை' என்னும் செயப்படுபொருளுக்கு முடிபாயின என்பதும், 'கள்ளனது வரவை நோக்கி' என உருபுமயக்கம் கூறுதல் பழுதென்பதும் தொல்லாசிரியர் துணிபென உணர்க.

மேல்வரும் 'வாழியாய் நின்னை யன்று' என்னும் செய்யுளில் 'உந்தையை உயிர்பண்டுண்டான்' என்பதும் இவ்வாறே முடியுமாறு அறிக.

இனி அச்செய்யுளில் 'தேவியைப் பிரிவு சூழ்ந்தான்' என்பது முடியுமாறு யாதோ வென்றால், 'பிரிவு சூழ்ந்தான்' என்பன ஒருசொல் நீர்மையவாய், பிரிவித்தான் எனப் பொருள்பட்டுத் தேவியை என்னும் இரண்டாம் வேற்றுமைக்கு முடிபாயின என்க. 'தேசியைச் சிறையில் வைத்தான்' என்னும் செய்யுளில் 'தேவரை இடுக்கண் செய்தான்' என்புழியும் 'இடுக்கண் செய்தான்' என்பன ஒருசொல்லாய் இடுக்கட்படுத்தினான் எனப் பொருள்பட்டுத் தேவரை என்பதற்கு முடிபாயின. பிறவும் இப்படி வருவனவற்றைக் காண்க. இவ்வகையிலக்கணம் திருச்சிற்றம்பலக்கோவையார் உரையில் பேராசிரியர் நன்கு விளக்கினார். 'கருங்கண்ணனை அறியாமை நின்றோன்' (செய்-53) என்புழி அறியாமை நின்றோன் என்னும் சொற்கள் ஒருசொல் நீரவாய் ஒளித்தோன் என்னும்பொருள்பட்டு இரண்டாம் வேற்றுமைக்கு முடிபாயின எனவும், 'பூங்கணை வேளைப்பொடியாய் விழ விழித்தோன்' (செய்-179) என்புழிப் 'பொடியாய் விழ விழித்தோன்' என்னும் சொற்கள் ஒருசொல் நீரவாய், பொடியாக்கினான் என்னும் பொருளவாய், வேளை என்னும் இரண்டாம் வேற்றுமைக்கு முடிபாயின எனவும் உரைத்தார்.

பலசொற்கள் இயைந்து ஒருசொல் நீர்மையவாய் எழுவாய் முதலியவற்றுக்கு முடிபாய் வருதலைச் சேனாவரையரும் 'பெயர்நிலைக்கிளவி காலந்தோன்றா' 'அவைதாம் இ உ ஐ ஒ என்னும் இறுதி' என்னும் சூத்திரவுரைகளில் விளக்கினார்.

ஆகவே 'கள்ளனை' என்னும் இரண்டாம் வேற்றுமை நின்று 'வரவு நோக்கி' என்பதைக்கொண்டு முடிந்தவாறு தெளிக.

32. (செய்-1.) ஒள்ளியது தொழிற்பெயர் என்றார். தொழிற் பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் வேறுபாடு அறியார்போலும்.

33. (செய்-2.) தூதுவன் ஒருவன் தன்னை என்புழித் தன்னை என்பது சொல்லுருபு என்றார். ஐ என்பதே உருபாக நிற்கச் சொல்லுருபு வேண்டியது எற்றுக்கோ? தன்னை என்பதில் தன் என்பது சாரியை எனத்தெளிக. இது 'அன்னான் இன் அல்' என்னும் சூத்திரத்தில் 'இன்ன பிறவும்' என்றதனால் கொள்ளப்படும்.

34. 'நீதியும் அஃதே அறனும் அஃதே.' என்புழி ஏகாரம் பிரிநிலை என்றார். தேற்றப்பொருளுக்கும் பிரிநிலைப் பொருளுக்கும் வேற்றுமை அறியார் போலும்.

35. (செய்-2). 'கருணையினிலயமன்னான்' என்பதற்குக் கிருபை தங்கி வாழும் கோயிலை ஒத்தான் என்று உரைகூறினார். புத்தகக் குறிப்புரைகாரர் அருளுக்கு இருப்பிடம் ஆனவன் என்று உரைத்தார். அவர் 'அன்னான் என்னும் உவமச்சொல் பழுது ஆதலை நோக்கிலர். கருணையின் நிலயம் எனில் இவர் கூறியபொருள் ஒக்கும். நிலயம் அன்னான் என்பதனால் இராமருக்கு நிலயம் உவமை கூறியது என அறிக. நிலயம்-பூமி. 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை—இகழ்வார்ப் பொறுத்தல் தலை' என்னும் திருக்குறளின் கருத்தைப் பற்றியது என அறிக.

36. (செய்-3). 'அழகிற்று' என்பதில் இன் சாரியை து விகுதி என்று பிரித்துக்காட்டினார். று என்பதே விகுதியாக அமையும் என்பது உணர்ந்திலர்.

37. (செய்-3). குரக்கினம்-வலித்தல் விகாரம் என்றார். இதனாலும் செய்யுள் விகாரத்துக்கும் புணர்ச்சி விகாரத்துக்கும் வேறுபாடு அறியாமை விளக்கினார். இதன் முடிபு 'மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையில்' என்னும் சூத்திர விதியால் அமையும் என்க.

38. (செய்-3). கொற்றவர்க்கு உற்றது. உற்றது தொழிற்பெயர் என்றார். அது வினையாலணையும் பெயர் என்பது அறிந்திலர்.

39. (செய்-5),

'தேசியைச் சிறையில் வைத்தான் தேவரை இடுக்கண் செய்தான்
பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான் மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையின் அளவும் எல்லா வுலகையும் தானே ஆள்வான்
வாசவன் திருவும் கொண்டான் வழியலா வழிமேற் செல்வான்.

'வாழியாய் நின்னை அன்று வரம்பறுதுயரின் வைகச்
சூழ்விலா மாயஞ்செய்துன் தேவியைப் பிரிவு சூழ்ந்தான்
ஏழைபால் இரக்கநோக்கி ஒரு தனி இகல்மேற் சென்ற
ஊழிகாண்கிற்கும் வாணாள் உந்தையை உயிர்பண்டு உண்டான்'.

இவ்விடத்தில் 'தேசியைச் சிறையில் வைத்தான்' என்பதற்கு 'சீதையைச் சிறையில் வைத்தான்' என்று பொருள்கூறி, தேசு-அழகு. உதனை உடையவள் தேசி என்றார். குறிப்புரையாளர் எழுதியதும் அப்படியே. இவ்விருவர் உரையும் போலி யுரையே. 'தேசி என்றது இங்கே இந்திராணியே யாம். தேசு+இ=தேசி. 'வில்லி' என்புழிப்போல இகரம் ஆண்பாற் பெயர் விகுதி.

தேசு என்பது தேஜஸ் என்னும் வடமொழிச் சிதைவு. தேசு, காந்தி என்பன ஒரு பொருட் சொற்கள். ஒளி என்பது அப்பொருள் குறிக்கும் தமிழ்ச்சொல். ஆகவே தேசி என்பதற்கு ஒளியை உடையவன் என்பது பொருள். இந்திரன் ஒளியை உடையவன் ஆனதுபற்றித் தேசி எனப்பட்டான்.

ஒளி (காந்தி) என்பது புகழின் (கீர்த்தியின்) வேறு. இதனை 'அண்ணல் நீயே கீர்த்திமான் அம்புலிதானே வண்ணவுலகில் காந்திமான்' என்பதனால் அறிக. ஒளி என்பது இன்னது என்பதை

'உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி
கறங்குதெண்டிரை வையகம் காக்குமால்
இறங்குகண் இமையார் விழித்தே யிருந்து
அறங்கள்வெளவ அதன்புறம் காக்கலார்' என்னும் சிந்தாமணிச் செய்யுளால் அறிக.

'ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை' என்னும் குறள் உரையில் 'ஒளி-தாம் உளகாலத்து எல்லாராலும் நன்குமதிக்கப் படுதல்' என்றும் 'ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை' எனும் குறள் உரையில் 'ஒளி—தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை' என்றும் பரிமேலழகர் உரைத்து 'உண்ணுன் ஒளி நிருன்' என்னும் நாலடியாரை மேற்கோள் காட்டினர்.

'தேசிவன் சிறிது கொல்லோ'. (இரகுவம்சம்)
ஊசல் தொழில் இழக்கும் ஒப்புமயில் இழக்கும்
வாசம் சுனை இழக்கும் வள்ளலே—தேசு
பொழில் இழக்கும் நாளை எம் பூங்குழலி நீங்க
எழில் இழக்கும் அந்தோ இவண். (தண்டியலங்காரம்)

என்பனவற்றுள் தேசு என்னும் மொழிப் பொருளை அறிந்து கொள்க.

இனி, தேசு என்பதற்கு அது பொருளாயினும், இகரம் பெண்பால் விகுதியும் ஆதலின் ஒளியை உடையவள் சீதை என்று பொருள் கூறுவதனால் உண்டாகும் இழுக்கு என்னவென்றால், அது பெண்பாற் பெயர் என்றற்கு இழுக்கில்லை ஆயினும், பல காரணங்களாலும் தேசி என்பது இந்திரனையே குறிக்கும் என்பது திண்ணம்.

கம்பர் சீதாபிராட்டியாரைச் சுட்டிக்கூறும் இடத்தெல்லாம் தெய்வத்தன்மை, கற்பின் மேன்மை புலப்பட, 'கற்பினுக்கணி' என்றும், 'ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிர்தின் வந்த தேவியை' என்றும், 'மாதா அனையாளை' என்றும், வாயார வாழ்த்திக் கூறுவதன்றி, முன்னத்தின் (குறிப்பினால்) உணரும் சொல்லால் ஆண்பாலோ பெண்பாலோ என்று ஐயமுறும்படி, எவ்விடத்திலும் கூறியதில்லை. பிந்திய செய்யுளில் 'தேவியைப் பிரிவு சூழ்ந்தான்' என்று சீதாபிராட்டியைக் குறித்தவர் முந்திய செய்யுளிலும் தேவியைச் சிறையில் வைத்தான் எனத் தொடங்கின் இம்மயக்கத்திற்கு ஏதுவில்லையே. தேசியைச் சிறையில் வைத்தான்' என்பதனால் சீதாபிராட்டி சிறையில் வைக்கப்பட்டது குறிக்கப்பட்டதானால், அடுத்த பாட்டில் தேவியைப் பிரிவு

சூழ்ந்தான் என்றதனல் விசேடம் என்ன? சீதா பிராட்டியைப் பிரித்ததையும் சிறையிட்டதையும் கூறினர் என்றால் இரண்டையும் ஓரிடத்தில் தொடர்புற வைக்காமல் வேறு பொருள்களை இடையிட்டுவைத்து, வெவ்வேறு செய்யுள்களில் பிரித்து வைத்துக் கூறுவாரா? தேவியை என்பதன் முன் உன் என உரிமைச்சொல் கொடுத்து, 'உன் தேவியைப் பிரிவு சூழ்ந்தான்' என்று கூறியவர், அப்படியே 'உன் தேசியைச் சிறையில் இட்டான்' என்று ஏன் கூறவில்லை? இத்தடைகளுக்கு விடை இறுக்கலாகாமையால் 'தேசி' என்றது சீதையை அன்று எனத்துணிக.

'தேவியைப் பிரிவு சூழ்ந்தான்' என்பதில் தேவியைச் சிறை வைத்ததும் சொல்லாமலே அமையும். சோறு உண்டான் என்றவழி தண்ணீரும் குடித்தான் என்பது சொல்லவேண்டியதில்லை. உறங்கினன் என்றவழி படுத்தான் என்பது சொல்லவேண்டியதில்லை. சீதாபிராட்டியின் பிரிவால் இராமர்க்கு நேர்ந்த துன்பம் ஆற்றொணாததென்று இலட்சுமணர் அறிந்தவர் 'சிறையில் வைத்தான்' என்பதை வெளிப்படையாக இராமர் முன் சொன்னல் அது புண்ணில் நெருப்புப்பட்டாற்போலும் ஆகையால் 'தேவியைப் பிரிவு சூழ்ந்தான்' என்றது சொல்லி நிறுத்தினர்.

'தேவி' என்றதனல் எல்லாராலும் தொழப்படும் கற்பின் செல்வி என்பதையும், 'பிரிவு சூழ்ந்தான்' என்றதனல் இராவணன் பிராட்டியை அணுக முடியாமையும், நிலத்தோடு பெயர்த்துக்கொண்டு போனதையும் குறிப்பித்து இராமரைத் திடப்படுத்தினர்.

இனி, 'தேசி' என்ற சொல் இந்திரனைக் குறிப்பதற்கு ஆதாரங்கள் உள்ளனவோ என்றால் மிக உள என்க. 'இந்திரன் சிறையிருந்த வாயிலின் கடை எதிர்ந்தான்' (அனுமார் ஊர்தேடு படலம்.) 'இந்திரன் பிணிப்புண்ட நாள் ஒத்தது அவ்விலங்கை' (பிணிவீட்டு)

'சந்திரன் இரவி என்பவர்கள்தாம் அவன்
சிந்தனை வழிநிலை திரிவர் தேசுடை
இந்திரன் முதலிய அமரர் ஈண்டவன்
கந்கடு கோயிலின் காவ லாளரே. (சடாயு உயிர்நீத்த)

இவற்றால் இந்திரன் சிறையிடப்பட்டது ஒரு பெரிய நிகழ்ச்சி என்பதும் அது இராவணனுடைய தகாத செயல்களுள் ஒன்று என்பதும் குறிக்கப்படும். இறுதிச் செய்யுளில் 'தேசுடை இந்திரன்' என்று கம்பர் குறித்தமையால், தேசியைச் சிறையில் வைத்தான்' என்பதனால் அந்த இந்திரனையே குறித்தார் என்பது வெள்ளிடைமலை. இனி ஒளியால் சிறப்புடைய கண்கள் ஆயிரம் உடையவன் என்பதுபற்றி இந்திரன் தேசி எனப்பட்டான் எனினும் அமையும்.

அதுவன்றியும், 'தேசும் ஒளியும் திகழநோக்கி' எனவரும் பரிபாடலில் 'தேசு-செயற்கை அழகு' எனப் பரிமேலழகர் கூறுவர். அப்பொருளுக் கேற்பச் செயற்கை அழகு உடைமையால் இந்திரன் தேசி எனப்பட்டான் எனினும் பொருந்தும். செயற்கையழகு ஆயிரங்கண், நான் மருப்பையுடைய யானை, கற்பகத்தரு முதலாயினவற்றால் உண்டாயது.

இனி, 'தேசியைச் சிறையில் வைத்தான்' என்னும் தொடர் மொழியின் கிடக்கை முறையாலும் தேசி என்றது இந்திரனையே குறிக்கும் என்பது உணர்க. இந்திரன் பொதுவாகத் தேவர்களுக்கு அரசன் என்பதன்றி நால்வகை நிலங்களுள் ஒன்றாகிய மருதத்துக்குக் கடவுள். 'மருதநன்னிலத்துவேந்தன்' என்பது நிகண்டு. 'வேந்தன்மேய தீம்புனல் உலகமும்' என்பது தொல்காப்பியம். 'வானோக்கி வாழும் உலகெலாம்' என்றார் திருவள்ளுவர். அம்மழைக்கு அதிபதி இந்திரனே. 'மேகவாகனன்' 'வேள்விக்கு வேந்தன்' என்பன அவனுக்குச் சிறப்புப்பெயர்கள். அக்கடவுளைச் சிறையிட்டது எல்லாவற்றினும் பெரிய குற்றம் ஆதலால் அதனை முன் வைத்தார். தேவரைத் துன்பப்படுத்தியதை அதன் பின் வைத்தார். அதன்பின் பூசுரார்க்குத் துன்பம் விளைத்ததை வைத்தார். அதன்பின் நிலவுலகத்து உயிர்களைக் கொன்று தின்றதை வைத்தார். இந்த நான்கு வகையாரும் இராமருக்கு அன்னியர். இவரை முதற்பாட்டில் வரிசைப்படக் கூறி, 'அடுத்தபாட்டில்' இராமருக்கே அவன் இழைத்த தீங்கை வைத்தார். ஈற்றில் தன் தந்தையாகிய சடாயுவைக் கொன்றதை

வைத்தார். அடுத்தபாட்டில் விபீடணனுக்கு அபயம் அளித்ததை வைத்தார். இது 'முறையின் வைப்பு' என்னும் அழகென அறிக.

இராமர் 'ஐவகைமரபின் அரசர்' வகுப்பினர். (க்ஷத்திரியர்). ஐவகை இலக்கணமாவன ஓதல் வேட்டல் ஈதல் காத்தல் தண்டம் என்பன. காத்தல் தண்டம் என்பன முறையே சிட்ட பரிபாலனம் துட்டநிக்கிரகம் எனப்படும். அதுவன்றியும், அவர் இல்லறத்தர் (கிரகத்தர்). ஆதலால் இந்திரனையும் தேவரையும் பூசுரரையும் உலகத்து உயிர்களையும் காத்தல் கடன் என்பதை முன்னே கூறிப், பின்னே மனைவியைக் காத்தல் கடமை என்பதும் கூறி, அதன் பின் தந்தையைக் கொன்றதைக் கூறியது, பரசுராமர் போல் துறவுநிலையுடையார்க்கும் தந்தையைக் கொன்றாரைக் கொன்றல்லது கடமை தீராது என்பதைக் குறிப்பித்தற்கெனக் கொள்க. எல்லாவற்றிற்கும் இறுதியாக 'நீ வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தூயவன்' ஆகிய தசரதனுடைய மைந்தன். தந்தை சொல்லைக் காத்தற்குக் காடாள வந்தாய், நீ விபீடணனுக்குச் சொன்ன சொல்லைக் காத்தல் தலையான கடன் என்பதைக் குறிப்பித்தார்.

இனி, தேசி என்றதனால் ஒளியுடைய சூரியனையும் சந்திரனையும் குறித்தார் எனினும் பொருந்தும். அதற்கு மேற்கோள் 'கோள் இரண்டையும் கொடுஞ்சிறை வைத்த அக்குமரன்-மூளும் வெஞ்சினத்து இந்திரசிக்கென மொழிவார்.' (இலங்கை கேள்வி.)

இனி, கிரகங்கள் எல்லாவற்றையும் இராவணன் சிறையிட்டது பற்றித் தேசி என்றது கிரகங்களைப் பொதுப்படக் குறித்தது என்றாலும் பொருந்தும். இதற்கு மேற்கோள், 'நாளெலாம் புடைதயங்க நாமநீ ரிலங்கையில் தான்வாரியிட்ட-கோளெலாம் கிடந்தநெடுஞ் சிறையன்ன நிறையாரம் குலவமன்னோ.' (மாரீசன் வதை) 'வாளுடைத் தடக்கையன் வாரி வைத்தவெங்-கோளுடைச் சிறையினன் குணங்கள் மேன்மையான்.' (சடாயுஉயிர் நீத்த.) 'கோளொத்த சிறை வைத்தாண்ட கொற்றவற்கு'. எவ்விதத்திலும், தேசி என்றதற்குச் சீதை என்று பொருள் செய்தல் பொருந்தாதென்க.

இனி, 'ஆசையி னளவும் எல்லா வுலகமும் தானே ஆள்வான்' என்புழி 'ஆசையின் அளவும்' என்பதற்குத் 'திசையின் எல்லை வரையிலும்' என்று பொருள் கூறினர். "எல்லாவுலகமும் ஆள்வான்" என்றாலே அமையும். 'திசையின் எல்லைவரையிலும்' என்பது நின்று பயனின்மை என்னும் குற்றத்தின்பாற்படுமென்க.

'ஆசையினளவும்' என்பதற்கு அவனது அவா (விருப்பம்) எவ்வளவு தூரம் எட்டுமோ அவ்வளவு தூரத்துள்ள (உலகம் எல்லாவற்றையும்-கொண்டான்) எனப் பொருள் கூறுக. 'அம் மன்னர் சேனை தமதாசைபோல் ஆயிற்றால்' (கார்முக—). 'ஆசைக்கோரளவில்லை' (தாயுமானார்).

40. (செய்-11). பெறுதல் நன்றோ—சோர்தல் நன்றோ, என்புழி ஒகாரம் ஐயப்பொருளது என்றார். ஈண்டு பத்தோ பதினொன்றோ என்றாற்போல ஐயப்படுவது ஒன்றும் இன்மையின் அது பொருந்தாது. நன்றோ என வினவுதல் கருத்தாகலின் ஒகாரம் வினாப்பொருளில் வந்ததென்றே கொள்க.

51. (செய்-11). துணிகென—துணிக+என—நிலைமொழி யீற்று உயிர்மெய் கெட்டது என்றார். இது தொகுத்தல் என்னும் செய்யுள் விகாரம். இதனாலும் செய்யுள் விகாரத்துக்கும் புணர்ச்சி விகாரத்துக்கும் வேறுபாடு அறியாமை விளக்கினர்.

42. (செய்-19).

நெடுந்தகை விடுத்த தூதன் இவையிவை நிரம்ப எண்ணிக்
கடுங்கனல் விடமும் கூற்றும் கலந்துகால் காமும் காட்டி
விடுஞ்சுடர் மகுட மின்ன விரிகடல் இருந்த தென்னக்
கொடுந்தொழில் மடங்கல் அன்னான் எதிர்சென்று குறுகிநின்றான்.

இதன் உரையில்—தூதன் ஆகிய அங்கதன், கொடிய நெருப்பானது விஷத்தோடும் யமனோடும் கூடியதாய், கால்களையும் கைகளையும் தனக்கு வடிவமாகக் காட்டி, ஒளியை விடுகின்ற கிரீடம் பிரகாசிக்க, எங்கும் பரந்த சமுத்திரம் கிடந்தது என்று சொல்லும் படியாக, கொடுந்தொழிலையுடைய சிங்கத்தை ஒத்தவனாகிய இராவணனுக்கு முன்னே சென்று, சமீபத்தில் வந்து நின்றான்;

என்று உரைத்து விசேடவுரையில், வடவாமுகாக்கினியானது விஷத்தோடுகூடிக் கால்களே உருவமாக வந்தன என்று சொல்லும் படியாகவும், அவ்வக்கினி யமனோடு கூடிக் கைகளே உருவமாக வந்தன என்று சொல்லும்படியாகவும், வடிவங்களைக்காட்டி, கிரீடம் பிரகாசிக்க, கடல்—கிடந்தது என்று சொல்லும்படியாக, அங்கதன், சிங்கத்தை ஒத்தவன் ஆன இராவணன் முன்னே நின்றான் என்றும், விடம் கால் காட்ட, கூற்று கைகாட்டிற்று எனவும், இதனால் அங்கதன் காலாலும் கையாலும் பகைவரை அழிக்கவல்லவன் என்பது குறிக்கப்பட்டது எனவும், கடல் அங்கதனுக்கு உவமையென்றும், கூறினர்.

அலங்கார நூலிலும் சொல் இலக்கணத்திலும் தேர்ச்சி யில்லாதவர் கம்பராமாயணப் பகுதிக்கு உரை யென்று எழுதப் புகுந்தது கொங்கை இரண்டும் இல்லாதவள் பெண் அழகைக் காமுற்றது போலாம்.

(Text book) குறிப்புரையும் போலி உரையே. 'கால்காமும் காட்டி' என்பது அங்கதன் வருணனை என்றால், அனுமார் வருணனையிற் போல வாலை வருணிக்காதது என்னையோ. கடல் அங்கதனுக்கு உவமை என்றவ: இன்னது பற்றி உவமை என்று விளக்கினரிலர். நிறம்பற்றி உவமை என்றால், அங்கதனுக்குப் பலவிடத்திலும் சந்திரனை உவமையாகக் கம்பர் கூறியிருத்தலால் அது பொருந்ாதென மறுக்க. கடல் இருந்ததுபோல நின்றான் என்றால் உவமையில் வரும் இருத்தல் ஆகிய தொழில் பொரு ளில் வரும் நிற்றல் என்னும் தொழிலோடு பொருந்தாமை அறிக. கடல் சிங்கத்தின் முன்னே நின்றதென்றலும் பொருந்தாமை அறிக.

அற்றேல், இதற்குப் பொருள் யாதோவெனின் கூறுவாம். நெடுந்தகை-பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. நெடுமை-உயர்வு, 'நெடியோன்' 'நெடுஞ்செழியன்' என்புழிப்போல. உயர்ந்த குணத்தை யுடையவன் ஆகிய இராமன். இனி, தகை-அழகு எனவும் பொருள்படும். (ஐங்குறு நூறு) ஆதலால், மிக்க அழகை உடையவன் இராமன் என்றவாறுமாம்.

இராமனால் போகவிடப்பட்ட தூதன் ஆகிய அங்கதன், இத்தகைய பொருள்களை யோசனைபண்ணி, விரிந்தகடல் ஒன்று, கடுமையான அக்கினியோடும் நஞ்சோடும், யமனோடும் கலந்துகொண்டு, கால்களையும் கைகளையும் காட்டிக்கொண்டு, ஒளியை விடுகின்ற கிரீடங்கள் மின்னும்படியாக, இருந்தாற்போலச் சிம்மாசனத்தில் வீற்றிருந்த இராவணன் முன்பாகப் போய் அணுகி (சமீபத்தில்) நின்றான். எ-று. கடுமையை விடத்தோடும் கூற்றோடும் கூட்டுக.

'கடுங்கனல் விடமுங் கூற்றும் கலந்து, கால் காமும் காட்டி, விடுஞ்சுடர் மகுடம் மின்ன, விரிகடல் இருந்த தென்னக் கொடுந்தொழில் மடங்கல் அன்னான்' இவ்வளவும் இராவணன் வருணனை எனக் கொள்க. தூதன், எண்ணி, மடங்கலன்னான் எதிர்சென்று, குறுகி, நின்றான் என வினை முடிவு செய்க. 'இருந்ததென்ன' என்னும் உவமை வினைக்கு ஏற்பப் பொருளினும் 'இருந்த' என ஒரு சொல் அவாய்நிலை என்னும் இலக்கணத்தால் வருவித்து, கலந்து, காட்டி, என்னும் செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சங்களையும், மின்ன என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சத்தையும் இருந்ததென்ன என்பதனுள் இருத்தல் வினையோடு முடித்து, இருந்ததென்ன என்பதனை வருவிக்கப்பட்ட இருந்த என்னும் பெயரெச்சத்தோடு முடிக்க. இருந்த என்பது மடங்கலன்னான் என்பதைக் கொண்டு முடியும். கொடுந்தொழில் என்பது இடைப்பிறவரல். இருத்தல்—வீற்றிருத்தல். கூற்று-யமன். மடங்கலும் யமன் (நிகண்டு). ஒரு பொருள்மேல் இரண்டிடத்தில் யமன் என்று வாலாகாது ஆகையால் பின்னே வந்த 'மடங்கல் அன்னான்' என்பதற்கு அதற்குரிய அர்த்தத்தைப் பண்ணாமல், இராவணன் என்ற மட்டில் பொருள் கொள்க. இது எதுபோலவெனின், 'அடியளந்தான் தாயது' (குறள்) என்னுமிடத்தில் 'அடியளந்தான்' என்பதற்கு அதற்குரிய அர்த்தத்தைப் பண்ணாமல் திருமால் என்ற மட்டில் பொருள் கொண்டாற்போல என்க. இவ்வாறு வருவதனை 'வாளா பெயராய் நின்றது' என இலக்கணம் குறிப்பர். 'வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன்' (குறள்), 'ஒள்வாள்—கறையடி யானைக்கல்லது—உறைகழிப்பறியா வேலோன்

ஊரே.' செழுந்தாமரையன்ன வாட்கண்' 'சத்தாம் மெய்.' (சிவ போதம். 6) 'உணர்விலா அசித்து' (சிவ. சித்தி. 2, 3) என்பதும் அது. இதற்கு இலக்கணவிதி 'பெயர்நிலைக் கிளவியின் ஆகுநவும்' என்னும் தொல்காப்பியச் சூத்திரம். அச்சூத்திரத் துக்கு நச்சினார்க்கினியர் எழுதிய விருத்தியுரையும் பார்க்க. இவ் வாறல்லாமல் புத்தகக் குறிப்புரைகாரர் எழுதியபடி மடங்கல் அன் னான் என்பதற்குச் சிங்கத்தை ஒத்தவனாகிய இராவணன் என்று பொருள்கொண்டால், முன்னே இராவணனைப் பெரிய பொரு ளாகிய கடலோடு உவமித்து அடுத்தபடி சிறியபொருளாகிய சிங்கத்தோடு உவமித்தல் பொருந்தாமை அறிக. 'கடுங்கனல் விடமும் கூற்றும் கலந்து' என்பதில் கடுங்கனல் என்பது வட வைத்தீ. அது இராவணன் தலையிற் சிவந்த மயிருக்கு உவ மானம். விடம் என்பது ஆலகாலம். அது அவன் நிறத்துக்கு உவமானம். கூற்று (யமன்) தன் பெயர் சொல்லக்கேட்ட மாத்திரையிலே நெடுந்தூரத்திலே உள்ளவரை நடுங்கச்செய்யும் நிலைபற்றியும் எதிர்ந்தாரை அழிக்கும் ஆற்றல் பற்றியும் யமன் இராவணனுக்கு உவமானம். ஆகவே கனல், விடம், கூற்று என்னும் உவமானச் சொற்களால் மேற்கண்டபடி உவமேயங்கள் இலக்கணையாகக் கூறப்பட்டன. இது உருவக உயர்வுநவிற்சி யணி. வடநூலார் அதிசயோக்தி அலங்காரம் என்பர்.

பத்துத் தலையும் இருபது கையும் பருத்து விரிந்த உடலும் உடையவன் ஆனதுபற்றி, இராவணனுக்கு விரிகடலை உவமை கூறினார். என்றாலும், கடலுக்கோ கையும் காலும் இல்லை. கையும் காலும் உடையதாய் மகுடமும் சூடி, ஒரு கடல் இருந் தாற்போல் வீற்றிருந்த இராவணன் என்றார். இது இல்பொரு ளுவமையணி. வடநூலார் அபூதஉவமை என்பர்.

இனி வடவைத்தீ கண்ணுக்கு உவமையாகக் கூறப்பட்டது என்றுரைப்பாரும் விடம் கண்ணுக்கு உவமையாகக் கூறப்பட்டது என்பாரும் உளர். அவை மேற்கூறியவாறு உவமையாய் வரு தலைப் பின்னே எடுத்துக்காட்டும் செய்யுள்களில் காண்க.

'பெருவரை இரண்டொடும் பிறந்த நஞ்சொடும்
உருமுறழ் முழக்கொடும் ஊழித் தீயொடும்
இருபிறை செறிந்தெழு கடல் உண்டாம் எனின்
வெருவரு தோற்றத்தள் மேனிமானுமே.' (தாடகை வருணனை—கம்பர்.) 'பாற்பெருங்கடற் பன்மணிப்பஃறிரைப் பாப்புடைப் படர்வேலை—மாற்பெருங் கடல்வதிந்ததே அனையதோர் வனப்பினன் துயில்வானை' இது இராவணன் வருணனை (ஊர் தேடு படலம்.)

'புண்ணும் செய்தது முதுகென்ப புறங்கொடுத்தோடி
உண்ணும் செய்கையில் தசமுகக்கூற்றம் தன்னுயிர்மேல்
நண்ணும் செய்கைய தென்க்கொடு நாடொறுந் தன்னுள்
எண்ணும் செய்கையன் அந்தகன் தன்பதம் இழந்தான்'.

இதுவும் இராவண வருணனை. (இலங்கை கேள்வி.) 'கடல்கிடந்தது நின்ற தன்மேற் கதழ்-வடகடுங்கனல்போல் மயிர்ப் பங்கியான்' இது கும்பகருணன் வருணனை. 'மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்' (தாடகை).

'துன்று செம்மயிர்ச் சுடர்நெடுங் கற்றைகள் சுற்றி
நின்று திக்குற நிரல்படக் கதிர்க்குழாம் நிமிர
ஒன்று சீற்றத்தின் உயிர்ப்பெனும் பெரும்புகை உயிர்ப்பத்
தென்றிசைக்கும் ஓர் வடவனல் திருத்தியதென்ன'.

(பிணிவீட்டு—40). 'அழலுரு குஞ்சியர்' (கரன்வதை—43). 'கூழைபுறத்து விரிந்ததோர் கொட்பால்-ஊழிநெருப்பின் உருத்தனை ஒப்பாள்' (அயோமுகி-45). 'ஆலகாலம் திரண்டன்ன ஆக்கையர்' (கரன்வதை-11.) 'ஆலமும் வெளிதெனு நிறத்தர் ஆற்றலால்—காலனும் காலனென்று அயிர்க்கும் காட்சியர்' (ஷ-42.) 'செஞ்சுடர்ச் செறிமயிர்ச்சுருள் செறிந்த சென்னியன்-நஞ்சுதட்டுருவு பெற்றிடை நடந்ததென' (விராதன்-7). 'ஆலாலமதெனவே வரும் அசமாமுகி என்பாள்' (கந்த அசமுகி-12). 'ஆலாலத்தின் உருவாமென ஆங்குற்றனள் அன்றே' (ஷ-12). 'நஞ்சுதொக்கெனப்புரை நயனத்தார்களும்' (கரன்-45). தருமன் தண்ணளியால் தனதீகையால்-வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே' (சிந்தாமணி).

இனி, இவ்வகையான வருணனை கந்தபுராணத்தில் சிறிது வேற்றுபாட்டுடன் காணப்படுகின்றது. சூரபத்மன் சிம்மாசனத்தில் வீற்றிருந்ததை வருணித்த கச்சியப்பர் 'உலகத்தை ஒருங்கே அழிக்கும் ஆற்றலையுடைய வடவாமுகாக்கினியும் ஆலகாலமும் அழியாத நெறியைப்பெற்று யமனோடும் சேர்ந்து ஒரு உருவெடுத்து வந்து இருந்தாற்போல வீற்றிருந்தான் சூரபத்மன்' என்று கூறித் தாரகனையும் சிங்கமுகனையும் வருணித்தவர் அவர்கள் கருங்கடல் போலவும் பாற்கடல் போலவும் சூரபத்மன் பக்கத்தில் வீற்றிருந்தார்கள் என்று கூறினர். ஆகவே கந்தபுராண வருணனையும் கம்பர் வருணனையும் பெரும்பாலும் ஒத்திருப்பது காண்க. அதனை,

'ஆனதோர் மன்றத் தரியணை மிசையே ஆயிரகோடி அண்டத்தின்
மேனிமிர் வடவை அங்கியும் விடமு மிசைந்தழி யாநெறி மேவித்
தானவர் பரவக் கூற்றெலாம் ஒன்றாய்த் தணப்பில்பே ரணிகலம் [தயங்க
வானிமிர்ந் துற்ற லென்ன வெஞ்சூர மன்னவர் மன்னன் வீற் [றிருந்தான்'.
(சூரன் அரசிருக்கை—8).

'காருறுபடிவத் துவரிகள் அனைத்தும் கண்ணகன் பாற்கடல் முழுதும்
ஈருருவெய்தி எழுந்துமேலோங்கி யிருந்தென வைகலும் செலும்அத்
தாரகவிறலோன் பலைறலைச் சீயத் தலைமையான் சார்ந்தயல் இருப்ப
ஆரழல்உருவப் பண்ணவ ரேபோல் அமைச்சரும் குமாரும் அமர'

என்னும் செய்யுள்களால் அறிக. அன்றியும்,

அத்தியின் அரசு பேர ஆலமும் தெரிக்கில் எங்க
மெய்த்திறல் வாகை வன்னி மெலிவுற வீரை யாவும்
தத்தம திருப்பை நீங்கத் தாதவிழ் நீபத் தாரோன்
உய்த்திடு தனிவேல் முன்னர் ஒருதனி மாவாய் நின்றான்

(சூரபத்மன் வதை) என்னும் செய்யுட் பொருளும் அதனை வலியுறுத்தல் காண்க.

43. (செய்-20). 'இன்றிவண் வந்த நீயார்' என்புழி யார் என்பது உயர்திணை என்றார். உயர்திணையில் பெயர்ச்சொல்லோ வினைக்குறிப்புச் சொல்லோ இன்னதென்று குறித்தாரிலர். இவர்

யார் என்னும் சொல்லின் இலக்கணமே அறியார்போலும். இங்கே நீ என்பது எழுவாயும் யார் என்பது பயனிலையும் ஆக வந்துள்ளன. இவர் கருத்துப்படி யார் என்பது உயர்திணை யானால் நீ என்பதும் உயர்திணையாதல் வேண்டும். இல்லா விட்டால் 'திணையே பாலிடம்பொழுது வினவிறை மரபாம் எழும் மயங்கின் ஆம் வழுவே' என்னும் சூத்திரத்தின்படி 'திணைவழு' வாம். நீ என்பது முன்னிலைப்பெயர். அது 'தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும் எல்லாம் தாம்தான் இன்னன பொதுப் பெயர்' என்னும் சூத்திரத்தின்படி இருதிணைக்கும் பொதுவான பெயர். உயர்திணைப்பெயர் எனலாகாது. ஒரு மனிதன் முன்னிலையாக நீ என்று சொல்லுமிடத்து உயர்திணை என்றலும் ஒரு பறவையை நீ என்று சொல்லுமிடத்து அஃறிணை என்றலும் இலக்கணம் தெரியாதார் கூற்று.

இனி நீ என்பது திணைப்பொதுப்பெயராகவே கொள்க. 'யாரென் வினவினைக் குறிப்புயர் முப்பால்' என்னும் சூத்திரத் தின்படி 'யார்' என்பது உயர்திணைதானே என்றால், அது அச் சூத்திரத்தின் பொருள் அறியாது கூறியதாகும். அச் சூத்திர வுரையில் 'நான் யார்' 'வண்டு யார்' எனத் திணைப்பொதுவிலும் அஃறிணையிலும் வருவது 'புதியன புகுதலால்' கொள்ளப்பட்டது காண்க. இலக்கணக்கொத்து நூலார், 'வேறில்லை உண்டு யார் வேண்டும் தகும் படும், வினைபெயர் எச்சம் வியங்கோள் பத்தும், திணைபால் இடமெலாம் செல்லும் என்ப' என்று சூத்திரம் செய் தார். ஆகவே 'யார்' என்பது திணைப்பொதுக் குறிப்பு வினை முற்று என அறிக.

(செய்-20). 'இன்றிவண் வந்த நீ யார் எய்திய கருமம் என்னை-கொன்று இவர் தின்னு முன்னம் கூறுதி தெரிய' என்று அங்கதனுக்கு இராவணன் சொன்னான் என்பது, கந்தபுராணத்தில் 'யார் நீ, ஒன்றொரு தமியன் போந்தாய் உயிர்க்கு நண்பில்லாய் நின்னைக்-கொன்றிடு முன்நீ வந்த செயல்முறை கூறுக' என்று வீரவாகுவிடம் வீரசிங்கன் சொன்னான் எனவருவதற்கு ஒற்றுமை யுள்ளதாயிருத்தல் காண்க.

44. (செய்-25).

'உந்தை என் துணைவன் அன்றே ஓங்கறம்சான்றம் உண்டால்
நிந்தனை இதன்மேல் உண்டே? நீ அவன் தூதன் ஆதல்
தந்தனன் நினக்கு யானே வானரத் தலைமை தாழா
வந்தனை நன்று செய்தாய் என்னுடை மைந்த என்றான்.

இப்பாட்டிற்கும் இவர் எழுதிய உரை போலி உரையே. இலக்கணக் குறிப்புக்களும் பொருந்தாதனவே. (Text book) குறிப்புரையும் அதுவே.

இப்பாட்டு இராவணன் அங்கதனுக்கு எடுத்துக் கூறியதைத் தெரிவிப்பது. இதில் இராவணன் அங்கதனை 'என்னுடை மைந்தனே' என விளித்து 'உன் தந்தையாகிய வாலி எனக்குத் துணைவன். இது உண்மையே; சந்தேகப்படவேண்டா. ஓங்குதல் உற்ற தருமமே அதற்குச் சாட்சியாக உள்ளது.........' என்று கூறினன். இதில் 'துணைவன்' என்பதற்குத் 'தோழன்' என்றும், தோழன் புதல்வன் ஆனமைபற்றி 'என்னுடைமைந்த' என்று கூறினன் என்றும் உரைத்தார். அறம் சாட்சியாக உள்ளது என்றதன் காரணம் இன்னதென்று புலப்படக் கூறினரிலர், இவர்க்கு இதில் அடங்கியிருக்கும் வரலாறு (allusion) இன்னதென்று தெரியாமையால். துணைவன் என்பதற்குத் தோழன் என்று பொருந்தாவுரை கூறியதற்கும் அதுவே காரணம். 'துணைவன்' என்பதற்கு இங்கே 'உடன் பிறந்தான்' (சகோதரன்) என்பது பொருள். தோழன் (சிநேகன்) என்பது அன்று. இராவணன் திக்குவென்றி செய்துவருங் காலத்தில் வாலியை எதிர்த்து அவனால் வாலில் கட்டப்பட்டுக்கிடந்து பின்னர் கிட்கிந்தையில் கட்டு விடுக்கப்பட்டான். அப்போது இராவணன் வேண்டுகோளின்படி நட்புரிமைச் சூளுறவு (Treaty) நடந்தது. தரும சாத்திரத்தின்படி அக்கினியை வளர்த்து வாலியும் இராவண னும் அதுமுதல் சகோதரர்கள்; ஒருவனுக்கு நேர்ந்த சுகதுக்கம் மற்றவனுக்கும் ஒத்ததே; மைந்தர், நாடு முதலியவற்றின் உரிமையும் இருவர்க்கும் ஒத்ததே என உடன்பட்டு அக்கினி சாட்சியாக நட்புரிமை செய்துகொண்டார்கள். இந்த வரலாற்றை வான்மீகத்தில் உத்தர காண்டத்திற் காண்க.

ஆகவே, துணைவன் என்பது சகோதரன் என்னும் பொருளில் வந்தமை அறிக. இதனை இன்னும் 'இன்துணைவன் இராகவனுக்கு இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்' (கம்பர்) 'மேனாள்நம் உரிமைஅறக் கவர்ந்தபெருந் துணைவன் உணைவெருத வண்ணம்' 'ஈனமிலா வகைவந்தார் நந்துணைவரெனச் சிறிதும் இரங்கான் மைந்த' (வில்லிபாரதம்) என வருவனவற்றானும் துணிக. மேலே 'என்னுடைமைந்த' என விளித்ததும் அவ்வுரிமைபற்றியெனத் தெளிக.

தருமநூல் வழக்கின்படி வளர்க்கப்பட்ட அக்கினி சாட்சியாக உள்ளது என்று சொல்ல வேண்டியது உபசாரவழக்கால் தருமம் சாட்சியாக உள்ளது என்று சொல்லப்பட்டது.

45. (செய்-25) 'உந்தை என் துணைவன் அன்றே' என்புழி அன்றே' என்பதற்கு 'அல்லவோ' எனப் பதவுரை கூறி, அதனை அன்று+ஏ எனப்பிரித்து ஏகாரம் வினா என்றார். குறிப்புரைகாரர் கொள்கையும் அதுவேபோலும். ஆகவே, இருவரும் அன்று என்பதைக் குறிப்பு வினைமுற்றாகக் கொண்டுரைத்தார். உந்தை என்னும் எழுவாய் உயர்திணை ஆண்பாற்பெயர் ஆகலின், துணைவன் அல்லனோ என அத்திணைபாற்கேற்ற குறிப்பு வினைமுற்றைக்கொண்டு முடிவதன்றி, துணைவன் அன்றே என அஃறிணை ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்றைக்கொண்டு முடியுமாயின், திணை வழுவாதல் அறிக.

'உந்தை' என்பது 'துணைவன்' என்னும் பெயர்ப்பயனிலை கொண்டு முடிந்தது. 'அன்றே' என்பது குறிப்பாற் பொருளை உணர்த்தும் இடைச்சொல். அதனுள் வினைக்குறிப்பும் இல்லை. வினாப்பொருளைத் தருவதோர் ஏகாரமும் இல்லை. இதற்காகத் தொல்காப்பியத்தில் தனிச் சூத்திரம் ஒன்று உள்ளது.

'நன்றீற்றேயும் அன்றீற்றேயும்
அந்தீற்றோவும் அன்னீற்றோவும்
அன்னபிறவும் குறிப்பொடுகொள்ளும்' என்பது. இதனால் நன்றே என்பதும் அன்றே என்பதும் அந்தோ என்பதும் அன்னோ என்பதும் குறிப்பாற் பொருளையுணர்த்தும் என அறிக.

அன்றே என்பது தேற்றப்பொருள் குறித்துவரும் என்றார் சேனாவரையர். நச்சினார்க்கினியர் 'இஃது ஊழ் அன்றே' என உதாரணம் காட்டி விளக்கினர். 'எட்டுடன் அன்றே இழுக்குடை மரபின்' (சிலப்பதி-கா. 16) தேற்றப்பொருளில் வந்ததென்றார் அடியார்க்கு நல்லார். 'பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவன் அன்றே' என்பதும் அது. பேராசிரியர் கேட்பது பயனாக வரும் என்பர்.

இனி, 'அன்றே' என்பது இசைநிறையாகவும் அசைநிலையாகவும் வரும். 'தோழிநெஞ்சன்றே' (சிலப். கா-24) இசைநிறை. 'நீக்கமின்றி நிற்பன் அன்றே' (சிவஞானபோதம்). பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே' (சிலப். கா-14) அசைநிலை. 'தேவாதி தேவனவன் சேவடி சேர்தும் அன்றே' (சிந்தாமணி) என்பதும் அது.

இனி இச்சிந்தாமணிச் செய்யுளில் வரும் அன்றே என்பதை நச்சினார்க்கினியர் அன்று + ஏ எனப்பிரித்து இரண்டு சொல்லாகக் கொண்டு அன்று அசை என்றும் ஏ ஈற்றசை என்றும் கூறினர். நன்னூலில் 'யாகா பிறபிறக் கரோபோ மாதிகுஞ் சின்குரை யோரும் போலும் இருந்திட்டு அன்று ஆம் தாம் தான் கின்று நின்று அசைமொழி' என்னும் சூத்திரத்தில் 'அன்று' என்பது அசைநிலை என்றார் பவணந்தியார். நச்சினார்க்கினியர் பவணந்தியார் கொள்கைபின்படி உரைத்தார் போலும்.

இவர் இருவர்மட்டும் மற்றவரோடு மாறுபட்டு உரைத்ததற்குக் காரணம் ஆராயின், சூத்திரத்தில் 'அன்றீற்றேயும்' என்று ஓதப்பட்டிருப்பதினால், 'அன்று' வேறு 'ஏ' வேறு மொழி என்னும் கருத்துப்போலும். அப்படியானால், அன்று என்பது ஏகாரத்தோடு சேராமல் தனித்தும் அசைநிலையாக வருதல் வேண்டும். இலக்கியங்களில் எவ்விடத்திலும் அவ்வாறு வரவில்லை. அதுவன்றியும் அந்தோ என்பதும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அந்து எனவும் ஓ எனவும் வரவேண்டும். அதற்கும் இலக்கியம் காணோம். ஆகலின், பவணந்தியார் கொள்கையும் நச்சினார்க்கினியர் கொள்கையும் தவறெனக் கொள்க. 'தேவாதி

தேவன்—அன்றே' என்புழி 'அன்றே' என்பது முழுதும் அசைநிலையாயிற்று எனப் பேராசிரியர் 'அவ்வச்சொல்லிற்கவை யவை பொருளென' என்னும் சூத்திரவுரையிற் கூறுமாறு காண்க.

எனவே 'உந்தை என் துணைவன் அன்றே' என்புழி 'அன்றே' என்பது தேற்றப்பொருளில் வந்த இடைச்சொல் என்க. அது (உன் தந்தையாகிய வாலி எனக்குச் சகோதரன் ஆதலால்) 'நீ எனக்குத் துணையாகக் கூடும் கடமை உள்ளாய்' என்னும் பொருளைக்குறிப்பால் தந்தது காண்க.

46. (செய்-24). 'இந்திரன் செம்மல் பண்டோர் இராவ ணன் என்பான் தன்னை' என்புழி என்பான் என்பது வினைப் பெயர் என்று கூறி ஒழிந்தார். 'இல்வாழ்வான் என்பான்' (குறள்) என்புழிப் போல எனப்படுவான் என்னும் செயப்பாட்டு வினைச்சொல் என்பான் எனச் செய்வினைச் சொல்லாய் வந்தது என்னும் அரிய இலக்கணத்தைக் குறிக்காமையால் இவர்க்கு 'செயப்படுபொருளைச் செய்தது போல' என்னும் நன்னூற் சூத்திரமும் புதிது போலும்.

47. (செய்-28) அங்கதன் அதனைக்கேளா அங்கையோடு அங்கை தாக்கித், துங்கவன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க நக்கான்' என்புழித் 'துங்கவன் தோளும்' என்பதைத் துங்கம் + வன்மை + தோளும், எனப் பிரித்து 'உயர்ச்சி பொருந் திய வலிய தோளும்' எனப் பொருள் பொருத்தமுற உரைகூற அறியாது, 'துங்கவன்' 'உயர்ச்சி பொருந்தியவனான இராவ ணன்' என்றும் இராவணனுடைய தோளும் மார்பும் அவனுடைய இலங்காபுரியும் நடுங்கும்படியாக அங்கதன்-சிரித்தான்' என்றும் உரைவிரித்தார். இவ்விடத்தில் உயர்ச்சியை இராவணனுக்கு எற்றிக் கூறுதல் பொருந்தாமையாலும் இலங்கை துளங்கிற்று எனவே இராவணன் துளங்கினான் எனல் சொல்லாமலே அமை யும் ஆதலாலும், தோள் இருபதும் தலைபத்தும் எனத் தொகை கொடுத்துக் கூறுமையாலும், விலாவிறச் சிரித்தான் என வழக்கு

உண்மையாலும், அவ்வுரை பொருந்தாதென மறுக்க. 'அங்கையோடு அங்கைதாக்கி' என்புழி அங்கைகள் என்னப்பட்டன அங்கதனுடைய அங்கைகளே யாதலாலும், அவன் அங்கைதாக்கிய சேட்டைக்கு ஏற்ப அவனது தோளும் மார்பும் துளங்கும்படி சிரித்தான் என்றலே அண்மைநிலை ஆதலாலும், ஒப்புமைக்கூட்ட அணியின்பாற்படுத்து அவனது தோளும் மார்புமே அன்றி இலங்கையும் துளங்கச் சிரித்தான் என்றார் ஆதலாலும், அவ்வுரை பொருந்தாதென மறுக்க. நீலன் இலங்கை நடுங்கும்படியாக அட்டகாசம் செய்தான் என்று வான்மீகர் கூறினர். அவ்வாறாகக் கம்பர் அங்கதனை வருணித்திருக்கிறார் என அறிக.

48. (செய்-25) உந்தை—உம்+தை—உமது தந்தை. தை முறைப்பெயர் விகுதி என்று (Text book) குறிப்புரையாளர் கூறினர். இப்பாட்டிலே இலட்சுமணர் இராமரைப்பற்றி முன்னே 'நின்னை' எனவும் 'உன் தேவியை' எனவும், முன்னிலை ஒருமை வாய்பாட்டால் பேசிப் பின்னே 'உமது தந்தை' எனப் பன்மை வாய்பாட்டால் பேசினர் என்னின், பால்வழுவாம் என மறுக்க. அதுவன்றியும், 'உந்தை' என்பது 'உம்+தந்தை' என்பதன் மரூஉ முடிபாகவே இருக்குமானால் 'உன்+தந்தை' என்பதன் மரூஉ முடிபு 'உந்தை' என்பதன்றி வேறு யாதோ எனக்கடாவியும் மறுக்க. 'தந்தை' என்பதில் 'தை' முறைப்பெயர் விகுதி என்பாரை, அது என்ன பால்குறித்து வந்தது? பகுதி யாது? அதன் பொருள் யாது? அவ்வாறே தம்பி, தங்கை, அப்பன், மாமன், மாமி, அத்தை, அன்னை, தாய், அக்காள், அம்மான், அத்தான், மருகன் முதலியன பகுதி விகுதி முதலியனவாக பிரிந்து பொருள்படுமாறு எவ்வாறு? எனவும் கடாவி மறுக்க. 'தநநுஎ எனும் அவை முதலாகிய கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா' என்னும் தொல்காப்பியச் சூத்திரத் துரையிலே சேனாவரையரும் பேராசிரியரும் தந்தை, தம்பி, தம்முன், தாய் முதலியன, பகுதி விகுதி முதலியனவாகப் பிரிக்கப் பட்டுப் பொருளுணர்த்தா என்று உரைத்தார். நச்சினார்க்கினியர் அவரொடு மாறுபட்டு உரைத்த உரை பிரயோக விவேகநூலாசிரியரால் மறுக்கப்பட்டவாறு அறிக. (சூ-32. உரை).

இனி நன்னூல் விருத்தியுரையாளர் சங்கர நமச்சிவாயப் புலவர் 'இலக்கியங்கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்னும் சூத்திரத்துரையில் 'தந்தை' 'எந்தை' 'நுந்தை' என்பனவற்றில் தகரவொற்று இடைநிலை யென்று கூறித் 'தம்' பகுதி யென்றும் 'ஐ' விகுதி யென்றும் குறிப்பித்தார். 'ஐ' விகுதி எனின் எப்பால் பற்றி வந்ததோ அதை வெளியிட்டாரிலர். அவர் உரையும் மேலே கூறியவாற்றால் மறுக்கப்பட்டது அறிக. அவரே தமன் என்பதைத் தம் + அன் எனப் பிரித்துக்காட்டியதும் மறுக்கப்பட்டவாறு அறிக.

49. (செய்-28). நம்பி-நம் + பி-நமது தம்பி. பி-முறைப் பெயர் விகுதி என்றார் (Text book) குறிப்புரையாளர். இதுவும் மேலே 'உந்தை' என்பதற்கு உரைத்தாங்கு உரைத்து மறுக்க.

50. (செய்-28). 'செம்மல்' என்பதில் செம்மை பகுதி யென்றார் (Text book) குறிப்புரைகாரர். அவர்க்கு 'அல்' விகுதி என்பது கருத்துப்போலும். அற்றேல் அது எந்தப் பால் பற்றி வந்ததோ? 'தையல்' என்பதின் பகுதி விகுதியும் அவற்றின் பொருளும் என்னையோ? இவற்றுள் பால்காட்டும் விகுதியில்லை என்னும் கருத்துக்கொண்டே நன்னூலாரும் 'அவற்றுள், கிளையெண் குழூஉ முதல்' என்னும் சூத்திரத்திலும் 'கிளை முதலாகக் கிளந்த பொருள்களுள்' என்னும் சூத்திரத்திலும் ஆண்பாற் பெயர்க்கு னகர வீறும் பெண்பாற் பெயர்க்கு ளகர வீறும் இகர வீறும் முறையே கூறி 'குரிசில் தோன்றல்' எனவும் 'நங்கை தையல்' எனவும் ஈறு பிரித்துக் காட்டாமல் ஓதினார். ஆகலின் செம்மல் என்பதும் தோன்றல் என்பதுபோலப் பிரிக்கப் படாத மொழி என்க.

51. (செய்-1). 'வள்ளல்'. வண்மை + அல் எனப் பிரித் துரைத்தார் குறிப்புரையாளர். இதுவும் மேலே செம்மல் என்ப தற்கு உரைத்தாங்கு உரைத்து மறுக்கப்படும்.

52. (செய்-23). 'கங்கையும் பிறையும் சூடும்' என்புழிப் பிறை-பிற + ஐ-அகரம் தொகுத்தல் என்று பகுத்துக் காட்டினர்

குறிப்புரைகாரர். அவர்க்கு 'ஐ' என்பது 'பறவை' என்புழிப் போல வினைமுதலை உணர்த்தும் விகுதி எனவும் பிறப்பதாகிய கலை என்பது பொருள் எனவும் கருத்துப்போலும். 'தேய்பிறை' எனவும் வழங்கி வருதலால் ஆண்டுப் பிறத்தற்பொருள் அமையாமையால், அதுவும் பகாப்பதமேயாம் என மறுக்க. சிவபெருமான் சூடியதும் தேய் பிறையேயாம் என்க.

53. (செய்-29). 'தூது வந்து அரசது ஆள்கை' என்புழி அது சொல்லுருபு என்றார். சொல்லுருபுக்கும் பகுதிப் பொருள் விகுதிக்கும் வேற்றுமை அறியார்போலும். 'வறியார்க் கொன்றீதலே' என்னும் குறள் உரையில் 'ஈதது' என்புழி அது பகுதிப்பொருள் விகுதி என்று பரிமேலழகர் கூறியதையும், அதனை எடுத்துக்காட்டிய பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து நூல் உரைகளையும் பார்த்திலர் போலும். பகுதிப்பொருள் விகுதியை வடநூலார் சுவார்த்தப் பிரத்தியயம் என்பர்.

54. (செய்-30). 'நடுவனே செய்யத்தக்க நாள் உலந்தார்க்குத் தூத' என்புழி, 'நடுவன்' என்பது யமனுக்கு ஓர் பெயர் என்பதை அறியாது நடு+அன் எனப் பிரித்து 'அன்' சாரியை என்றும், 'தன் ஆற்றலைக் காட்டத்தக்க காலம் நடுவே முடியப்பெற்றவனாகிய மனிதனுக்குத் தூதாக வந்தவனே' என்றும் உரைத்தார். இவர் நிகண்டு நூலைக் கண்ணாலும் பார்த்திலர் என்பதை இதனாலும் விளக்கினார். 'நமன்வைவச் சுதனே மற்றை நடுவனே தென்றிசைக்கோன்' என்பது சூடாமணி நிகண்டு. யமனால் வரையறை செய்யப்பட்ட நாளையுடைய மனிதன் இராமன். அந்த நாளும் முடிந்துபோயிற்று. அவனுக்குத் தூதாகவந்தவனே என்பது பொருள் என்க.

'வாளில் அங்கவன் அடுதலும் சென்னியும் வரைசேர்
தோளும் யாக்கையும் வீழ்ந்தன சூரியன் பகைஞன்
நாள் உலந்தனன் அவன் உயிர் வௌவிய நடுவன்
ஆளி மொய்ம்பனை வழுத்தியே தென்புலத் தடைந்தான்'

(கந்த-பானுகோபன் வதைப்படலம்) இப்பாட்டின் ஒற்றுமை நோக்கினும் பொருள் இனிது விளங்கும்.

55. (செய்-34). 'கள்ளம் துடைத்துழி', 'வருணன் வந்து தொழுதுழி', 'உம்பி கொள்ளக்கொடுத்துழி', என்புழி, துடைத்த+உழி, தொழுத+உழி, கொடுத்த+உழி எனப் பிரித்துக்காட்டி அகரம் எங்கும் தொக்கன; உழி ஏழாம் வேற்றுமை உருபு என்றார். என்றார்க்குத் 'துடைத்த' 'தொழுத' 'கொடுத்த' என்பன பெயரெச்சம் என்பது கருத்து அன்றோ? பெயர்ச்சொல்லே யன்றி பெயரெச்சவினைச்சொல் தானும் வேற்றுமை உருபு ஏற்கும் என்பது எந்த இலக்கண நூலிற் கண்டாரோ யாம் அறியேம். 'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது-நினையுங் காலைக் காலமொடு தோன்றும்' என்னும் தொல்காப்பியச் சூத்திரம் இவர்க்குப் புதிதினும் புதிதுபோலும்.

56. (செய்-35).

'மறிப்புண்ட தேவர் காண மணிவரைத் தோளில் வைகும்
நெறிப்புண்ட ரீகம் அன்ன முகத்தியர் முன்னே நென்னல்
பொறிப்புண்ட ரீகம் போலும் ஒருவனால் புனைந்த மௌலி
பறிப்புண்டும் வந்திலாதான் இனிப்பொரும் பான்மை யுண்டோ'

இப்பாட்டின் உரையில், 'நெறிப்புண்டரீகம் அன்ன மறிப் புண்ட' என்பதற்கு 'இராவணனால் அடக்கி வைக்கப்பட்ட' எனவும், 'மணிவரைத்தோளில் வைகும்' என்பதற்கு 'நீலமணி யால் ஆகிய மலையை ஒத்த தோள்களின்மீது வாசம் செய்யும்' எனவும், 'நெறிப்புண்டரீகம் அன்ன முகத்தியர் முன்னே' என்பதற்கு 'தாம் வாசம் செய்யும் கோயிலாகிய தாமரையை ஒத்த முகத்தையுடைய அஷ்ட லட்சுமிகளுக்கு முன்னே' எனவும், 'பொறிப்புண்டரீகம் போலும் ஒருவனால்' என்பதற்கு 'ஐம் பொறிகளும் தாமரைபோல விகசிக்கப்பெற்ற ஒப்பற்றவனாகிய சுக்கிரீவனால்' எனவும், 'புண்டரீகத்தை ஒத்த பின்புறத்தை யுடைய ஒருவன் என்று கொள்ளினும் பொருந்தும்' எனவும், 'இது குரங்கின் இயற்கையை வருணித்ததாகக் கொள்க' எனவும், கூறினார். இவரது கூரிய அறிவே அறிவு. இது எல்பரியோன் பால் நவவியாகரணங்களையும் ஒரு பகலிலே ஓதியுணர்ந்த சிறிய திருவடிக்கும் அமையாது. இதனாலும் தமக்குச் சங்க நூற்பயிற்சி

யின்மையும் நிகண்டுநூற் பயிற்சியின்மையும் இவ்வங்கதன் தூதுப்படலத்துக்கு முன்னும் பின்னும் உள்ள படலங்களில் பயிற்சியின்மையும் விளக்கினர்.

இப்பாட்டின் கருத்து, வானரசேனையின் பரப்பை இலங்கா புரியில் கோபுரத்திலிருந்து நோக்கிய இராவணன் மீது சுக்கிரீவன் பாய்ந்து கிரீடங்களைப் பறித்துக்கொண்டு இராமர்பால் வந்ததை அங்கதன் இராவணனுக்கு எடுத்துக்கூறி, சீதாபிராட்டியை விட்டிடல் தகுதி என்றான் என்பது. கிரீடம் பறிப்புண்ட இழிவைப் பெரிதுப்டுத்தும் பொருட்டு, தன்னால் சிறையிடப்பட்ட பகைவர் ஆகிய தேவர் கண்டு இகழும்படியாகவும், தன்னோடு இருந்த அரம்பையர்கள் கண்டு வெறுக்கும்படியாகவும், சுக்கிரீவன் அவைகளைப்பறித்தான் என்றான். தேவர் இராவணன் சிறையில் இருந்தது 'செம்பொனாட்டுள சித்தரைச் சிறையிடை வைத்தான், கும்பன் என்றுளன்' (கம்ப—இலங்கைகேள்வி) என்பதனால் அறிக. கிரீடங்கள் பறிபடும் காலத்து இராவணன் அரம்பையர் கூட்டத்தில் இருந்தான் என்பது 'நாறுதன் குலக்கிளையெலாம் நரகத்து நடுவான், சேறுசெய்துவைத்தான் உம்பர் திலோத்தமை முதலாக், கூறுமங்கையர் குழாத்திடைக் கோபுரக்குன்றத்து-ஏறி நின்றனன் புன்தொழில் இராவணன் என்றான்,' (இராவணன் தானைகாண்படலம். 37) 'கரியகொண்டலைக் கருணையங் கடலினைக் காணப், பெரிய கண்கள் பெற்றுவக்கின்ற அரம்பையர் பிறரும், உரிய குன்றிடை உருமிடி வீழ்தலும் உலைவுற்று, இரியல் போயின மயிற்பெருங்குலமென இரிந்தார், (ஷை 41) 'நூபுர மடந்தையர் கிடந்தலற........... குதித்தான்', (மகுடபங்கம். 15) என்னும் பாடல்களால் அறிக. இதனால் 'முகத்தியர்' என்றது அரம்பையரையே என்று தெளிக. இதை உணராது 'முகத்தியர்' என்றது அஷ்டலட்சுமிகளை என்று உரைத்தவர் 'முன்னே' என்னும் சொல்லினது ஆற்றலைக் கருதினரிலர். 'திருவளர் தாமரை' என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார் உரையில் திருமகள் ஆசனம் ஆகிய தாமரையைத் தலைமகள் முகத்துக்கு உவமையாகக்

கூறலாகாது என்று பேராசிரியர் கூறியதையும் நோக்கினரிலர். விசயலட்சுமிக்கு முன்னே இராவணன் அபசயம் அடைந்தான் என்று கூறுவது தன் தாயை மலடி என்பவன் கூற்றேடு ஒக்கும் என மறுக்க. (இராவணனுடைய) தோளில் வைகும் ........... முகத்தியர் என்றதனல் தெய்வப் பொதுமகளிர் ஆகிய அரம்பையர் கலவி விசேடம் குறிப்பிக்கப்பட்டது. வைகல்-துயிலல், படுத்துறங்கல். இதனைச் சிலப்பதிகாரவுரையில் 'வைகறை' என்பதற்குத் 'துயில் அறுதல்' என்று அடியார்க்கு நல்லார் கூறியதனுலும் அறிக. 'புண்டரீகம்' என்பது தாமரை, புலி, வண்டு, கழுகு, தென்கீழ்த்திசையானை என்னும் பலபொருள்களை யுணர்த்தும் ஒரு பெயர். 'வினைசார்பின்மிடம் மேவி விளங்காப் பல பொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே' என்னும் நன்னூற் சூத்திரக்கருத்துக்கு ஏற்கத் தாமரைமலரைக் குறிக்க 'நெறிப் புண்டரீகம்' எனவும், புலியைக்குறிக்கப் 'பொறிப்புண்டரீகம்' எனவும் அடைகொடுத்துக் கூறப்பட்டது. 'நெறிப்புண்டரீகம்' என்பதில் 'முழுநெறி' என்பது முன்மொழிகெட்டு 'நெறி' என நின்றது; 'இந்திரகோபம்' என்பது 'கோபம்' எனவும், 'மாணிக்க வாசகர்' என்பது 'வாசகர்' எனவும், 'எடுத்துக்காட்டு' என்பது 'காட்டு' எனவும் நின்றாற்போல. இவ்வாறு வருவதனை 'நாமைகதேச நாமக்கிரகணம்' என்பர் வடநூலார். 'சூரபத்மன்' என்பது 'சூரன்' எனப் பின்மொழி கெட்டு நிற்பதும் அது. 'முழுநெறி' என்பதற்கு 'புறவிதழ் ஒடிக்கப்பட்ட முழுப்பூ' என்பது பொருள். இதனைப் புறநானூறு சிலப்பதிகாரம் இவற்றின் உரைகளிற் காண்க. எனவே, 'நெறிப்புண்டரீகம்' என்பதற்குப் புறவிதழ் ஒடிக்கப்பட்ட முழுப்பூ ஆகிய தாமரை என்பது பொருள். மலரின் அழகைப் புறவிதழ் மூடிக்குறைத்தலால், அப்புறவிதழ் ஒடிபட்ட தாமரையின் முழு மலர் அரம்பையர் முகங்களுக்கு உவமையாகக் கூறப்பட்டது.

இனி, 'நெறிப்புண்டரீகம்' என்பதற்கு வேறோர் உரையும் கூறலாம். இராவணன் அப்பொழுது நூற்றுக்கணக்கான அரம்

பையர் புடைசூழ இருந்தான் என்று கம்பர் வருணித்துள்ளார். அதனை

'வீழி யின்கனி இதழ்ப்பணை மென்றோள்
ஆழி வந்தஅர மங்கையர் ஐஞ்ஞூற்று
எழி ரண்டினின் இரண்டுபயின்றோர்
சூழ்இ ரண்டு புடை யும்முறைசுற்ற'.

(இராவணன் தானைகாண்படலம் 7). என்னும் செய்யுளிற் காண்க. அக்கருத்துப் பற்றி அவர் முகங்களுக்கு உவமையாகிய தாமரை என்பதற்கு 'நெறி' என்னும் அடைகொடுத்துக் கூறினார். நெறி என்பது முதனிலைத் தொழிற்பெயர். 'நெறித்தல்' என்பது 'நெறி'யென நின்றது. நெறித்தல்—செறிதல்—அடர்தல். இதனை 'நெறித்த மயிர்க்கற்றை' 'நெறிமணல்' எனச் செய்யுள் வழக்கிலும்* 'தேங்காய் நெறித்துக் காய்த்தது' என உலக வழக்கினும் கண்டுகொள்க. நெறி என்பதற்கு ஒழுங்கு, வரிசை, எனவும் பொருள் கொண்டு, வரிசை வரிசையாக அமர்ந்திருந்த நூற்றுக்கணக்கான தாமரைமலர் முகத்தையுடையவர் ஆகிய அரம்பையர் முன்னே கிரீடங்களைப் பறித்தான் என்று இழிவு தோன்றக் கூறியவாறும். வீரன் ஒருவன் தோல்வி உற்றகாலத்து அது மங்கையர் பார்க்க நிகழ்ந்ததானல், அவனுக்கு மிகவும் நாணத்தையும் அவமானத்தையும் உண்டாக்கும் என்பது திண்ணம். இதனை 'நாளொத்த நளினமன்ன முகத்தியர் நயனம் எல்லாம்-வாளொத்த' 'தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத் தான் அப், பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்' 'சானகி நகுவள் என்னும் நாணத்தாற் சாம்புகின்றான்' (கும்பகருணப்படலம்) என்னும் இவற்றால் அறிக.

'பொறிப்புண்டரீகம்' என்பதில் பொறி என்பது வரி. புண்டரீகம் என்பது புலி. எனவே உடம்பில் வரிகளையுடைய புலி என்பது. புலிக்குக் 'கொடுவரி' என்னும் பெயர் இதனல் வந்தது. 'புலிப்பொறிப் போர்வை நீக்கி' என்னும் சிந்தாமணி

* பரிபாடல்.

உரையில் 'பொறி' என்பதற்கு 'வரி' என நச்சினார்க்கினியர் உரைத்தது காண்க. 'வேங்கை வரிப்புலிக்கு' என்னும் மூதுரையும் அதனை வலியுறுத்தும்.

'பொறிப்புண்டரீகம் போலும் ஒருவனுல்' என்புழி ஒருவன் என்பதற்குத் தனியன் (தனித்தவீரன்) என்பது பொருள். அஃதாவது 'வேறுதுணை வேண்டாதவன்'. வாலி 'கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ' என் இராமனை விளித்துக் கூறியதும் அப்பொருட்டு. வடநூலார் 'அசகாய சூரன்' என வழங்குவர். இவ்வாறல்லாமல் இவர் உரையில் கூறியவாறு 'ஒப்பற்றவன்' எனப் பொருள் கொண்டால், முன்னே 'புண்டரீகம் போலும்' என ஒப்புக் கூறியதற்கு மாருகும் ஆதலால் அது பொருந்தாது. புலியைச் சுக்கிரீவனுக்கு உவமையாகக் கூறினுன் அங்கதன். புலி எதற்கும் அஞ்சாது, துணைவேண்டாது, காடுகளில் உலாவும். 'புலிக்குத் தன் காடென்றும் பிறகாடு என்றும் இல்லை' என்பது பழமொழி. புலி பாய்ச்சலில் சிறந்தது. அதன் வேகம் அம்பின் வேகத்திலும் அதிகம். அதனை எதிர்த்து ஒரு வீரன் ஆயுதப் பிரயோகம் செய்ய முயற்சி செய்வதற்குள் அவன் மேற்பாய்ந்து ஆயுதத்தோடு தசையையும் பறிக்கும். அதுபோலச் சுக்கிரீவன் அஞ்சாமலும் வேறு துணையை வேண்டாமலும் அதி வேகத்துடன் இராவணன் மேற் பாய்ந்து கிரீடங்களைப் பறித்துக் கொண்டு திரும்பினுன். அதுபற்றிப் புலி உவமையாகக் கூறப்பட்டது.

இதுவேயன்றி, ஒருவன் 'புலி புலி' என்று பெயரைச் சொன்னமாத்திரையிலே கேட்டோருக்கு நடுக்கத்தை உண்டாக்க வல்லது. 'புலி புலி' என்று கூறிப் பிறருக்கு அச்சத்தை உண்டு பண்ணும் வழக்கு உள்ளதை மதுரைக்காஞ்சி, பரிபாடல் முதலியவற்ருல் அறிக. புலி யெதிர்ப்பட்டவன் புலியினது அறைக்குப் பிழைத்தான் ஆயினும் அச்சம் முற்றி இறப்பான் என்பர். புலி எதிர்ப்பட்ட மான் முதலிய மிருகங்கள் எல்லாம் நடுக்கத்தால் கீழே விழுந்து உதைத்துக்கொள்ளும் என்பர். அவ்வாறே நெடுந்

தூரத்தில் உள்ள பகைவரைக் கனவிலும் நடுங்கச் செய்பவன் சுக்கிரீவன் என்பதுபற்றிப் புலியை அவனுக்கு உவமையாகக் கூறினன்.

அன்றியும், புலியானது புறத்தில் தங்கியிருந்தாலும் அதன் குட்டியை அழிக்க மற்ற எதனாலும் முடியாது. இதனை 'நட்டவற் குற்றகேட்டே பதுமுகன் நக்குமற்றோர், குட்டியைத் தின்னலாமே கோட்புலி புறத்ததாகக், கட்டியங்காரன் என்னும் கழுதை நம்புலியைப் பாய, ஒட்டி இஃதுணரலாமே உரைவல்லை அறிக் என்றான்' என்னும் சிந்தாமணியால் அறிக. சூர்ப்பநகைப் படலத்தினும் 'புலிதானே புறத்ததாக குட்டிகோட்படாதென்ன, ஒலியாழி உலகுரைக்கும் உரைபொய்யோ ஊழியினும், சலியாத மூவருக்கும் வானவர்க்கும் தானவர்க்கும், வலியானே யான்பட்ட வலிகாண வாராயோ' என்று சூர்ப்பநகை கூறியதும் காண்க.

இங்கே அங்கதன் தனிமையாக இராவணன் முன் சென்றவன், அதுபற்றி எளியனாக அவன் நினைத்துத் தனக்குத் தீங்கு இழைக்க முயலவும் கூடும்: ஆனால் புலியானது பக்கத்தில் இருக்கையில் எப்படி எதனாலும் குட்டியை அழிக்க முடியாதோ, அப்படி அவனாலும் தனக்குத் தீங்கு செய்தல் முடியாது என்பதை இராவணனுக்கு உணர்த்தும் கருத்துக்கொண்டு சுக்கிரீவனுக்குப் புலியை உவமானமாகக் கூறினன் எனினும் பொருந்தும்.

இன்னும் புலிக்கு ஓர் அரிய குணம் உண்டு. அஃதாவது மானம். 'புலி பசித்தாலும் புல் தின்னாது' என்பது பழமொழி. 'செங்கட்புலியேறு அறப்பசித்தும் தின்னாவாம், பைங்கட் புனத்த பைங்கூழ்' என்பது நீதிநெறிவிளக்கம். புலி ஆண் யானையைத் தாக்கிக் கீழே வீழ்த்தும். அப்போது யானை வலப்பக்கம் நிலத்திற்பட விழுந்தால் மாத்திரம் புலி அதனைத் தின்னும். இடப்பக்கமாக வீழ்ந்தால் தன் வீரத்துக்குப் பங்கமென்று கருதி அதனைத் தின்னாமல் போய்விடும். இதனை 'இடம்பட வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த' என்பதனால் அறிக. 'கடமா தொலைச்சிய கானுறை வேங்கை, இடம் வீழ்ந்த துண்ணா திறக்கும்',

(நாலடி). 'கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென, அன்று அவண் உண்ணுதாகி வழிநாள், பெருமலை விடரகம் புலம்ப வேட் டெழுந்து, இருங்களிற்று ஒருத்தல் நல்வலம் படுக்கும், புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து, உரனுடையாளர் கேண்மையோடு, இயைந்த வைகல் உளவாகியரோ' (புறநானூறு).

அவ்வாறே சுக்கிரீவன் இராவணனைத்தாக்கி வலம்படவீழ்த்தி முடிகளைப் பறித்து வந்தமையால் சுக்கிரீவனுக்குப் புலியை உவமையாகக் கூறினுன் என்பதும் ஒன்று.

இனி, பகைவரை அழிக்கும் எந்திரங்களிலே புலிப்பொறி என்பது ஒன்று சிந்தாமணியில் கண்டது.

அதுபோலப் பாய்ந்து இராவணனைத் தாக்கியதனுல் சுக்கிரீ வனுக்குப் புலிப்பொறியை உவமை கூறியதெனினும் பொருந்தும். பொறிப்புண்டரீகம்—புலிப்பொறி.

57. (செய்-37).

நீரிலே பட்டுச் சூழ்ந்த நெருப்பிலே பட்டு நீண்ட
பாரிலே பட்டு வானப் பரப்பிலே பட்டவெல்லாம்
போரிலே பட்டு வீழப் பொருதநீ ஒளித்துப் புக்குன்
ஊரிலே பட்ட என்ருல் பழியென உளையச் சொன்னுன்

என்பதன் உரையில் 'நீரின்கண் தோன்றியவை, நெருப்பின்கண் தோன்றியவை, பாரின்கண் தோன்றியவை, வானப்பரப்பில் தோன்றியவை ஆகிய சராசரங்கள் எல்லாம் யுத்தத்தில் மடியும்படி சண்டை செய்த நீ (இப்போது) உன் ஊரிலே (இலங்கையிலே) புகுந்து ஒளித்துக்கொள்ள உன் புகழ் எல்லாம் அழியும் ஆனுல் பழிக்கு இடமாகும் என்று அங்கதன் இராவணன் வருந்தும்படி சொன்னுன் என்ருர்.

நீரிலும் நெருப்பிலும் தோன்றியவை யாவை? பாரிலும் வானத்திலும் தோன்றிய சராசரங்கள் யாவை? அசரமும் போரில் மடிந்தனவோ?

இப்பாட்டிற்கும் இவர் கதை வரலாறு (allusion) தெரியாமையால் போலியுரை உரைத்தார். முதல் மூன்றடியில் குறிக்கப்பட்டது இராவணன் திக்குவிசயம். வருணலோகத்திற் சென்று வருணனை வென்றதும், அக்கினி லோகத்திற்சென்று அக்கினியை வென்றதும், பூமியில் பலரை வெற்றிகொண்டதும், வானுலகத்தில் இந்திரன் முதலியோரை வென்றுகொண்டதும் குறிக்கப்பட்டன. நீரிலே, நெருப்பிலே, என்புழி நீர், நெருப்பு என்பன அம் மண்டலங்களுக்கு ஆகுபெயர். இவை இப்பொருளில் வந்தன என்பதை

'பருணன் தன் பெரும் பாசமும் பறிப்புண்டு பயத்தால்
வருணன் உய்ந்தனன் மகரநீர் வெள்ளத்து மறைந்து'
(ஒற்றுக் கேள்விப்படலம்)

'செருப்பெய் வானிடைச் சினக்கடாம் கடாய்வந்து செறுத்த நெருப்பை வென்றவன் நிகும்பனென் றுளன்ஒரு நெடியோன்' (ஷை) முதலியவற்றால் அறிக.

58. (செய்-35).

ஏவி னான்பிடித் தாரை எடுத்தெழத்
தாவி னான்அவர் தந்தலை போயறக்
கூவி னான்அவன் கோபுர வாயிலில்
தூவி னான்துகைத் தான்இவை சொல்லினான்.

இதனுள், ஏவினான் என்பதற்கு, ஏவு-முதனிலைத் தொழிற் பெயர், ஆன்-மூன்றாம் வேற்றுமை உருபு என்று இலக்கணம் கூறி (இராவணனுடைய) ஏவுதலினால் என்று பொருள் உரைத்தார். குறிப்புரைகாரர் ஏவப்பட்டவன் ஆகிய அங்கதன் என்று எழுதினர். ஆன் உருபு என்றவர் 'ஏவினாற் பிடித்தாரை' என னகரம் றகரமாகத் திரியவேண்டும் என்பது அறிந்திலர். ஏவப் பட்டவன் என்று பொருளுரைத்தவர் ஏவுதல் தொழிலுக்குச் செயப்படுபொருள் 'நால்வர்' அன்றி 'அங்கதன்' அன்று என்பது அறிந்திலர்.

இவர் இங்ஙனம் மயங்கி உரைத்ததற்குக் காரணம் யாதென்று நோக்கின், முன் பாட்டின் ஈற்றடியில் 'எற்றுழின் என நால்வரை ஏவினன்' என வந்துள்ளது கொண்டு, இப்பாட்டில் முதலில் 'ஏவினன்' என வந்ததற்குச் செய்வினைப்பொருளே கொண்டால் 'கூறியது கூறல்' என்னும் குற்றமாகும் என்று கருதியது போலும். அவர் கருத்து எவ்வாறாயினும் தவறேயாம். 'ஏவினன்' என்பது வினையெச்சம் முற்றாய்த்திரிந்தது. (இராவணன் அங்ஙனம்) 'ஏவினன் ஆக' எனப் பொருள் உரைக்க.

இவ்வாறு வினையெச்சத் திரிபாகக்கொள்ளாமல் முற்றாகவே கொண்டு, கட்டுரைக்கண் (Emphasis) வந்ததென்று கூறினும் இழுக்காகாது. 'தன்னால் நிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னாள்' என்பது (கம்பர் நகர் நீங்கு படலம் செய்-36) ஈற்றடி. அடுத்த செய்யுள் முதலடி 'சொற்றாள் சொற்ற முன்னம் சுடர்வாள் அரசர்க் கரசன்' என வந்தது. 'விற்றாங்கிய புய வேடரில் வேறாரிடை நின்றான்' என்பது (கந்த-அசமுகி-செய்-15) ஈற்றடி. அடுத்த செய்யுள் முதலடி 'நின்றான் அவன் அது கண்டிலன்' என வந்தது காண்க.

59. (ஷை செய்) தாவினன், கூவினன், தூவினன், சொல்லினன் என வருவனவற்றுள் ஒருவர் கூவினன் என்பதை முற்றெச்சம் என்றும், மற்றொருவர் கூவினன் என்பது மட்டும் முற்றெச்சம் என்றும் இலக்கணக்குறிப்பு எழுதினர். இருவரும் தவறினர். 'உண்டான், தின்றான், ஓடினான், பாடினான் சாத்தன்' என்றாற்போல, தாவினன், கூவினன், தூவினன், சொல்லினன் என்னும் நான்கு வினைமுற்றுக்களும் அடுக்கி அவன் என்னும் எழுவாய்க்கு முடிபாயின என்று உணர்க. இதற்கு இலக்கணவிதி 'உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும் ஒருதம் எச்சம் ஈறுறமுடியும்' என்னும் நன்னூற் சூத்திரம்.

'அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னு—முகடியால் மூடப் பட்டார்' (குறள்). 'யாதானும் நாடாமல் ஊராமால் என் ஒருவன்-சாந்துணையும் கல்லாதவாறு' (குறள்). 'பாவா வெளிப்படாபல்லோர் கட்டங்கா-உரவோர்கட் காமநோய் ஓஒ கொடிதே' (நாலடி)

'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்..................
:..........கருமமே கண்ணுயினர்' (நீதிநெறி). 'நின்றான் இருந் தான் கிடந்தான்தன் கேள்அலறச்-சென்றான் எனப்படுத லால்' (நாலடி). இவையெல்லாம் அவ்விதிபற்றி வந்தனவென அறிக. அலங்கார நூலார் இவ்வாறு வருவதனைத் தீபகவணி யென்றும், வினைமுதல் விளக்கணியென்றும் கூறுவர்.

60. (செய்-38). 'சொற்ற' என்னும் பதத்தைப் பிரித் துக் காட்டியவர், சொல் பகுதி,த் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்சவிகுதி, த் எழுத்துப்பேறு, தகரம் றகரமானது சந்தி என்றார். இவர் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகின்றார். றகரவொற்றே இறந்தகால இடைநிலையாக இருக்க, இடைநிலைத் தகரம் றகரமானது சந்தி என்றதும் தகரவொற்று எழுத்துப் பேறு என்றதும் பிதற்றல். முன்னமே 'உழிதரு' என்பதில் பகுதியைப் பிழைபடக் காட்டினர். 'அழுகிற்று' என்பதில் விகுதியைப் பிழைபடக் காட்டினர். 'எய்தின்றால்' என்பதில் சாரியை பிழைபடக் காட்டினர். சந்தியும் விகாரமும் பிழைபடக் காட்டியன அனேகம். இங்கே இடைநிலை காட்டியது பிழை. ஆகவே இவர் பதவியல் இலக்கணம் நன்கு உணராமலே எழுதி யிருத்தல் காண்க.

## சிதம்பர மும்மணிக்கோவை.

61. 'நொதுமலும் பகையும் போக்கி ஐய
விழுத்தகு கேண்மையோர்க்கு உதவல்
வழக்கும் அன்று மன்றுடையோற்கே',

என்பதற்கு, 'ஒருவனுக்கு உள் பற்றுதலின்மையும் பகையும் ஒழித்து மேலான சினேகத்தன்மையைக் கொண்டவருக்கே ஒப் பற்றதொரு பொருளைக்கொடுத்தல் என்பது சிற்சபையில், பொது நடனம் புரியும் உனக்குத் தகாது' என்றும், 'ஆதலால் நான் நொதுமலும் பகையும் உடையனுயினும் எனக்கு அருள்புரிதல் உன் கடமையாகும்' என்றும் உரையெழுதினர்.

இவர்க்கு, இப்பாட்டில் வந்த 'நொதுமல்' 'பகை' 'கேண்மை' என்னும் சொற்களின் பாகுபாடு இன்னதென்று தெரியாமையாலும், இதில் உள்ள அலங்காரம் இன்னதென்று தெரியாமையாலும், இங்ஙனம் தவறான உரையெழுதலாயினர். திருக்குறளில் 'நடுவு நிலைமை' 'ஒற்றாடல்' என்னும் அதிகார முகத்தில் பரிமேலழகர் எழுதிய உரைக்குறிப்பை நோக்கின் இவற்றின் பாகுபாடு இனிது விளங்கும். மக்களை 'நொதுமல்' என்றும் 'பகை' என்றும், 'கேண்மை' என்றும் மூன்று வகையாக வகுப்பர்: நொதுமல்—அயல், பகை—விரோதம், கேண்மை—நட்பு; எனவே அன்னியர், பகைவர், நட்பினர் என மூவகையராம். மன்று என்பது சபை. வழக்கு முறை தீர்க்கும் சபையும் மன்றெனப்படும். நடனம் செய்யும் சபையும் மன்றெனப்படும். 'மன்றுடையோன்' என்றது 'சபாபதி' எனப் பொருள்படும். நீதி மன்றத்தில் இருந்து வழக்குத் தீர்த்து முறை செய்யும் அரசன் முதலியோர் வழக்காளிகள் அன்னியரா யிருந்தால் அவருக்கு ஒருவகை முறையும், பகைவராயிருந்தால் அவருக்கு ஒருவகை முறையும், நட்பினராயிருந்தால் அவருக்கு ஒருவகை முறையும் விதிக்காமல், சமமாக நடத்துவது நடுவு நிலைமை எனப் படும். அவ்வாறே நல்ல காரியம் செய்தவிடத்திலும் அந்த மூன்று வகையார் நிலைமைபற்றி ஏற்றத்தாழ்வு கருதாமல் அவர் காரியப்பெருமைக்குத் தகுதியாகப் பரிசு அளித்தல் நடுவு நிலைமையின் பாலதாம்.

இது தவறி நடப்பதற்கு 'மன்றோரம்' என்று பெயர். இதனை 'மன்றோரம் சொன்னார் மனை' என வருவதனாலும் அறிக. 'மன்று பறித்துண்ணேல்' என்னும் அவ்வை திருமொழிக்கு 'மன்றோரத்தால் பொருள் பறித்து உண்ணாதே' என்று உண்மைப் பொருள் காணமாட்டாதார் 'மண் பறித்துண்ணேல்' எனப் பாடம் திரித்துரைப்பர். அங்ஙனம் பலசொற்களை வருவித்துரைத்தற்கு இலக்கணவிதி யாதோ வெனின் 'கண்டொன்று சொல்லேல்' என்பதற்குச் சொற்கள் வருவித்துரைத்ததற்கு விதி யாதோ அதுவே இதற்கும் அமையும் என்க.

# பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 242 | 20 | கொள்ளாது | கொல்லாது |
| 245 | 3 | வருந்தாமல் | வருந்தாமே |
| 255 | 20 | பணி | பனி |
| 260 | 4 | வெரின் | வெரிந |
| 272 | 22 | அழலுரு | அழலுறு |
| 282 | 18 | நெறிப்புண்டரீகம் அன்ன | (இதனை நீக்கிப் படிக்க) |
| 285 | 19 | கூறியவாறும் | கூறியவாறுமாம் |

'மன்றிடைப் பிறர்பொருள் மறைத்து வவ்விஞேன்' எனக் கம்பரும் குறித்தார். இனி இப்பாட்டின் பகுதிக்குப்பொருள் அயலாரையும் பகைவரையும் விலக்கி, மிக்க தகுதியுள்ள நட்பினருக்கு மட்டும் உதவிசெய்தல் மன்றை உடையவனுக்கு முறைமையன்று. எ - று. எனவே, சிவபெருமானே! நீ சபாபதி, உன்னிடத்து அன்பில்லாதார்க்கும், உன் விதிக்கு மாருன காரியங்களைச் செய்வார்க்கும் உன்னை வந்து அடைந்தபோது அருள் செய்யாதிருத்தல் தகாது. உன்னிடத்து அன்புள்ளவர்கட்கு மட்டும் அருள்செய்தல் மன்ருேரம் ஆகும் என்பது குறிப்பிக்கப் பட்டது. இது 'பிறிது மொழிதல்' (ஒட்டு) என்னும் அலங்காரம். 'நான் உன்னிடத்து அன்பிலேன் ஆயினும் எனக்குக் காட்சி அளித்தல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். சபாபதிக்குக் கேண்மையோர் என்று குறிக்கப்பட்டவர் 'பதஞ்சலி வியாக்கிர பாதர்', மணிவாசகர், சுந்தரர், சேரமான் பெருமாள், தில்லைவாழ் அந்தணர், திருநாளைப்போவார் முதலியோர். எனவே, ஆன்ஞேர்க்கு மட்டும் அருள் செய்தது சபாபதியாகிய உனக்கு முறைமை அன்று, எனக்கும் அருள்செய்யும் முறைமையுடையாய் என்றவாருயிற்று.

உ

# உடல் இயலும் உடல் நல வழியும்.

## ஆரும் படலம்.

## சமிக்கும் உறுப்புக்கள்.

---

திரு. சாமி. வேலாயுதம்பிள்ளையவர்கள், B. A., L. T.,
உரத்தநாடு.

---

### 1. உணவின் வகையும் அளவும்.

உணவின் பயன்:—பொறிகளில் எரி பொருள்கள் எரிந்து வேலை செய்விப்பதன்றி வெப்புமுண்டாக்குவதுபோல், நம்முடலிலும் உணவுப்பொருள்கள் எரிந்து இவ்விரண்டையுமே (வேலை, சூடு) கொடுக்கின்றனவென்று கண்டோம். இவற்றுள் நம்முடல் உண்டாக்கும் சூட்டின் அளவு, ஒவ்வொரு நொடியும் இரு மெழுகு விளக்குகள் (வத்திகள்) எரிவதால் உண்டாகுஞ் சூட்டை ஒக்கும். நம்முடலிலுள்ள கை கால்களன்றித் தாமாகவே வேலை செய்து கொண்டிருக்கும் குருதியேற்றம், மூச்சுறுப்புகள், சமிக்கும் உறுப்புகள், தோல், ஏனைய தசைகள் செய்யும் வேலையைமட்டுங் கணக்கிடின் ஒவ்வொரு நொடி நேரமும் நம்முடல்நிறையை அரையடி தூக்குவதற்கொக்கும்.* இதுவன்றி நம்முடல் ஏனைய பொறி

---

* இவ் வேலையின் அளவை ஆராயின் அது நன்றாய் வளர்ந்தவனுடைய உடலின் வேலையைக் கால் ($\frac{1}{4}$) குதிரை வலி (Horse Power) உடைய ஓர் பொறி நாள் முழுவதும் (60 நாழிகையும்) ஓயாதுழைத்தால் எவ்வளவு வேலை செய்யுமோ அவ்வளவிற் கொப்பாகும்; அல்லது 6 குதிரை வலிவுடைய ஓர் பொறி ஓர் மணி நேரஞ்செய்யும் வேலையை ஒக்கும்; அல்லது 2,60,000 மணங்கை (2000 டன்னை) ஓரடி ஒரு நாளில் தூக்குவதற்கொக்கும். இவையாவும் கையை, காலை, உடலை அசைக்காது இருந்த இருப்பிலேயே செய்யப்படுகின்றன வெனின் உலகில் உண்மைச் சோம்பேறி ஒருவனுமில்லையென்றே கூறலாம். இதில் எழிலொரு பங்கு குருதி யேற்றமும், இன்னொரு எழிலொருபங்கு மூச்சுறுப்புகளும், எஞ்சிய

களைப்போ லல்லாமல் வேலைசெய்வதாலுண்டாகுந் தேய்வை நிரப்பிக்கொள்ளுகிறதன்றிப் பிறக்கும்பொழுது சராசரி 12 சேர் நிறையும் $1\frac{1}{2}$ அடி உயரமும் உடையதாயிருந்தும் இருபது முப்பது ஆண்டுகளுக்குள் 225 சேர் நிறையும் $5\frac{1}{4}$ அடி உயரமும் கொண்டு வளருகிறதெனின் இவை யாவற்றிற்கும் முதலாயுள்ள உணவின் இன்றியமையாமை விளங்கும்.

உணவுப் பொருள்களின் வகை:—இவ்வாறு இன்றியமையாதிருக்கிற உணவின் வகையைத் தெரிந்துகொள்ள உடலிலுள்ள பொருள்களை யாதென ஆராய்ந்தறிய வேண்டும். ஏனெனின் அவற்றிற்குத் தக்கவாறே உணவு வேண்டியதாயிருக்கும். இவ் வாராய்ச்சி இருவகைத்து. ஒன்று தனிப்பொருள்கள் (Elements) யாவையென ஆராய்வதாகும். மற்றொன்று அதிலுள்ள கூட்டுப் பொருள்களை (Compounds) ஆராய்வதாகும். முதல் வழிப்படி நம் முடல் நிறையில் நூற்றுக்கு இத்துணை விழுக்காடு இன்னின்ன பொருள்கள் உளவென்பதைப் பின்வரும் பட்டியல் கூறும்.

| | | |
|---|---|---|
| 1. | உயிர்க்காற்று (Oxygen) .... .... | 65 |
| 2. | கரி (Carbon) .... .... | 18 |
| 3. | நீர் முதற்பொருள் (Hydrogen) .... | 10 |
| 4. | வெடியுப்புக் காற்று (Nitrogen) .... | 3 |
| 5. | சுண்ணாம்பு முதல் (Calcium) .... | 2 |
| 6. | தீ முறுகல் (Phosphoras) .... .... | 1 |

---

வற்றை ஏனைய உறுப்புகளுஞ் செய்கின்றன. இதுவன்றிக் கை, கால்கள் உடலை இயக்கிச் சராசரியாக 28,000 மணங்கை (300 டன்னை) ஓரடி ஒரு நாளில் தூக்குவதற்கொப்ப வேலைசெய்ய ஒருவனுக்கு இயலும். இவ்வாறு வேலை செய்பவனின் உடல் இதைப்போல் ஐம்மடங்கு வேலையைச் சூடுண்டாக்குவதில் செய்தே தீரவேண்டுமெனின் இது பெரும் வியப்பன்றோ? (இக் கணக்கினுள் உடல் வளர்வதால் செய்யப்படும் வேலையுஞ் சூடுஞ் சேர்க்கப்படவில்லை). இவ்வாறு உடல் செய்யும் வேலைகளால் உண்டாக்கப் பெறும் சூடு 2700 பெருஞ் சூட்டளவு (Big Calory-1000 Cal.) ஆகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதுவும் உணவு எரிக்கப் பெறுவதால் உண்டாக வேண்டியதே யாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | வெடியுப்பு முதல் (Potassium) | | .... | ·35 |
| 8. | கந்தகம் (Sulphur) | .... | .... | ·25 |
| 9. | உப்புக்காற்று (Chlorine) | .... | .... | ·09 |
| 10. | உப்பு முதல் (Sodium) | .... | .... | ·06 |
| 11. | மக்கனம் (Magnesium) | .... | .... | ·06 |
| 12. | இரும்பு (Iron) | .... | .... | ·04 |

இவையன்றி மண்முதல் (Silicon), ஆடி அரிக்காற்று (Fluorine), புகைக்கல் (Iodine) இவை சிறிது விரவி நிற்கின்றன. நம்முடற்கு ஊட்டப்பெறும் உணவும் இத்தனிப் பொருள்களாலானதா யிருக்கவேண்டுமன்றோ ? ஆம். என்றாலும் நம்முடலில் இப் பதினைந்து பொருள்களுந் தனிப்பொருள்களா யிருக்கிறதில்லை. கூட்டுப் பொருள்களாகவே இருக்கின்றன. அன்றியும் உயிர்க்காற்றைத் தவிர ஏனைய தனிப்பொருள்களை நம்முடல் ஏற்றுக் கொள்ளுந்தன்மை யுடையதல்ல. ஆகலின் நம்முடலிலுள்ள கூட்டுப்பொருள்களை ஆராயின் இத்தனிப் பொருள்களைக் கூட்டாகக்கொடுக்க இயலும். இவ்வாராய்ச்சியின்படி நம்முடல் நிறையுள் நூற்றிற்கு 70 பங்கு நீரும், எஞ்சியதிற் பெரும்பகுதி ஊன் முதலும் (Proteins) கொழுப்பும் (Fats), மிகச் சிறு பகுதி உப்புக்களும் அதிலுங் குறைந்த பகுதி கரி நீர் முதற் பொருளும் (Carbohydrates) இருக்கின்றன. இக் கூட்டுப் பொருள்களே யாவரும் உண்ணும் உணவிலும் மிகுந்திருப்பதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர். இவற்றுள் நீரில் உயிர்க் காற்றும், நீர்முதலும் ; ஊன்முதலில் வெடியுப்புக் காற்றும், † கரியும், நீர் முதலும் ; கரிநீர் முப்பொருளிலுங் கொழுப்பிலும் கரியும், நீர் முதலும், உயிர்க் காற்றும் ; உப்புக்களில் உடற்கு வேண்டிய ஏனைய தனிப் பொருள்களுமிருக்கின்றன.

உணவுப் பொருள்களின் முடிபு :—பொறிகளை இயக்க அவைகளின் அடுப்புகளில் (Oven) எரிவன விறகு, கரி, அல்லது

† கரி நீர் முதற் பொருளுங் கொழுப்பும் அதே மூன்று தனிப்பொருள்களையுடையன வேனும் அவை கலந்திருக்கும் அளவு வேற்றுமை யுடையனவே.

எண்ணெய்களேயாம், இவற்றுள் விறகிலுங் கரியிலுமுள்ள தனிப்பொருள் கரிப்பொருளேயாம்; எண்ணெய்களிலுள்ள தனிப்பொருள்கள் கரிப்பொருளும், நீர்முதற் பொருளுமே யாம். கரிப்பொருளும், நீர்முதற் பொருளும் எரிவதால் சூடு, வெளிச்சம் உண்டாவதன்றி முறையே கரிக்காற்றும், நீரும் உண்டாகின்றன. இவ்வாறே நம்முடலிலும் உணவுப் பொருள் களிலுள்ள கரியும், நீர்முதலும் எரிவதால் சூடன்றிக் கரிக் காற்றும் நீரும் உண்டாகின்றன. இவற்றுள் கரிக்காற்று குருதியாற் கொண்டுவரப்பெற்று மூச்சுவிடுவதால் நீக்கப் பெறு வதை முன்னர்க்காட்டினும். நீரில் உடற்கு வேண்டிய அளவு பயன்பட்டது போக எஞ்சியது மூச்சுவிடும் பொழுதும், நீரிறங் கும் பொழுதும், வியர்க்கும் பொழுதும் நீக்கப் பெறுகிறது. இவையன்றி ஊன்முதலி லுள்ள வெடியுப்புமுதல் எரிவதால் சிறுநீருப்பாகிச் (Urea) சிறு நீருடன் நீக்கப்பெறுகிறது.

**உணவுப்பொருள்களின் தன்மைகள்:**—நம்முடலில் கரிநீர்ப் பொருள் மிகக் குறைவாயிருப்பினும் நம்முணவில் யாவற்றினும் மிகுந்திருப்பது இதுவே யாகும். இது இரு வகைத்து. ஒன்று மாப்பொருள் (Starch), மற்றொன்று அக்காரமேயாகும். இவற்றுள் மாப்பொருளே மிகுதியாய் உண்ணப்படுவதாம். இது நெல், கோதுமை, கம்பு, வரகு, சோளம் முதலிய அரிசி வகை களிலும், விதைகளிலும், கிழங்குகளிலும் மிகுந்திருக்கிறது. இது எளிதிற் சர்க்கரையாக மாறும். கொழுப்பாகவும் மாறி உடலிற் சேமித்து வைக்கப்பெறும். சர்க்கரையானது கருப்பங் கழி, அக்காரக் கிழங்கு, (Beet Root) தேன் இவற்றுள் மிகுந் தும், பால் பழம் முதலியவற்றுட் குறைந்து மிருக்கிறது. இதனைக் குறைத்துண்பதே நன்று. எனினும் இதுவும் மாப்பொருளுமே தசைகளுக்குத் தக்க உணவாகிக் களைப்பை மாற்றுகின்றன. இதுவுங் கொழுப்பாக மாற்றப்பட்டு உடலிற் சேமித்து வைக்கப் பெறும். கொழுப்புக்கள் மிகுதியாய் எண்ணெய்களிலும், நெய் களிலும், இறைச்சியிலும், குறைவாய்ப் பால், அரிசி, கிழங்கு, காய்கறிகளிலும் இருக்கிறது. இதனையுங் குறைத்துண்பதே உடற்கு நன்று. இது மிகுந்தால் உடலில் அப்படியே சேமித்து

வைக்கப்பெறும். கொழுப்புக்கள் கரிநீர் முப்பொருள்களினும் மிகுதியான கரிப்பொருளேயுங் குறைவான உயிர்க்காற்றையுமுடையனவாகலின், அவைகளைவிட $2\frac{1}{4}$ பங்கு மிகுதியான சூட்டைக் கொடுப்பன. ஆனல் சர்க்கரையானது கொழுப்பு, ஊன்பொருளைக் காட்டிலும் சிக்கனமாகவும், உடற்கு ஒத்ததாதவும் உள்ள சூட்டை உண்டாக்குகிறது. ஆயினும் உடலே வளர்ப்பதும், தேய்வை நிறைப்பதும் ஊன்முதலேயாம். இது முட்டையின் வெண்கருவிலும் (Albumen), பாலின் ஆடையிலும், குருதியிலும், இறைச்சியிலும், மொச்சை, துவரை முதலிய காய்வகைகளிலும் இருக்கிறது. இவற்றுள் முதன் மூன்று பொருள்களிலுள்ள ஊன் பொருளே நீரிற்கரையும் இயல்புடைத்து. ஏனையவற்றிலுள்ளன கரையா. இவ்வூன் பொருளில் கரியும், நீர்முதலும் இருப்பதால் இதுவும் ஓர் எரிபொருளேயாகும். இவையன்றி இவ்வூன் பொருளிற் சிறந்திருப்பது வெடியுப்பு முதலாம். இதுதான் உடலே வளர்த்துத் தேய்வை நிறைப்பதற்கு முதலாயிருப்பது. இது நாமுட்கொள்ளுங் காற்றில் ஐந்தில் நான்கு பங்கு (பருமவளவில்) மிகுத்திருந்தும், நம்முடற்கு இது இன்றியமையாத தொன்ருயிருந்தும், நம் நுரையீரல் வழியே இது குருதியுட் சேருந் தன்மை யற்றிருப்பது பெரிதும் வியக்கத்தகுந்தது. இது கலந்திருக்கும் உணவுப்பொருள்களை உண்டாற்ருன் இது உடலுட் சேருமாதலின் இதுவே இதற்கு வகுத்தான் வகுத்த வழியாகிறது. எல்லாவகை ஊன்பொருள்களும் சூடு படுத்தப்பட்டால் (சமைக்கப்பெற்ருல்), அல்லது குடிச்சத்து (Alcohol), படிக்காரம் (Alum), பைக்கரைநீர்ச் (Rennet)சத்து, இவைகளுடன் கலக்கப்பெற்ருல் உறைந்துவிடுகிறது (Coagulates). இவ்வாருனதும் இது எளிதிற் சமிப்பதில்லே. ஊன் முதலுங் கொழுப்பாக மாறும் இயல்புடையது.

நாம் உண்ணும் உணவுப் பொருள்கள்.— இத்தன்மை வாய்ந்த கூட்டுப்பொருள்களை நாம் தனித்தனியே எடுத்துண்பதில்லே. இவை பல அளவிற் பலவகையாயச் சேர்ந்துள்ள அரிசிவகைகள், முதிரைவகைகள், காய்கறிவகைகள், கொட்டைகள்,

பழவகைகள், பால், அதிலிருந்துண்டாம் பொருள்கள், புலால் வகைகள் எனும் இவைகளுட் பல கொண்டு சமைத்துண்கிறோம். இவற்றுள் அரிசி வகைகளாகிய நெல்லரிசி, சோளம், கம்பு, கேழ் வரகு, வரகு, தினை, கோதுமை முதலியவற்றையே உணவின் பெரும்பகுதியாக நாம் உண்கிறோம். இவை எளிதில் உடலுட் சேருகின்றன. இதனாற்றான் உடலைச் சோற்றாலமைத்த சுவர் என்கின்றோம். இவற்றுள் மாப்பொருள்களே மிகுதி. ஆனால் இவற்றுள் உடற்கு வேண்டிய அளவு ஊன்முதலுங் கொழுப்புமில்லை. இதற்காகவே முதிரை வகைகளையும், பாலையும், அதிலிருந்துண்டாம் பொருள்களையுஞ் சேர்த்துண்கிறோம். துவரம் பருப்பு, உழுந்து, பச்சைப்பயறு, காராமணி, கொண்டைக்கடலை, மொச்சைக்கொட்டை முதலியவைகளே முதிரைகளாம். இவற்றுள்ளும் பெரும்பகுதி மாப்பொருள்களேயாயினும் வேண்டிய அளவு ஊன்முத லிருக்கின்ற தாகையால் இவைகளை வேண்டிய அளவு சேர்த்துண்ணவேண்டும். இவைகளுள்ளுங் கொழுப்பு மிகக்குறைவே யாதலின் நெய் சேர்த்துண்ண வேண்டும். காய்கறிகள் செடிகொடிகளின் தண்டு, வேர், இலை, காய், பூவாகும். இவற்றுள் நீரே மிகுத்திருப்பதால் இவை அத்துணைச் சத்துடைய உணவுப் பொருள்களல்ல. இவற்றின் பெருமை இவைகளிலுள்ள உப்புக்களால் உண்டாயிருக்கிறது. உடற்கு வலிமை தரும் இரும்புச்சத்து மற்று எல்லா உணவுகளிலும் பசலைக் கீரையிற்றான் மிகுத்திருக்கிறது†. மேற்கூறிய உப்புச் சத்தை வீணாக்காதடைய வேண்டின், இவைகளை வேகவைத்த நீரை இறுத்து விடாது வைத்துக்கொண்டு சமையல் செய்யவேண்டும். காய்கறிகளுள் மொச்சை, அவரை, பட்டாணி, உருளைக்கிழங்கு, வாழைக்காய் ஆய இவை மிகுந்த சத்துடையன. இவையும் எளிதிற் சமிக்கப்பெறா. பழங்கள் இனிய மணமுடையன. மிக எளிதிற் சமிக்கும் அக்காரமுமுடையன. நச்சுக்கூடுகளையும் நுண் புழுக்களையுங் கொல்லும் புளிப்புக்களையு (acids) முடையனவாதலின் ஒருநாள் முழுவதும் பழ உணவையே உண்ணின் அவ்வுணவு,

† இரும்புச் சத்து மிகுத்துடைய முட்டையின் மஞ்சட் கருவும் இதற்கடுத்தபடியே இச் சத்தையுடையது.

உணவுக்குழாயைத் தூய்மையாக்கிப் பவ்வீக்கட்டையும், பித்த நோயையும் நீக்கும். இதனால் பழங்கள் விரும்பத் தகுந்ததும் மிக்க செலவில்லதுமாய நல்ல மருந்தாம். பசியற்றவர் கொடி முந்திரிப்பழத்தையே தின்று பசியடைகின்றனர். இன்னும் உலர்ந்த அத்திப்பழம், திராட்சைப்பழம், பேரீச்சம்பழம் இவை முறைப்படி சத்து மிகுத்துள்ளன. இவற்றுள் ஒன்றும் பாலும் உண்டால் உடற்குவேண்டிய சத்துயாவற்றையும் அடையலாம். இவற்றிற்கடுத்தபடியாக வாழைப்பழமுஞ் சத்துடையதே. (சீமை) இலந்தைப்பழம் எளிதிற் சமிக்கும். இதையாவது விளாம்பழத்தையாவது காலையுணவிற்கு முன்னுண்ணல் மிக நன்று. வெள்ளரியில் இரும்புச்சத்து மிகுதி. எலுமிச்சை நல்ல குடிவகையே. பழுக்காத காய்களும் அழுகற் பழங்களுங் கேடுண்டாக்கும். வாழைப்பழம் மரத்தில் பழுத்தலே நன்று. நன்ருய் முற்ருத காயைப் பழுக்கவைத்தல் கெடுதி. இது தோல் கருக்கும் பொழுதுதான் நன்ருய்ப் பழுத்ததாகிறது. தமிழ் நாட்டினர் பழங்களின் நன்மையையுணர்ந்து மிகுதியாய் உண்ணும் பழக்க முண்டுபண்ணிக் கொள்ள வேண்டியவராயிருக்கின்றனர். சீமை இலந்தை, அன்னுசி, திராட்சை முதலிய பழங்களிலுள்ள சர்க்கரையே இவற்றின் பெருமைக்குக் காரணமாம்.

கொட்டைகள் :—இவைகளில் நீர் மிகக் குறைவாதலின் ஏனைய உணவுகளினும் மிகச் சத்துடையன. இவற்றிலுள்ள நெய்ப் பொருள் நல்ல ஆடை (Cream) நிலையிலிருப்பதால் எளிதில் சமிக்கிறது. கொட்டைகள் காய்ப் பக்குவத்திலிருக்கையில் உள்ள அவற்றின் மாப்பொருள், பழுத்ததும் சர்க்கரையாக மாறுவதால் எளிதிற் சமிக்கிறது. இவைகளில் உள்ள பெருங்கெடுதி யாதெனின், மிகுதியாக மாப்பொருளு‡டைமையின் அது எளிதிற்

‡ மரப்பொருள்கள் (Cellulose) மாப்பொருள்களைப்போல் கரி நீர் முதல், உயிர்க் காற்றையுடையனவேனும் மக்களால் சமிக்கப்பெருததோர் உணவாம். இதை மூன்று நான்கு தீனிப்பைகளுடைய ஆடு மாடுகளே சமிக்கவைக்கும். எனினும் பிஞ்சாயிருக்குங் காய் கறிகளிலுள்ள மரப் பொருள் மக்களாலுஞ் சமிக்கப்பெறுமாதலின் நாம் இவைகளை விரும்புவது மதியுடைமையே.

சமிக்காமையே. ஆதலின் இவற்றைச் சமைத்துண்ணல் வேண்டும். அல்லது நன்ருய் மென்று உண்ணல் வேண்டும். இவை மிகுந்த சத்துடைமையின் சாப்பிட்ட பின் அல்லது சாப்பாட்டிற் கிடையே இவைகளை உண்ணில் எளிதிற் சமிக்காது. தேங்காய் எல்லாவகை உணவுப் பொருள்களையுமுடையது. வாதம்பருப்பு, முந்திரிப் பருப்பு, சாரப்பருப்பு முதலியன யாவரும் விரும்பத்தக்க பருப்புகளே.

பால்:—வேறு எந்த உணவும் பசும்பாலைப்போல் எல்லா உணவுப் பொருள்களையும் உடையதன்று. ஆதலின் இது நோயாளிகளுக்கும் குழந்தைகளுக்குஞ் சிறந்த உணவாம். பாலைக் காய்ச்சினுல் ஆடை படர்கிறது. அதில் பாலிலுள்ள ஊன் முதலிற் பெரும் பகுதியும், எல்லாக் கொழுப்பும் இருக்கின்றன. அதன் கிழுள்ள நீர்ப்பொருளில் எஞ்சிய ஊன்முதலும் பாலி லிருந்த எல்லா அக்காரமும் உப்புக்களும் இருக்கின்றன. ஆதலின் பாலாடை (Cream) மிகுந்த சத்துள்ள உணவாம். குழந்தை களுக்கு ஏற்குங் கொழுப்புவகையுள் இதுவே மிகச் சிறந்ததாம். இதைக் கடைந்தால் வெண்ணெயுண்டாகிறது. வெண்ணெயி னும் ஆடையே எளிதிற் சமிக்கும். ஏனெனின் மத்தால் கடைந்து திரட்டியதை, குடல் மறுபடியும் பிரித்து ஆடைபோலாக்க வேண்டியிருக்கிறது. பாலிலுள்ள அக்காரம், நச்சுக்கூடுகளாற் கெடுக்கப்படாததாதலின், சர்க்கரை வகைகளுள் மிக உயர்ந்ததாம். பாலின் உப்பில் வெடியுப்பு முதலும், உப்பு முதலும், சுண்ணம்பு முதலும், இரும்பும், தீமுறுகலும், மக்கனமு மிருப்பதால் உடற்கு வேண்டிய உப்புக்கள் யாவும் அடங்கியிருக்கின்றன. இவற்றுள் தசை வளர்ச்சிக்குத் தேவையாயிருக்கும் வெடியுப்பும், குருதி மிகுவதற்கு வேண்டிய இரும்பும் பாலில் மிகுதியாக விருக்கிற படியால் இவையிரண்டையும் பெருக்கப் பாலைப்போன்ற உணவு உலகில் வேறென்றுமில்லை. இன்னும் மூளைவேலை மிகுதியாய்ச் செய்பவர்களுக்கும், நரம்புத் தளர்ச்சியுடையோர்க்கும் இது மிகச் சிறந்த உணவாதலின், கற்றோர் இதை விரும்புவது வியப்புடைத் தன்று. ஒவ்வொருவனும் வலிமை, ஆண்மை (Virility), உயிர்ச்

சத்து (Vitality) இவைகளை விரும்புகிறான். மகளிர் இவைகளுள் வலிமைக்குப் பதிலாக அழகையும், மென்மையையும் (grace), ஆண்மைக்குப் பதிலாகக் கவர்ச்சியையும் (charm) உள்ளக் கிளர்ச்சியையும் (Vivacity) விரும்புகின்றனர். பால் ஒன்றே இவை யாவற்றையும் எஞ்சாது அளிக்கும் உணவாகும். தாய்ப் பாலைவிடப் பசுப்பாலில் ஊன் பொருள் மிகுத்திருப்பதால் இதைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் பொழுது அப்பள உப்பு அல்லது சுண்ணம்பு, சர்க்கரை, சிறிது கொழுப்புச் சேர்த்துக் காய்ச்சிப் புகட்டவேண்டும்.

குழந்தையின் பருவத்திற்குத் தக்கவாறு இவைகளைக் கலக்கும் அளவாவது :—

| எண் | பொருள். | 1 திங்கள். | 2-தி | 3-தி | 6-தி | 9-தி |
|---|---|---|---|---|---|---|
| 1 | பால் | 5 பங்கு | 1 அவுன்சு | $1\frac{1}{2}$ அவுன்சு | 4 அவுன்சு | 6 அவுன்சு |
| 2 | நீர் | 10 ,, | $1\frac{1}{2}$ ,, | $1\frac{1}{2}$ ,, | 2 ,, | 2 ,, |
| 3 | ஆடை | $\frac{1}{2}$ ,, | $\frac{2}{3}$ ,, | $\frac{1}{2}$ ,, | | |
| 4 | அக்காரம் (பாலி) | 1/16 ,, | $\frac{1}{8}$ ,, | $\frac{1}{8}$ ,, | 3/16 ,, | 3/16 ,, |

எந்த உணவுப் பொருளையும் (சிறப்பாகப் பாலைக்) காற்றுப் படத் திறந்து வைத்தல் கூடாது. ஏனெனில் காற்றிலுள்ள நச்சுக் கூடுகள் படிந்து கெடுத்துவிடும். தூயகலத்தில் நிறையப் பெய்து நன்றாய் மூடிவைத்தால் காற்றுப்படாது. நெடுநாள்கூடத் தூய தாயிருக்கும். (இவ்வாறுதான் தகர டப்பிகளில் பால் வருவது.) கறக்கும் பொழுதும் தூய கைகளால் தூய கலத்தில் கறக்க வேண்டும்.

புலால்:—இது இருவகை. ஒன்று ஆடு, மாடு, பறவைகள் முதலியவற்றின் இறைச்சி. மற்றொன்று மீன். இவைகளுள்

இறைச்சி எளிதில் சமிக்கும். அதிலுள்ள ஊன்முதல் உடலில் எளிதிற் சோரக்கூடியது. மீன், இறைச்சியைவிடச் சத்துடையதுமன்று. எளிதிற் சமிக்கக்கூடியது மன்று. அதில் வெளிச்சு மெழுகு மிகுதியாய் இருக்கிறதாக நினைப்பதுந் தவறே.

நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களின் அளவு :— இத்தகைய உணவு வகைகளுள் அகப்பட்டதைக் கொண்டு, விரும்பியவாறு சமைத்து மூக்கைப்பிடிக்க உண்பதே மிகப்பலரின் வழக்கமாயிருக்கிறது. இங்ஙனம் சிலர் மிகுத்துண்டும், சிலர் குறைத்துண்டும் நோய்க்கு இடங் கொடுக்கின்றனர். இவ்வாறன்றி வேண்டிய அளவு உண்டு நோய்க்கிடங் கொடாதவரே அறிவுடையோராவர். இந்த அளவு மாந்தர்களின் ஆண்டு, உடலின் நிறை, தசைகள் செய்யும் வேலை, வாழும் நாட்டின் சூட்டுநிலை, அணியும் உடை இவைகளைப் பொறுத்திருக்கிறது. சிறு குழவியாயிருக்கும் பொழுது அளவு மிகக்குறைவாய் ஆறேழு முறை உண்பதும், வளர வளர முறை குறைய அளவுமிக உண்பதும், நடுப்பருவத்து அளவு இன்னும் மிகுதியாக மூன்று அல்லது நான்குவேளை யுண்பதும், முதுமையில் அளவையும் முறையையுங் குறைத்துண்பதுமே ஆண்டிற்குத்தக்க அளவாம். நிறைப்படி பார்க்கின் (சராசரி) உடல் வேலை செய்யும் ஒவ்வொருவனும் நாளொன்றிற்குத் தன் நிறையில் நூற்றுக்கு நான்கு விழுக்காடு (Percent) நீரும், ஒன்று விழுக்காடு கட்டியுணவும் உண்ண வேண்டும். இக்கட்டியுணவை வகைப்படி பிரித்துப் பார்த்தால் ·68 நூற்று விழுக்காடு கரிநீர்ப்பொருளும், ·135 நூற்று விழுக்காடு ஊன் முதலும், ·175 கொழுப்பும், ·05 உப்புக்களும் ஆகும்.

இக்கணக்கு நாம் நாள் ஒன்றில் கழிக்கும் பொருள்களைக் கணக்கிடுவதால் தெரிந்து கொள்ள முடிகிறது. இக்கணக்கு வருமாறு :—

| எண். | கழிவாய்கள். | நீரின் அளவு. | கரைபட்ட கட்டிப்பொருளின் அளவு. | கரிக்காற்றின் அளவு. | இவையாவற்றின் வழியேயும் தனிப் பொருள் கழிப்படும் அளவு. |
|---|---|---|---|---|---|
| 1 | நுரையீரல் | 9·6 பலம் | இல்லை. | 20·8 பலம் | கரிப்பொருள்* 6·4 பலம். வெடியுப்பு முதல் ·4 பலம். |
| 2 | தோல் | 19·2 ,, | ·2 பலம் | சிறிது. | |
| 3 | குண்டிக்காய் | 44·8 ,, | 1 பலம் மூத்திர உப்பு ·8 பலம் மற்ற உப்புக்கள் | ,, | |

* இவையிரண்டும் 16:1 என்னுந் தரத்தில் இழக்கப்படுகின்றன.

இம்முறைப்படி கணக்கிடின் சராசரி நிறையாகிய 225 சேர் பளுவிருக்கும் ஒருவன் 9 சேர் நிறை நீருப்பும், 1·53 சேர் கரிநீர்ப் பொருளையும், ·305 சேர் ஊன் முதலையும், ·305 சேர் கொழுப்பையும், ·102 சேர் உப்புக்களையும் உண்ணவேண்டும். மிகுதியாக உடலுழைப்புடையோர் ஊன் பொருளைத்தவிர ஏனைய பொருள்களை மிகுத்துண்ணவேண்டும். ஏனெனில் அவர் சூடும் வேலையையுமே உண்டாக்குவதால் தசை வளர்ச்சிக்கேற்ற ஊன் முதலை மிகைபட உண்ணவேண்டியதில்லை. குளிர்நாட்டில் வாழ்வோர் மிகுதியாகச் சூடுண்டாக்கும் கொழுப்புப் பொருள்களை உண்ணவேண்டும். மிகுதியாக உடை அணிவதால் உடற்சூடு மிகக் குறைவாகவே வெளிப்படுமாதலின், கரிநீர்ப் பொருள்களைக் குறைவாகவே உண்ணவேண்டும்.

உணவுகளிலுள்ள பல்வகைப் பொருள்களின் அளவுகள் :—இவ்வாறு அளவுப்படி உண்ண நாள் ஒன்றிற்கு எவ்வளவு அரிசி, பருப்பு, காய்கறி, நெய் முதலியவை வேண்டியனவென்று தெரிந்து கொள்ள வேண்டுமன்றோ? அதற்கு ஒவ்வொரு பொருளிலும் எவ்வளவு உணவுப் பொருள்கள் இருக்கின்றனவென்று கண்டால் கணக்குப்படி எடுத்துப்பயன் படுத்தலாமன்றோ? அதற்காகப் பின்வரும் வகுப்புவாரியில் ஒரு சேர் நிறையுள்ள ஒவ்வொரு பொருளிலும் எத்துணைச் சேர் உணவுப் பொருள்களிருக்கின்றன வென்று குறிக்கப்பட்டிருக்கிறது.

1 பலம் உலர்ந்த நீரில்லாத கரிநீர் முதலாவது, ஊன் முதலாவது எரிவதால் 145 பெருஞ் சூட்டளவு சூடும், 1 பலம் கொழுப்பு எரிவதால் 329 பெருஞ்சூட்டளவு சூடும் உண்டாகின்றன. சராசரி வேலை செய்யும் ஒருவன் நாள் ஒன்றிற்கு 2700 சூட்டளவு சூடு உண்டுபண்ணும் உணவுப் பொருள்களை உண்டாற் போதுமென்று கணக்கிட்டிருக்கின்றனர். பார்க் என்பார் கண்டுபிடித்த அளவாவது :— (Parke's Table)

| எண். | உணவுப் பொருள் வகை. | வேலையின்மை. | சராசரி வேலை. | கடுமையான வேலை. |
|---|---|---|---|---|
| 1 | ஊன் பொருள் | 2·4 பலம் | 4 பலம் | 4·8— 5·6 பலம் |
| 2 | கொழுப்பு | 1·2 ,, | 2·4 ,, | 2·8— 3·2 ,, |
| 3 | கரிநீர் முதல் | 9.6 ,, | 12 ,, | 12·8—14·4 ,, |

## வகுப்பு வாரி.

| எண். | உணவின் பெயர். | ஊன்முதல். | கொழுப்பு. | சர்க்கரை. | மாப்பொருள். | உப்புக்கள். | நீர். | மரப்பொருள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அரிசி வகை (Cereal Grains) குத்தினவை. | | | | | | | |
| 1 | நெல்லரிசி ... | ·065 | ·006 | ... | ·791 | ·006 | ·128 | ·014 |
| 2 | கம்பு ... | ·104 | ·033 | ... | ·715 | ·020 | ·113 | ·015 |
| 3 | சோளம் ... | ·095 | ·036 | ... | ·707 | ·017 | ·125 | ·022 |
| 4 | கேழ்வரகு ... | ·073 | ·015 | ... | ·732 | ·023 | ·132 | ·025 |
| 5 | மக்காச்சோளம் ... | ·093 | ·020 | ... | ·723 | ·017 | ·125 | ·022 |
| 6 | வரகு ... | ·126 | ·036 | ... | ·694 | ·012 | ·120 | ·010 |
| 7 | தினை ... | ·108 | ·029 | ... | ·734 | ·012 | ·102 | ·015 |
| 8 | கோதுமை ... | ·135 | ·012 | ... | ·684 | ·017 | ·125 | ·025 |

| எண். | உணவின் பெயர். | | ஊன்முதல். | கொழுப்பு. | சர்க்கரை. | மாப்பொருள். | உப்புக்கள். | நீர். | மரப்பொருள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **முதிரைகள் (Leguminous grains or Pulses or Lentils).** | | | | | | | | |
| 1 | கடலை | ... | ·217 | ·042 | ... | ·590 | ·026 | ·115 | ·016 |
| 2 | உழுந்து | ... | ·249 | ·013 | ... | ·595 | ·022 | ·118 | ·012 |
| 3 | துவரம் பருப்பு | ... | ·236 | ·015 | ... | ·575 | ·025 | ·118 | ·010 |
| 4 | வேர்க்கடலை | ... | ·245 | ·500 | ... | ·117 | ·018 | ·075 | ·045 |
| 5 | மொச்சைக்கொட்டை | ... | ·353 | ·189 | ... | ·260 | ·046 | ·110 | ·042 |
| | **காய்கறிகள்.** | | | | | | | | |
| 1 | உருளைக்கிழங்கு | ... | ·025 | ·001 | ... | ·211 | ·013 | ·740 | ·010 |
| 2 | முட்டைக்கீரை | ... | ·02 | ·03 | ... | ·058 | ·007 | ·91 | ·015 |
| 3 | முள்ளங்கி | ... | ·005 | ·006 | ... | ·101 | ·006 | ·867 | ·015 |
| 4 | வெள்ளரி | ... | ... | ... | ... | ... | ... | ·960 | ·005 |
| 5 | பசலைக்கீரை | ... | ·021 | ... | ... | ·003 | ... | ·90 | ·011 |
| 6 | தக்காளி | ... | ·013 | ... | ·040 | ... | ... | ·919 | ... |
| 7 | கொம்மட்டி | ... | ·007 | ... | ·076 | .. | ... | ·92 | .... |
| 8 | வாழைக்காய் | ... | ·025 | ·001 | ... | ·211 | ·013 | ·740 | ·010 |
| 9 | வெங்காயம் | ... | ·015 | ... | .... | ·101 | ... | ·891 | ·020 |

| எண். | உணவின் பெயர். | ஊன்முதல். | கொழுப்பு. | சர்க்கரை. | மாப்பொருள். | உப்புக்கள். | நீர். | மரப்பொருள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **பழங்கள்.** | | | | | | | |
| 1 | சீமை இலந்தை ... | ·005 | ... | ·098 | ... | ·005 | ·84 | ·052 |
| 2 | நாவல் ... | ·005 | ... | ·040 | ... | ·004 | ·86 | ·01 |
| 3 | வெள்ளரிப்பழம் ... | ·010 | ... | ·054 | ... | ·014 | ·908 | ... |
| 4 | எலுமிச்சம்பழம் ... | ·010 | ... | ·02 | ... | ·072 | ·840 | ... |
| 5 | நாரத்தம்பழம் ... | ·011 | ... | ·100 | ... | ·013 | ·85 | ... |
| 6 | கொடி முந்திரிப்பழம் ... | ·01 | ... | ·1 to ·16 | ... | ·01– .05 | ·83 | ... |
| 7 | காய்ந்த முந்திரிப்பழம் ... | ... | ... | ·02 | ... | ·058 | ·86 | ... |
| * 8 | அத்திப்பழம் (காய்ந்தது) | ·055 | ... | ·628 | ... | ... | ·2 | ... |
| 9 | பேரீச்சம்பழம் ... | ·044 | ... | ·657 | ... | ... | ·208 | ... |
| 10 | வாழைப்பழம் ... | ·050 | ... | ·20 | ... | ... | ·75 | ... |
| † 11 | தேன் ... | ... | ... | ·6–·75 | ... | ... | ... | ... |
| | **கோட்டைகள். (பருப்புகள்)** | | | | | | | |
| 1 | வாதாம் பருப்பு ... | ·235 | ·53 | ... | ·12 | ... | ·078 | ... |
| 2 | தேங்காய் (பருப்பு) ... | ·052 | ·359 | ... | ·084 | ·010 | ·466 | ·029 |
| 3 | ஷை (காய்ந்தது) ... | ·06 | ·574 | ... | ·318 | ·013 | ·035 | ... |
| 4 | ஷை (பால்) ... | ·005 | ... | ... | ·09 | ... | ·903 | ... |

* சிறிது பேதியுண்டாக்கும். † எளிதிற் சமிக்கும்.

| எண். | உணவின் பெயர். | ஊன்முதல். | கொழுப்பு. | சர்க்கரை. | மாப்பொருள். | உப்புக்கள். | நீர். | மரப்பொருள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பால் வகை. | | | | | | | |
| 1 | முலைப்பால் ... | ·02 | ·035 | ·07 | ... | ·002 | ·873 | ... |
| 2 | பசும்பால் ... | ·04 | ·035 | ·04 | ... | ·007 | ·878 | ... |
| 3 | எருமைப்பால் ... | ·02 | ·08 | ·07 | ... | ·002 | ·828 | ... |
| 4 | ஆட்டுப்பால் ... | ·037 | ·042 | ·04 | ... | ·005 | ·876 | ... |
| 5 | பாலாடை (கட்டி) ... | ·335 | ·243 | ... | ... | ·054 | ·368 | ... |
| 6 | வெண்ணெய் ... | ·040 | ·810 | ... | ... | ·125 | ·025 | ... |
| 7 | நெய் ... | ... | ·99 | ... | ... | ... | ... | ... |
| 8 | பீர் (சாராயம்) ... | ... | ·01 | ... | ·10 | ... | ·89 | ... |
| | புலால் வகை. | | | | | | | |
| 1 | ஆட்டிறைச்சி ... | ·183 | ·049 | ... | ... | ·048 | ·720 | ... |
| 2 | மீன் ... | ·160 | ·050 | ... | ... | ·010 | ·780 | ... |
| 3 | கோழி ... | ·210 | ·038 | ... | ... | ·012 | ·740 | ... |
| 4 | முட்டை ... | ·14 | ·105 | ... | ... | ·015 | ·740 | ... |
| 5 | ஷை (மஞ்சட்கரு) ... | ·16 | ·307 | ... | ... | ·013 | ·520 | ... |
| 6 | ஷை (வெள்ளைக்கரு) | ·104 | ... | ... | ... | ·016 | ·780 | ... |
| 7 | நத்தைகள் ... | ·175 | ·005 | ... | ... | ·015 | ·800 | ... |

வகுப்புவாரியைப்பற்றிய சில ஆராய்ச்சிகள் :—நாம் நெல்லரிசியிலிருந்தே வேண்டிய கரிநீர்ப் பொருளையடைய நாள் ஒன்றிற்குச் சுமார் இரண்டுசேர் எடுத்துக்கொண்டாற்போதும். ஆனால் இதில் நமக்கு வேண்டிய ஊன்முதலில் ஐந்தில் ஒருபங்கும், கொழுப்பில் ஐம்பதில் ஒருபங்குந்தான் இருப்பதால், அரிசியிலிருந்தே ஊன் பொருளை அடைய 10 சேரும், கொழுப்பை யடைய 100 சேரும் உண்ணவேண்டியதாயிருக்கும். இவ்வளவு உண்ண நம்மால் முடியாது, முடிந்தாலும் சுவைதராது தெவிட்டி விடும். ஆதலின் ஊன்முதல் மிகுத்துள்ள துவரை போன்ற முதிரை வகையில் ஒன்றையும், கொழுப்புமிகுத்துள்ள நெய்யையுங்கூட்டி உண்ணல் எல்லா உணவுப் பொருள்களையுங் கொடுப்பதில் கைகண்டதாகும். இதுபற்றி, ஒருவனுக்கு நாள் ஒன்றிற்குச் சராசரியாக ஒன்றரைச் சேர் அரிசியும், இரண்டரைப் பலம் பருப்பும், காற் சேர் நெய்யும் வேண்டும். எனவே வெறுஞ் சோற்றால் நாம் முழுச்சத்தையும் அடைய முடியாதென்பதையும், நம் நாட்டினர் பழயதைமட்டுங் காலை உணவாகக் கொள்ளல் மதியின்மையாதலின், ஆடைத்தயிர், பருப்புக் கறிவகைகளுடன் உண்ணவே தக்க உணவாமென்பதையும் நன்குணர வேண்டும்.

மிகுவதாலுங் குறைவதாலும் உண்டாகும் நன்மை தீமைகள் :—மேற்கண்ட வகுப்புவாரியைக்கொண்டு மிகக் கணக்காகச் சமைத்தல் எளிதுமன்று, சுவையைத் தரத்தக்கதுமன்று. உணவில் பல பொருள்களின் கலப்பிருக்கவேண்டும், செலவுங் குறைவாயிருக்கவேண்டும், சுவையுங் குன்றக்கூடாது. ஆதலின் இவ்வகுப்பு வாரியை ஓர் வழிகாட்டியாகக் கொண்டு, அதற்குத் தக்கவாறு கரிநீர்ப்பொருள் மிகுத்த ஒரு பொருளுடன் ஊன் பொருள் மிகுத்த ஒரு பொருளையும், கொழுப்பு மிகுத்த மற்றொரு பொருளையுஞ் சேர்த்துச் சமையல் செய்யவேண்டும். இவ்வாறு செய்யும்போது ஊன்முதல் குறையாமற் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இதிலுள்ள உடலை வளர்க்கும் வெடியுப்பு முதலை வேறெப்பொருளுங் கொடுக்காது. ஆனால் ஊன் பொருளும், கரிநீர் முதற்பொருளும் கொழுப்பாக மாறும் இயல்புடையனவாதலின், கொழுப்புக் குறையிற் குற்றமில்லை. கரிநீர்ப்

பொருள் மிகுதியாக உணவுவகைகளிலெல்லாங் காணப்பெறுவதால், அவை நம்முடற்கு வேண்டிய அளவிற் குறைந்தும்விடாது; மிகுதியாயினும் மிகக் கெடுதியுமுண்டாக்காது. ஆனல் ஊன்முதல் மிகின் உடற்கு வருமிடர் பெரிதாகலின் சிறிது குறையினும் அவ்வளவு குற்றமில்லை, மிகப்படாது. ஏனெனில் இது சமிப்பது எளிதன்று, மிகுத்திருக்கும் பங்கு உடலிற் சேமித்து வைக்கப் பெறாது; இம்மிக்க பங்கு குடர்களில் மூத்திர உப்பினுங் கொடிய நச்சாகமாறி, உடலுட் சோர்ந்து நச்சுப்படுத்துகிறது. இன்னும் இதன் விலையும் மிகுதியே. இவ்வாறே கரிநீர் முதற்பொருள்களிலும் கொழுப்பே மிகுந்த விலையுடையது, எளிதிற் சமிக்கப்படாதது. இவை மிகினுங் குறையினும் உண்டாகும் நோய்களாவன :—

| எண். | உணவுப் பொருள் வகை. | மிகுவதாலாகும் நோய். | குறைவதாலாகும் நோய். |
|---|---|---|---|
| 1 | ஊன் பொருள். | சோம்பல், தலைவலி, சினம் உண்டாதல். | தசைவலிவிழத்தல், மெலிவு. |
| 2 | கரிநீர் முதற் பொருள். | சமிக்காமை, ஊளைச் சதை, புளித்தஏப்பம். | சுறுசுறுப் பின்மை. |
| 3 | கொழுப்பு. | பித்தம். | நரம்புத் தளர்ச்சி, நரம்பு வலி |

முதலியனவாம். இவைகளை நீக்க அளவுப்படி உண்ணவேண்டும்.

சமையல் :—இம் முப்பொருள்களுங் கூடிய பல்வகைப் பண்டங்களை நாம் பலவகையாகச் சமைத்துண்கிறேம். இவ்வகை ஐந்தாம். தோசை, அப்பம் முதலியவைகளைச் சுடு கல்லின் மேலாவது, சுட்ட இரும்புத் தகட்டின் மேலாவது ஊற்றிச் சுடல் (2) இட்டலி, பிட்டு, கொழுக்கட்டை முதலியவைகளைக் கொதிநீராவியில் அவித்தல் (3) அரிசி, பருப்பு, கடலை, பயறு முதலியவைகளை நீரில் வேகவைத்தல் (4) பணிகாரம், முருக்கு, சீடை முதலியவைகளை எண்ணெயில் அல்லது நெய்யில் வறுத்தல்

(5) அப்பளம், நெருப்பு ரொட்டி, இறைச்சி முதலியவற்றைச் சுடு காற்றில் வாட்டல். இவ்வைந்தில் அவித்துண்ணல் உடற்கு மிக நலந்தரும். எளிதில் சமிக்கும். வேகவைத்தல், வறுத்தல், சுடல், வாட்டல் இவை படிப்படியாய்க் குறைந்த நலந்தரும். இவ்வாறு சமையல் செய்வதால் நமக்குப் பல நன்மைகளுந் தீமைகளு முண்டாகின்றன. நன்மைகளாவன :—(க) சுவையும் மணமும் சமைக்கப்பட்ட உணவில் மிகுகிறதால் உண்ண இன்பந்தரும். (உ) உணவுப் பொருள்களிலுள்ள நச்சுக் கூடுகள் மாள்வதால் உடல் நலனுறும் (ங) மெல்வதற்குஞ் சமிப்பதற்குந் தக்கவாறு உணவு பதன்படுகிறது. புலால், பால்வகையல்லாத ஏனைய உணவுப் பண்டங்களிலுள்ள மாப்பொருள், மாப்பொருள்களை மூடியிருப்பதால் இம்மாப்பொருள் சமிக்கப்படாததன்றி இத னுள்ளுள்ள மாப்பொருளுஞ் சமிக்கப்பெறாது வீணாகக்கழிபடு கிறது. ஆனால் அவித்தல், வேகவைத்தல் முதலிய வழிகளால் இம் மாப்பொருள் வெடிக்க மாப்பொருள் வெளிப்பட்டு எளிதிற் சமிக்கப் பெறுகிறது. இவ்வாறின்றிப் பச்சையாகத் தின்பதினால் குடர்கள் வருந்தியுழைக்க வேண்டியதாயிருப்பதால் வயிற்று வலி யுண்டாகிறது. (ச) பல உணவுப் பொருள்கள் பலவகையாகக் கலக்கப்பெறலின் சுவையும் புதியவகை உணவுகளும் உண்டா கின்றன. (ரு) இறைச்சி வகைகள் சமைக்கப் பெறுவதால் மக்களுக்குச் சிறிதும் விருப்பமில்லாத குருதி நிறம்மாறி உண்ணற் காகின்றன. இவையன்றி, சமைப்பதாலுண்டாகுந் தீமை களாவன :—(க) ஊன் முதல் கட்டியாகிறது. எளிதில் சமிக்கிற தில்லை (உ) இயற்கைச் சுவை யணங்குன்றுகிறது (ங) கலப்பு மிகுகிறது ; அப்பள உப்பைப்போன்ற எளிதில் சமிக்காத பொருள்கள் சேர்க்கப்படுகின்றன (ச) சமைக்கப்பட்ட காய் கறிகள் சடுதியிற் புளிப்படைந்து கெடுகின்றன (ரு) மீதூண் விரும்பற் கேதுவாகிறது. (சு) மிகு மெதுவாக மெல்லப் படாமல் விழுங்கப்பெறுகிறது. (எ) சில உணவுப் பண்டங் களிலுள்ள ஒரு வகை உயிர்ச்சத்து கெட்டுப்போகிறது.† இத்

† இவ்வுயிர்ச் சத்துக்கள் யாவென்பதைப் பின் உயிர்ச் சத்துக்கள் என் னுந் தலைப்பின் கீழ்ப்பார்க்க.

தீமைகள் இருப்பதால் சமைக்காதே உண்ணவேண்டுமென்று நினைத்துவிடக்கூடாது. ஏனெனில் முற்கூறிய சிறந்த நன்மைகளை இழக்க வேண்டியதாயிருக்கும். ஆதலின் சமைக்கவும் வேண்டும்; இத்தீமைகளை அடையாதிருக்கவும் வழிதேட வேண்டும். அவ்வழிகள் முறையே யாவெனின் :—(க) பால், முட்டை முதலிய சில பொருள்களை நன்றாய்க் காய்ச்சாது அல்லது வேகவைக்காதுண்ணவேண்டும். பச்சை முட்டை சமிக்க $1\frac{1}{2}$-மணி நேரமும், வேகவைத்த முட்டை சமிக்க $3\frac{1}{2}$-மணி நேரமும் வேண்டியதாயிருப்பதால் அரைவேக்காட்டிலுண்ணவேண்டும். நன்றாய் வேகவைக்கப்பட்ட ஊன் பொருள்களும் கொழுப்புடன் கூடின் எளிதிற் சமிக்குமாதலின் இவைகளுடன் நெய், எண்ணெய் சேர்த்துச் சமைத்துண்ணல் நன்றே. (உ) இயற்கை மணஞ் சுவை குன்றினுஞ் செயற்கை மணஞ் சுவைகளை உண்டுபண்ணிக் கொள்ளக்கூடும். (ங) எளிதில் சமிக்காத அப்பள உப்பு முதலியவற்றை நீக்கி மிளகு, கடுகு, பெருங்காயம் முதலிய சமிக்கவைக்கும் பொருள்களைச் சிறிது சேர்த்துக்கொள்ளலாம். கூடியவரையில் கலப்புமிகாமற் பார்த்துக்கொள்ள வேண்டும். (ச) சமைத்தவுடன் அல்லது கூடிய சடுதியில் சாப்பிட்டுவிட வேண்டும். ஆறினவை, பழங்கறிகள் முதலியன மிகக்கேட்டைத் தருவனவாதலின் அவைகளை நீக்கவேண்டும் அல்லது நன்றாய்ச் சுடவைத்துண்ணவேண்டும். (ரு) என்ன சுவையாயிருப்பினும் வேண்டிய அளவிற்கு மேலுண்பதில்லை யென்னும் பிடிவாதத்தைக் கொள்ள வேண்டும். இதற்கு, முதலில் இலையிற் படைக்கப்பட்டதற்கு மேல் வாங்கிக்கொள்ளாததும், முதலிற் படைக்கப்படும்பொழுதும் தக்க அளவுக்குச் சிறிது உட்பட்டதாகவே எடுத்துக்கொள்வதுந் தக்க பழக்கங்களாம். (சு) நன்றாய் மென்றுண்ணும் பழக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும். (எ) சமைப்பதாற்கெடும் உயிர்ச் சத்துக்களைப் பச்சையாகத் தின்று அடையக்கூடிய பண்டங்களிலிருந்து பெறவேண்டும்.

## உணவென்று எண்ணப்படாத உணவுகள்.

இவ்வாறு தக்கபடி சமைத்தோ சமைக்காமலோ உண்ணப்படும் பண்டங்களிலுள்ள கரி நீர்ப்பொருள், கொழுப்பு, ஊன்

முதல் ஆகிய முப்பொருள்கள்மட்டும் நம்முணவாகின்றன வென்றும், இவற்றின் உதவியால் மட்டும் நாம் வாழ்ந்துவிடலா மென்றும் நினைத்துவிடக்கூடாது. உப்பும் நீரும் காற்றும் வெளிச்சமும் நமக்கு இன்றியமையாத உணவுகளே. இவையே யன்றிச் சில ஆண்டுகளாகப் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டுவருகிற உயிர்ச் சத்துக்களும் (Vitamins) நம் உணவுப் பண்டங்கள் பலவற்றில் இயற்கையாய் இருந்து பல நோய்களைத் தடுப்பதன்றி இன்றியமையாத சில பயன்களையு மளிப்பதாகக் கண்டுபிடித்திருக் கின்றனர். இத்தகைய பொருள்களின் பயன்களையும் இன்றியமை யாமையையுங் கூறுவாம்.

**உப்புக்களின் உணவுத் தன்மை :—**உப்புக்கள் உணவிற்குச் சுவையைத் தருவதற்காக மட்டும் பயன் படுத்தப்படுகின்றன வென்று நாம் நினைக்கவியலாது; சோற்றுப்பைத் தவிர உடற்கு வேறெந்த உப்பும் வேண்டியதில்லை யென்று நினைப்பதுந் தவறு. முதலாவதாக எலும்புகளில் சுண்ணும்புச்சத்து இருப்பதால் அவை வலியாதபடி உறுதியாகின்றனவென்பதை முன் கண்டோம்*. ஆதலின் இச் சத்துள்ள பண்டங்களை யுண்டாற்றான் எலும்புகள் நலமுறும். பாலில் இவ்வுப்பிருக்கிற தெனின் நீங்கள் வியப்புறுவீர்கள். இது இருக்கும் அளவோ சுண்ணும்பு நீரில் (Lime Water) இருப்பதினும் மிகுந்ததே. இதனுல் எலும்புகள் வளர்ந்துகொண்டே யிருக்கும் இளங்குழவி களுக்குப் பால் எத்துணை இன்றியமையாததென்பதை எண்ணிப் பாருங்கள். இரண்டாவதாகக் குருதியிலுள்ள அப்பளாகார உப்பின் உதவியால் கரிக்காற்று நீக்கப்பெறுவதை மூச்சுறுப்புப் படலத்துட் கண்டோம்†. இனி இப்படலத்திலே சோற்றுப் பிலிருந்து உப்புப் புளிப்புண்டாகி அதனுல் உணவுப்பொருள் தீனிப்பையில் சமிக்கப்பெறுவதன்றிப் பலவகையான நச்சுக்கூடுகள் கொல்லப்படுகின்றன வென்பதை அறிவோம். இவ்வுப்பை மிகுதியாக உண்டால் நீர்வேட்கை யுறுவோம். ‡ எனெனின்.

* துணர். ௩. 307-ம் பக்கம். ஷ † 396-ம் பக்கம். ‡ பலர் உடற்கு வேண்டிய அளவிற்குமேல் உண்கின்றனர். சளிபிடிக்கும் இயல்புடை யோர் இதைக் குறைத்துண்ணவேண்டும்.

நம்முடலின் உப்பு கடல் நீரிலிருக்கும் அளவிற்கு மிகின் கெடுதி யுண்டாக்குந் தன்மை யுடையதால் நீர்வேட்கை யுறுவித்து நீரை யுண்டதும் உப்பின் அளவு குன்றக்கப்பட்டு தக்க அளவுறுகிறது. என்ன விந்தை! உப்புக்கள் அரிசியிலும், பலவகைக் காய்கறி களிலும் கீரைகளிலுமிருக்கின்றன. இவற்றுள் அரிசியின் வெளிப்புறத்திலே உப்புக்கள் இருப்பதால் அரிசியை மழுங்கத் தீட்டுவதால் இவற்றை இழந்துவிடுகிறோம். இவ்வுப்பு உடற்கு இல்லாததால் திமிர்நோய் (Beri Beri) உண்டாகிறது. இவ் வுப்புக்களை நாமே உண்டுபண்ணி உண்பதால் இந்நோய் நீங்குவ தில்லை. ஏனெனில் இவ்வுப்புக்கள் அரிசியுடன் உயிர்ச்சேர்க்கை யால் (Vital connection) இணைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று உய்த்துணரப்படுகிறது. இவ்வுப்புக்களுட் சிறந்தது தீமுறுகற் கூட்டுகளாம் (Phosphorous compound). இக்கூட்டுகள் அரிசியிலன்றிப் பருப்பு, மொச்சை, கோதுமை முதலியவற்றிலும் உள. காய்கறி, கீரை முதலியவற்றைச் சமைக்கும் போது தண் ணீரிலிட்டு வேகவைத்து உப்புக்கள் கரைந்துள்ள அத்தண்ணீரை இறுத்துவிடக்கூடாது. ஏனெனில் காய்கறிகளின் சிறப்பு அவற்றிலுள்ள உப்புக்களைப் பொறுத்ததே. சிறந்த உப்புக்கள் காணப்பெறும் பண்டங்களாவன :— உப்புமுதல் (Sodium) இறைச்சியிலும்; வெடியுப்பு முதல் (Pottassium) காய்கறிகளிலும் அவற்றுட் சிறப்பாய் உருளைக்கிழங்கிலும் ; சுண்ண முதல் (Calcium) பால், முட்டை, தண்ணீர்விட்டான் கிழங்கிலும் (Asparagus); மக்னம் (Magnesium) இக்கிழங்கிலேயும், இரும்பு பசலை, முட்டையின் மஞ்சட்கரு, இறைச்சி, சீமை இலந்தையி லும், தீமெழுகும், கந்தகமும் பெரும்பாலும் எல்லா ஊன்பொருள் மிகுந்த உணவுகளிலும் சிறப்பாய்ப் பாலாடை (cream), மொச்சை, இறைச்சியிலும் இருக்கின்றன.

**நீர் இன்றியமையாத தாவதேன்:**—நீரை உணவுப் பொரு ளென்று நீங்கள் நினையாதிருக்கக்கூடும். ஆனால் நீரே நம்முடற்கு அடிப்படை. நம்முடல் நிறையில் மூன்றிலிருபங்கு நீராகும். நம்முடற் கூடுகள் யாவும் நீரிலே அதுவும் ஓடுகின்ற நீரிலே வாழுகின்றன. நீரே இவற்றிற்கெல்லாம் உணவுகொண்டு செல்

கின்றது. நீரே இவற்றின் கழிபொருள்களை நீக்குகிறது. இவ்வாறு நீக்குங்கால் அழுக்கடைந்த நீர் நீங்குகிறது. இவ்வாறு நீங்கும் நீர் நாள் ஒன்றிற்கு ஒன்பது சேர் நிறைக்குக் குறையாததாகும். இக்குறைவை நிரப்ப எட்டுச்சேர் நீரை நீங்க நீங்கச் சிறிது சிறிதாக உட்கொள்ளவேண்டும். பாக்கி ஒருசேர் உடலின் எரிபொருள்கள் எரிவதால் உண்டாகிவிடுகிறது. சுமார் எட்டுச் சேர் உண்ணுவிடில் நாம் நீர் வேட்கையுறுவோம். இவ்வேட்கை மிக மிக நல்ல நீர் கிடைக்காவிடில் நாம் எதை வேண்டுமானாலும் பருக முன் வருவோம். ஒன்றுங் கிடைக்காவிடில் மூன்று நான்கு நாளில் பித்துப்பிடித்துப் பின் இறக்க வேண்டியதுதான். நாம் நாற்பது நாள் வரையிலுங்கூடச் சோறில்லாதிருந்து விடலாம். ஏனெனின் நம்முடல் அவ்வளவு நாட்களுக்கு வேண்டிய கொழுப்பைச் சேமித்து வைத்திருக்கிறது. ஆனால் மூன்று நான்கு நாட்களுக்கு மேல் வேண்டிய நீரைச் சேமித்து வைக்க அதற்கு முடியாது. ஒரு சுரங்கத்தின் வாயிலில் மண் விழுந்ததால் சில வேலையாட்கள் புதைபட்டுப் போயினர். எழு நாட்களுக்குப் பின் வாயில் திறவுபட்ட பொழுது மிகப்பலர் இறந்தும் சிலரே உயிருடனுமிருந்தனர். இறந்தோர் உடலில் பின்னும் பன்னாட்கட்கு உணவுப் பொருளிருந்தும் அதைப் பலப்பல கூடுகளுக்குங் கொண்டு செல்ல நீரில்லாதிருந்ததால் இவர் மாண்டனர். ஆதலின் உண்ணு நோன்பியற்றுவோரும் நீரைப் பருகித்தான் தீர வேண்டும். வளரும் இயல்புடைய குழவிகளுக்குஞ் சிறுவர்களுக்கும் இது இன்னும் மிகுதியாயும் அடிக்கடியுந் தேவையாயிருக்கும். ஆதலின் இன்னார்க்கு நீர் வேட்கை யுண்டாம்போது தவருது நீரைக் கொடுக்கவேண்டும். நீர் உணவின் வழியேயும், காப்பி, தேநீர் முதலிய குடிவகை வழியேயும் உட்கொள்ளப்படுகிறது. இவைகளைக் குறைத்துத் தூயநீராய் உட்கொள்ளலே நன்று. ஏனெனின் நீரின் ஒரு பெருந்தொழில் கழி பொருள்களைக் கரைத்து நீக்குவதாகையால் தூயநீரே இதற்குத்தக்கதாம். காலையிலெழுந்ததும், இரவிற் படுக்கப்புகும் பொழுதுந் தூநீருண்கை மிகநன்று. இதனுல் குடர்கள் கழுவப்பெற்று கழிபொருள்கள் துப்புரவாய் நீக்கப் பெறும். மிகக் கொழுத்துள்ளோரும்,

நீர்த்தங்கல் (சலோதரம்) முதலிய நோயுடையோரும் உடலில் 8 சேர் நிறை நீரைத் தசைகளுக் கிடையே கொண்டிருப்பர். இதை நீக்க முயலல் வேண்டும். ஊன்முதல் மிகையாக உண்போரின் தசைநார்கள் நீரைக் குறைவாயும், கொழுப்பு, கரிநீர்ப் பொருள்களை மிகுதியாக உண்போரின் தசை நார்கள் நீரை மிகுதியாயும் சேமிக்கும் இயல் புடையவாதலால் நீர்த்தங்கல் முதலிய நோயுடையோர் தக்கபடி உணவை அளவுபடுத்த வேண்டும்.

**காற்றும் உணவே:**—நீரினும் அடிக்கடி நம்முடல் வேண்டுவது காற்றேயாம். இஃதில்லாது சில துடிநேரந்தான் உயிர்வாழலாம். அதற்குள்ளுந் திக்குமுக்காடி விடுவோம். இதைக் குறித்தே பெரியாராகிய இயேசுகிறித்து, கடவுளைக் காணவிரும்பும் ஒவ்வொருவனும் நீருள் மூழ்கிவிட்டால் காற்றையடைய எவ்வளவு தவிப்பானோ அவ்வளவு ஆற்றுமையடைய வேண்டுமென்றார். இக்காற்றுந் தூயதாயிருக்க வேண்டுமென்றும் இதை அழுக்குப்படுத்துங் கரிக்காற்று 10,000ல் ஆறு பங்கிற்கு மிகுதியாயின் மூச்சுவிடத் தகாததென்றுங் கண்டோம். இக்காற்றிலுள்ள உயிர்க்காற்றே உணவுப் பொருள்களிலுள்ள கரிப்பொருள், நீர்முதலை எரிய வைப்பதால் இவ்வெரிபொருள்கள் நம்முடற்கு எவ்வாறு உணவாகக் கருதப்படுகின்றனவோ அவ்வாறே இக் காற்றுங் கருதப்பட வேண்டுமன்றோ?

**ஞாயிற்றின் பல்கதிர்கள் உணவாம் வழி:**—ஞாயிற்றின் ஒளிக்கதிர்களும் (Light Rays) காணமுடியாத பல அளவு அலை நீளமுள்ள (Wave Length) சூட்டுக்கதிர்களுமே (Heat Rays) உயிர்களை உண்டாக்குந்திறல் வாய்ந்தன. இவைகளாற்றான் புற்பூண்டுகளும், இவைகளின் உதவியாற்றான் பறவைகள், விலங்குகள், மக்களும் உண்டாயிருக்கின்றனர். புற்பூண்டுகள் சேமித்து வைத்த ஞாயிற்றின் திறலையே (Energy) விலங்குகளும் நாமும் பயன் படுத்துகிறோம். இதுவன்றி இவ்வொளிக் கதிர்களாலும் சூட்டுக் கதிர்களாலும் நீர்நிலைகள் தூய்மையடைகின்றன. குளம் ஆறுகளிலுள்ள நீர் எப்பொழுதுந் தூய்மையுடையதாயிருக்க,

அந்நீரையே சுடாத்து எடுத்து வைத்திருப்பின் இரண்டொரு நாளிற் கெட்டுவிடுகிறதே! ஏனென்று தெரியுமா? மேற்கண்ட நீர் நிலைகளில் வெய்யில் படுவதால் எண்ணிறந்த நச்சுக்கூடுகள் மாண்டு போகின்றன. ஒரே மணி நேரத்து வெய்யிலால் ஆங்குள்ள நச்சுக்கூடுகளுள் நூற்றில் தொண்ணூறு விழுக்காடு இறந்துவிடுகின்றன வென்று கண்டுபிடித்திருக்கின்றன ரெனின் இதன் நன்மை அளவிடற்பாலதோ! இது மட்டுமா? இவ்வெளிச்சத்தால் நம்முடற் கூடுகளுந் தசைநார்களும் அடையும் நன்மை பண்டைக்கால முதல் தெரிந்திருந்ததால் சில நோய்களை இதன் வாயிலாக நீக்கிவந்தனர். இன்னும் இவ்வொளி நம் கண்களை நலனுறச் செய்வதைப் பின்னர்க் காட்டுதும். ஈண்டுப் போதிய உணவில்லாததாலும், குறைவாக உண்ணும் உணவிலும் போதிய சத்தில்லாததாலும் உண்டாகிற கேடுகளை இவ்வெய்யில் நீக்குகிறதென்பதை நாம் நன்றுணரவேண்டும். நாட்டுப்புறத்தில் வாழும் ஏழைகள் இதனாற்றான் உணவுக் குறைவால் மிகுதியான கேடுறுவதில்லை. ஆனால் பட்டணத்தில் வசிக்கும் ஏழை மாந்தர்கள் இவ்வெய்யில் கூடக் கிடைக்காத நெருங்கிய இருட்டு வீடுகளில் வாழ்வதால் கூட்டங் கூட்டமாக இறக்கின்றனர். வெய்யில் படுவதால் மூச்சுவிடும் எண்ணிக்கையும் அளவும் மிகுகிறதென்றுங்கண்டோம். ஆதலின் ஞாயிற்றின் வெளிச்சமுஞ் சூடும் நமக்கு இன்றியமையாத உணவுகளேயாம்.

**உயிர்ச்சத்துக்களின் வகைதொகை:**—இனி உயிர்ச்சத்துக்களைப் பற்றி ஆராய்வோம். பண்டைக்காலத்து மருத்துவப் பெரியாரொருவர் உங்கள் உணவே உங்களுக்கு மருந்தாகவும் உங்கள் மருந்தே உங்களுக்கு உணவாகவும் இருக்கும்படி செய்து கொள்ளுங்களென்றார்.* இவ்வுணவிலுள்ள மருந்துக்களே உயிர்ச்சத்துக்களாம். இவைகளை ஐவேறு வகைப்பட்டதாகப் பிரித்திருக்கின்றனர். இவைகளுக்குப் பெரும் பெயரிட்டு அச்சு.

---

* Hyppocrates says:—Try and make your food your only medicine & your medicine your only food.

றுத்தாவண்ணம் எளிதாக (அ) உயிர்ச்சத்து, (ஆ) உயிர்ச்சத்து, (இ) உயிர்ச்சத்து, (ஈ) உயிர்ச்சத்து, (உ) உயிர்ச்சத்து என்னும் பெயரிட்டிருக்கின்றனர்.

(அ) **உயிர்ச்சத்து**:—பால், வெண்ணெய், பாலின் ஆடை, பசலைக்கீரை, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, கொடிமாதுளம்பழம், முட்டைக்கீரை (கோஸ்), முட்டையின் மஞ்சட்கரு, ஆட்டின் குருதியேற்றம், நுரையீரல், கல்லீரல், குண்டிக்காய், மூளை, மீன்ஈரல் எண்ணெய் (Codliver oil) இவைகளிலிருக்கிறது. இது குருதியின் செங்கூடுகள் கெடுவதற்குத் (அழுக்கடைவதற்கல்ல) தகுந்தாற்போல் புதிதாய் உண்டாக்குவதற் குதவுகிறது. குருதி குன்றந்து சோவை பிடித்துள்ளோர் (Anemia) இச்சத்து நிறைந்துள்ள மேற்கண்ட பொருள்களை மிகுதியாயும் மற்றைய பொருள்களைக் குறைத்தும் நான்கு திங்களாவது உண்டுவந்தால் நலனுறுவர். பின்னர் இப்பொருள்களை மிகைப்படுத்தி உண்ணவேண்டுமென்னுங் கட்டாயமில்லை. வழக்கம்போலுண்ணலாம். இச்சத்து குறைந்துள்ளோரின் கண்களின் நலனும் வளர்ச்சியும், நிறையுங் குன்றுகின்றன. தொற்று நோய்கள், மூச்சுறுப்பு நோய்கள் மிகக்கூடும்.

(ஆ) **உயிர்சத்து**:—பல உணவுப் பொருள்களிலும் பரவிக்கிடப்பதாகும். இது பால், கிட்டத்தட்ட எல்லாக் கிழங்குகள், பழங்கள், கொட்டைகள் காய்கறிகள், பச்சை அரிசி வகைகள் (cereals) (நன்றாய் மழுக்கின அரிசிகளல்ல), கொடி மாதுளம்பழம் இவைகளில் மிகுந்திருக்கிறது. எல்லாப் பழங்களும், மீன்களும், இறைச்சிகளும் இதைச் சிறிதுடையன. பசுவொன்றுதான் இச்சத்தில்லாது வாழக்கூடிய விலங்கு. ஏனெனில் இது இச்சத்தைத் தானுகவே உண்டுபண்ணிக் கொள்ளும் இயல்புடையது. இதனுல் பசுக்களின் ஒப்பற்ற பெருமையை நாம் உணரலாம். இச்சத்தில்லாத உணவை உண்டுகொண்டே யிருக்கும் ஒவ்வொரு உயிரும் குடர்களிற் கோளாறுபட்டுக் கழிச்சல், எருக்கட்டு முதலிய பல நோயுண்டாய் இறக்கவேண்டியனவே.

(இ) உயிர்ச்சத்து:—பால், உருளைக்கிழங்கு, கிச்சிலிப்பழம் (Orange), எலுமிச்சம்பழம், கொடிமுந்திரிப்பழம், வெங்காயம், பச்சைப்பட்டாணி, பசலை. முட்டைக்கீரை முதலியவைகளி லிருப்பதாகத் தெரிகிறது. 54° நூற்றுமுறை (Centigrade)க்கு மேல் சூடுபடுத்தப்பட்ட உணவுப் பொருளில் இவ்வுயிர்ச்சத்து இருக்காது. உணவுப் பொருள்களைச் சமைக்காது அப்படியே பச்சையாக உண்ண வேண்டுமென்பதற்கு இதுவுமொரு பொருட் டாகும். இப்பொருட்டைப் பற்றியே பாலைக் காய்ச்சாது குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்பர். ஆனால் பச்சைப் பாலில் பல நச்சுக்கூடுகளிருந்து பல நோய்களையுண்டாக்கு மாதலின் பாலைக்காய்ச்சிக் கொடுக்கவேண்டும். இதனால், இந்த (இ)உயிர்ச்சத்து குழந்தைகளுக்குக் கொடுபடாது போய்விடுமாத லின் கிச்சிலிப்பழம் அல்லது உருளைக்கிழங்கின் சாற்றைப் பச்சை யாய்க் கொடுக்கலாம். இது கொடுபடாவிடின் யாவருக்கும் நரம் பைப்பற்றிய நோயாகிய திமிர்நோயும் (Beri beri), குருதியிழப்பு வலியும் (Scurvy) உண்டாகின்றன. (இ) உயிர்ச்சத்தில் சிறு அளவு கொடுபடினும் இந்நோய்களை வராமற்றடுக்கவும், வந்தாலும் நீக்கவும் கூடும். இவ்வாறு நீக்காவிடின் உயிரிழக்கவும் நேரும். இச்சத்து கரிநீர்முதல், உயிர்க்காற்று, உப்புமுதல் இவை சேர்ந்த ஓர் ஒழுங்குக் கட்டிக் கூட்டுப் பொருளாம். (Crystalling Compound)

(ஈ) உயிர்ச்சத்து:—பால், வெண்ணெய், முட்டையின் மஞ் சட்கரு, மீன்ஈரல் எண்ணெய் இவைகளிலிருக்கிறது. ஆனால் மிகுதியாக மீனெண்ணெயிற்றான் இருக்கிறது. சில கீரைகளும், காயின் எண்ணெய்களும் வெய்யிலிற் காய்ந்தால் இச்சத்தை யடைகின்றன. இச்சத்து சூடுபடுத்திச் சமைப்பதால் கெடுகிற தில்லை. இச்சத்து மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் மிகுதியாய் சத்துக்குறைவினலுண்டாகும் நோய்களை (Nutritional diseases) நீக்கும் வன்மையுடையது. குழந்தைகளுக்குண்டாம் கணை நோயை (Rickets) நீக்குவன வெய்யிலும், இந்த (ஈ)சத்தையுடைய மீனெண்ணெயுமேயாம்.

(உ) உயிர்ச்சத்து :—மிகுதியாய்க் கோதுமையின் முளையிலும் சில காய்கறி உணவுகளிலும், சீராக வாழைப் பழத்திலும், குறைவாக இறைச்சி வகைகளிலுமிருக்கிறது. இது பிள்ளைப்பேற்றை யளிக்குஞ் சத்தாதலின் இது குறைந்தால் இப்பேறு பெற முடியாது.

## III. உணவென்று கருதப்பெறும் வீண் பொருள்கள்.

காரப்பொருள்கள் :—புளி, மிளகாய், மிளகு, கடுகு, பெருங்காயம் முதலிய பொருள்கள் உணவல்ல. ஆனால் பசியை உண்டாக்குவதற்குத் தூண்டுகோலை ஒத்தன. சுவையையும் மணத்தையுங் கொடுத்து மீதூண் விரும்பச் செய்கின்றன. கரைநீர்களையும் சளியையும் மிகுதியாய் ஊறச்செய்கின்றன. இவற்றால் உண்டாகும் நன்மைகளைவிடத் தீமையே மிகுதி. ஏனெனில் அடிக்கடி இவைகளால் தூண்டப்பெற்று பசி உண்டானால், பின்னர் இவற்றின் உதவியின்றித் தானே உண்டாகாது. பின் இக்காரப்பொருள்களைப் பயன்படுத்தியே பசி உண்டாக்கப்படுமாதலின் இவை இன்றியமையாத பொருள்கள் ஆகிவிடும். மீதூண் விரும்பச் செய்வதால் இவை உடல் நலிவிற்கு முதலாயிருக்கின்றன. இப்பொருள்களின் பெரும்பகுதி வெடுதி தர்த்தக்க வீண்பொருளாக மாறி, தசை நார்களை நச்சுப்படுத்திவிடுகின்றன ; கழிவாய்களை மிகுதியாய் உழைக்க வைக்கின்றன. இவைகளை அளவிற்கு மிஞ்சிப் பயன்படுத்துவதால் இவற்றின் காரத்தால் நரம்புகள் மழுங்கிப் போகின்றனவாதலின் பின் இவைகளை மிகைபடப் பயன்படுத்திக் கொண்டே செல்ல நேரும். ஆதலின் இவற்றை நீக்கவேண்டும். முடியாவிடின் மிகக் குறைவாய்ப் பயன்படுத்தி வரவேண்டும்.

தேயிலையுங் காப்பியும் :—இவற்றை உட்கொள்ளுவோர் உள்ளத்திற்குங் கிளர்ச்சிதருங் குடிகளாகக்கருதுகின்றனர். ஈதுண்மையே. ஏனெனில் இவை யிரண்டிலும் இரு நற்சத்துக்கள் இருந்துகொண்டு இவ்வாறு செய்விக்கின்றன. இத்துடனிருப்பினும் இவை நன்மை தரத்தக்கவல்ல. ஏனெனின் இதனால் உண்டாகுங்

கிளர்ச்சி இயற்கையாக உண்டாவதன்றாதலின் இதன் வேகம் விரைவு நீங்கியதும் இதனால் எவ்வளவுக்கெவ்வளவு கிளர்ச்சி யுண்டாயிற்றோ அதற்குமாறாகச் சோம்பல், துயரம் உண்டாகு மாதலின் மறுபடியும் இதை உண்ணும் அவாத் தோன்றிக் கொண்டே யிருக்கும். இவ்விருப்பை நீக்க நீக்கக் குடிவெறி யுண்டாகும். இதுவன்றிக் காப்பியில் எளிதில் ஆவியாகும் ஒரு கொடிய எண்ணெயும், தேயிலையில் பதன்புளிப்பும் (Tannic Acid) இருந்துகொண்டு எச்சிலும், பைக்கரை நீரும் ஊராமற்றடுத்து வாயையும் தீனிப்பையையும் வரளவைத்துச் சமித்தலைக் கெடுக்கின்றன. இன்னும், இவை யாவர்க்குந் தூக்கத்தையுங் கெடுப்பதால் இயற்கையிலேயே தூக்கம் வாராதவர்கள் இவைகளைத் திரும்பிப் பார்க்கவுங்கூடாது. ஆதலின் இவை தக்ககுடிகளாகா. எதேனும் வேண்டியபொழுது பயன் படுத்தத்தகுந்த மருந்துகளே யாகும். அப்படிக்கிளர்ச்சி உண்டாக்க அல்லது தூக்கத்தைத் தடுக்கப் பயன்படுத்துங்கால் இவற்றிலுள்ள நச்சுப்பொருள்கள் மிகக் குறைவாயிருக்கும்படி குடிநீர் தயாரித்துண்ணல் நன்று. இதற்கு இவற்றின் தூளைக் கொதிநீரில் மூன்று, நான்கு நுடி நேரத்திற்கு மேற்படாது போட்டு மூடிவைத்து உடனே வடிக் கட்டினால் நற்சத்தின் மிகப் பெரும்பகுதி சோர்ந்து விடும்; தீச் சத்து மிகச் சிறிதே சோர்ந்திருக்கும். இஃதன்றிக் காப்பியாயின் புதிதாய் வறுத்துத் தயாரித்ததூளை அப்பொழுதே பயன்படுத்தல் நன்று. ஒருமுறை பயன்படுத்திய தூளையாவது தேயிலையை யாவது பயன்படுத்தலால் நச்சுப்பொருள் கிடைக்குமேயன்றி நல்ல பொருள் ஒருக்காலுங் கிடைக்காது. ஆதலின் காப்பிக் கடைகளில் இரவு முழுவதும் வடிகட்டியெடுத்த காப்பிச் சாற்றைப் (Decoction) பயன்படுத்தல் எத்துணைக் கேடு விளைப்பதாகும் என்பதை நினைத்துப் பாருங்கள்! கொக்கோவிலும் ஓர் தீய எண்ணெய் இருந்துகொண்டு சமித்தலைக் கெடுக்கிறது. சாக்லெட் டிலுங் (Chocolate) கொக்கோ இருப்பதால் இவையாவுந் தீய பொருள்களே. தேயிலை முதலியவற்றின் குடிநீர் இன்றியமை யாது தயாரிக்கும்பொழுது சுவையைத் தருகின்ற ஓடும் நீரைப் பயன்படுத்தலே நன்று, இதனுள் நீரிற் சுவையுண்டாக்கும் கரிக் காற்று கரைந்திருப்பதால். இது கிடைக்காவிடின் தூக்கி ஆற்று

தல் காற்றிலுள்ள கரிக்காற்றைக் கரைத்தற்கு வழியாகுமாதலின் சுவைதரும்.

கள், சாராயம் முதலியவற்றை வயிற்றுப்பசியைத் தீர்க்கும் உணவாகவும், வலிமைதருவதற்கும் உடல்வலியை நீக்குவதற்கும் தக்க மருந்தாகவும் பலர் கருதுகின்றனர். இது முழுத் தவறென்று தக்க ஆராய்ச்சியாளரால் நிறுவப்பெற்றுள்ளது. இவற்றுள் ஊன் முதல், கொழுப்பு, கரிநீர்ப்பொருள் முதலிய உணவுப் பொருள்களுள் ஒன்றுமில்லை. ஆனால் குடிப்பதால் பசி நின்றுவிடுகிறதேயெனின், நின்றாலும் கெடுதியைத் தரத்தக்க வழியி நிற்கிறதாகும். இக்குடிகளிலுள்ள சாராயச்சத்து (Alcohol) தசை நார்களையும் நரம்புகளையும் மயக்கிக் கெடுக்குந் தன்மையுடையவால் இவற்றைக் குடித்ததும் பசியுணர்ச்சியைத் தெரிவிக்கும் நரம்புகள் மயக்கப்பெற்றுப் பசிச் சொரணையற்றுப் போகின்றன. (இவ்வாறே உடல் வலியும் நின்றுவிடுகிறது) இத னால் உடல், கொழுப்பு வடிவாய்ச்சேமித்து வைக்கப்பெற்ற உண வுப் பொருளை ஒழித்துவிடுகிறது. இதுவுந் தீர்ந்தவுடன் மெலிந்து நலிகிறது. இவ்வாறு பசியை நிறுத்தி உடலைக் கெடுத்துக் கொள்வதினும் நிறுத்தாமற் றுன்புறுவது நன்றன்றே? இனி வலிமை தருகிறதாவென்று பார்த்தால் இதற்குமாறாக வலிவிழக்கச் செய்வதை நன்றாகக் காணலாம். குடித்தபின் ஒரு வேலையாளும் மிகுதியாகவும் சுறுசுறுப்புடனும் வேலைசெய்வதைக் காண முடியாது. ஆனால் களைத்து மயங்கிப்போவதைக் காணலாம். ஏனெனில் இக்குடிகளிலுள்ள சாராயச்சத்து வேண்டிய அளவு உண்டால் கொன்றுவிடவுங் கூடிய பெரு நச்சுப்பொருளாகும். ஆதலின் இதைக்கண்டு பயந்து விலகுவதே மதியுடைமை. இதைச் சிலர் ஒரு கிளர்ச்சிதருங்குடி (Stimulant)யாகக் கருது கின்றனர். இதுவுந் தவறே. இதுமிகச் சிறிதுபொழுது கிளர்ச்சி தந்து மிகப்பெரும்பொழுது உள்ளத்தை ஒடுக்கக்கூடிய நச்சாம். (Depressor) உலகில் இவ்வொடுக்கத்தைத்தராது கிளர்ச்சியை மட்டுந்தரக்கூடிய மருந்தொன்று மிலது. உண்டென்று நம்பல் மதியுடைமையன்று. சிலர் இக்குடிவகைகளைச் சிறிதுண்டால் நன்றென்றும், சில நோய்களை நீக்கத்தகுந்த மருந்தென்றுங் கருதுகின்றனர். இவை நச்சுப் பொருளையுடையனவாதலின்

எவ்வளவு குறைவாக உண்ணினுந்தீயவே; உடலை வலிவிழக்கச் செய்வதால் நோய்களை வளர்க்குமேயன்றி நீக்கவே நீக்கா. பிள்ளை பெற்றவுடன் மகளிர்க்குக் கொடுத்தலும் மிகத்தீதே யாகும். அபின், கஞ்சா முதலியனவும் இத்தகைய செயலுடைய நச்சுப்பொருள்களே.

புகையிலை:—இதுவுங் குடியைப்போல் பசிப்பிணியை நீக்கி வலிவிழக்கச் செய்யுஞ் செய்கைகள் பொருந்தியுள்ளதே. இதில் எளிதில் ஆவியாகக்கூடிய (Volatile) புகையிலை நச்சு (Nicotin) ஒன்றுண்டு. இதில் கடுகளவு தின்றாலும் ஒரு ஆளைக்கொன்று விடும். இது புகையிலை எரியும்போது எரிபடாமல் ஆவியாகமாறிப் புகையுடன் சென்று முகருபவர்களையெல்லாம் கேடுறச்செய்கிறது. வாயிலும் மூக்கிலும் போட்டுக்கொள்பவர்களின் தோல்வழியே சோர்ந்து நச்சுப்படுத்துகிறது. இதைச் சில சுருட்டுப்பிடிப்பவர் களின் உதடு கறுத்திருப்பதைக்கொண்டு தெளியலாம். முதன் முதற் கள் முதலியன குடிக்கும்பொழுதும், புகையிலையைப் பயன் படுத்தும் பொழுதும் ஒருவரும் இன்பமடைவதில்லை. ஆதலின் இவை தம் இயற்கையாகவே களிப்படைவிக்கும் பொருள் களல்ல வென்பது தெளிவு. இதற்குமாறாக இவைகளின் நச்சுப் பொருள்கள் மயக்கம், வாந்தி, தலைவலி முதலியவற்றாற் றுன்புறுத் தும் இயல்புடையன. ஆனால் இத்துன்பு இவைகளைப் பயன் படுத்தப்படுத்தக் குறைகிறது. ஏனெனில் நம்முடலுக்குத் தன்னைத்தானே காத்துக்கொள்ளுஞ் செயலிருப்பதால் அது இந் நச்சிற்கு மாற்றுப் பொருளொன்றைத் தயாரிக்கிறது. இம்மாற்று அந்நச்சின் வேகத்தை மாற்றிவிடுகிறது. இத்துடனிருந்தால் ஒரு தீமையுமில்லை. இம்மாற்று நம்முடலில் வேண்டிய அளவிற்கு மேல் உண்டுபடுத்தப் படுகிறதால் மிகுதியான பங்கு ஓர் விறு விறுப்பை உண்டாக்கிவிடுகிறது. இதை நீக்க மறுபடியுஞ் சுருட்டு அல்லது கள்ளைப் பயன்படுத்த வேண்டியதாயிருக்கிறது. பிறகு இதன் வேகத்தைத் தணிக்கமறுபடியும் மாற்றுண்டாகிறது. இவ்வாறே இவ்விறுவிறுப்பு மாறிமாறித் தோன்றியழிவதால் நம் முடல் வீணாக மாற்றுண்டாக்கியுண்டாக்கித் தளர்வதுடன் நில் லாது குடி, புகையிலையை வரவர மிகுதியாக விரும்பும் இயல்புடைய தாகிறது. இதனால் உடல் நலம் பலவழிகளிலுங் குன்றுவதன்றி

வறுமையும் பலதீய ஒழுக்கங்களும் உண்டாகின்றன. ஆதலின் குடி, புகையிலையைத் தொட்டால் ஒட்டிக்கொள்ளும் நமன் போற் கருதவேண்டும். இவ்வாறிலாது இத்தீய பழக்கங்களுக்குட் பட்டோர் தப்பிக்கொள்ள எளிய வழியொன்றுண்டு. அஃதென்னையோவெனின் இப்பழக்கங்களை விட்டு நாலைந்து நாட்களுக்குப் பொறுத்திருத்தலேயாம். அவ்வாறிருப்பின் மிகுத்துண்டாயிருக்கும் மாற்றின் விறுவிறுப்புத் தானே நின்றுவிடும். அதுவரை புகையிலை, குடியைப் பயன் படுத்தாதிருந்ததால் இவற்றின் நச்சுப் பொருள் உடலிற் சோரா. இதனால் மாற்று மறுபடியு முண்டாகாதாதலால் விறுவிறுப்பும் நின்றுபோகும். இதைத் தவிர இத்தீய பழக்கங்களை நீக்க வேறுவழியில்லை யாதலின் இவ்வாறு உடனே உள்ளவுறுதியுடன் நீக்கிக்கொள்ள முயல வேண்டும். இத்துணை உறுதியில்லாதோர் இத்தீய பழக்கங்களைச் சிறிது சிறிதாகக் குறைத்துப் பின் அறவே ஒழிக்க முயலலாம். ஆனால் இவ்வழியால் இப்பழக்கங்கள் நீங்க நெடுநாளாகுமாதலினாலும் அதற்குள் உள்ளவுறுதி குன்றிவிடக்கூடு மாதலினாலும் உடனே நீக்கமுயலுதலே சிறந்த வழியாம். இவ்வாறு உடன் நீக்குவதால் உடலுக்கு ஒரு தீமையும் உண்டாகா தென்பது திண்ணம். இவ்வாறு நீக்கிக்கொள்ளும் வழியிருப்பதால் இத்தீய பழக்கங்களைக் கற்றுப் பின்விடமுயலுவோர் சிலர். உலகில் நாம் நற்பயனடையக்கூடிய நன்முயற்சிகள் பலவிருக்க என் இத் தீ முயற்சியில் ஈடுபட்டுத் திரும்பவேண்டுமோ தெரியவில்லை. உள்ள வுறுதியை அடைவதற்காகவெனின் இதை நல் வழியிலும் அடையலாமே. ஆதலின் இப்பழக்கம் உண்டு பண்ணிக் கொள்ளாதிருத்தலே நன்றாம். இன்னுஞ் சிறுவர்கள் வளரக்கூடியவர்களாதலின் அவர்கட்கு இத்தீய பழக்கங்கள் என்பையுருக்கித் தீமையை மிகுதியாய்த் தரும். குழவிக்குத் தன் பாலைக் கொடுக்குந்தாய்மாரிற் சிலர் குடிவகைகளால் பாலை மிகச் செய்யக்கூடுமென்று நினைத்துக் குடிக்கின்றனர். ஆனால் குடிச்சத்தும், புகையிலை நச்சும் பால் வழியே பச்சிளங்குழவிக்குஞ் சோருமாதலின் புகையிலையும் குடியும் அவர்களால் மற்றையோரினும்பெருங் கவலையுடன் நீக்கத்தகுந்த பொருள்களாகும்.

தொடரும்.

உ

# இராசராசன்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 167-ஆம் பக்கம்.)

இனி, "தூதரோடும் காவலோடும் அதிகாரஞ் செய்வாரிடைக்கேய் செல்லக்காட்ட நாங்களும் அதிகாரஞ் செய்வார் மாத்தொழுகிலே இருக்கச் செல்ல" எனவும், "இக்காணிவிற்றுக் காசுவைக்கவென்று இப்படையிலாரும் எங்களை நீரிலும் வெயிலிலும் இட்டுப் பல வேதினை செய்யப் பல வேதினைக்கு மாற்றாது" எனவும் இராசராசனது பதினாறும் யாண்டுச் சாசனத்துக் காணப்படுதலின், இறை கொடாதாரை மாத்தொழுவிலிட்டும், நீரினும் வெயிலினும் நிறுத்தி வருத்தியும் ஒறுக்கும் வழக்கு அக்காலத்திருந்தமை தெரியலாம்.

இனி, "இடையன் நேறன் சாத்தனைக்கொண்டு திருநந்தாவிளக்கொன்றினுக்கு ராசகேசரியால் நிசதம் உழக்கு நெய்யட்டுவதாகவும் இவன் சாவினும் போகினும் சிறை தளை சங்கிலி புகிலும் இவ்வனைவோ முன்பு நின்றோமே சந்திராதித்தவற் திருவிளக்கெரிக்க நெய்யட்டுவதாக புணைபட்டோம் இவ்வனைவோம்" என்றதனால், ஒருவனுக்காகப் பலர் புணைபடும் வழக்குண்மை தெளியப்படும்.

இனி, போர்மேற் செல்லின், காழ்த்த பகைவரெனின், அவரது நாட்டைச் சூறையாடலும், நகரைக் கொளுத்திப் பாழ்படுத்தலும், இளங்குழவி முதல் எவரையும் கொலைபுரிதலும், திறைகொண்டு அரசனைச் சிறைகோடலும் உண்டென்பதை இரட்டபாடி கலிங்(கங்)களின்மீது இவன் காலத்து நிகழ்ந்த படையெழுச்சிகளால் அறியலாம்.

இனி, "வில்லவன் மூவேந்த வேளான் தன்னை உடையார் ஸ்ரீராஜராஜதேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்குத் தந்த ஆடு" "நித்தவிநோத விழுப்பரையன் தன்னை உடையார் ஸ்ரீராஜராஜதேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ" "சேனாபதி குரவன் உலகளந்தானான ராஜராஜ மாராயன் தன்னை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ" என் றின்னோரன்ன பதினான்கு அதிகாரிகள் கோழி (உறையூர்)ப் போரில் தம் செய்கை அரசனது வெறுப்புக்கிடமின்றி முடியுமாறு கடவுளைவேண்டி இராசராசேச்சரத்தில் திருவிளக்கேற்றுதற்கு ஏற்பாடு செய்தமை, தென்னிந்திய சாசனத்தொகுதி இரண்டின் நான்காம் பகுதியிலுள்ள 95ஆம் சாசனத்துக் காணக்கிடத்தலின், இராசராசன், படைகளிடத்துப் பெரிதும் நன்கு மதிப்புடையனெனினும், தவறு காணின் வெறுத் தொறுக்கும் இயல்பினன் போலும் என்றுய்த்துணர்ந்து கொள்க.

இனி, "சோனாட்டும் சோனாட்டுப்படும் புறணி நாடுகளிலும் தொண்டை நாட்டிலும் பாண்டிநாடான ராஜராஜ வளநாட்டிலும் பார்ப்பன ஊர்களிலும் வைகானச ஊர்களிலும் சமணர் ஊர்களிலும் காணி உடையார்" என்ற இராசராசனது இருபத்து நான்காம் யாண்டுச் சாசனத்தையும், சத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துள்ள நாகபட்டினத்தில் கடாரத்தரையன் பௌத்தப்பள்ளி எடுப்பிக்கவும், அதற்கு இராசராசப் பெரும்பள்ளி எனத் தன் பெயரிடவும் இவன் உடன்பட்டதன்றி ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச்சந்தமாகக் கொடுத்ததுங் கூறும் ஆனைமங்கலச் செப்பேட்டையும் நோக்குமிடத்துச் சைவத்திற் பெரிதும் ஈடுபட்டிருந்த இவன் காலத்தில், சைவர்க்கேயன்றி வைணவர் சமணர் பௌத்தர்கட்கும் சம உரிமை இருந்தமை பாராட்டற்பாலது.

இனி, சேனாபதி குரவன் உலகளந்தானான ராஜராஜ மாராயன், கண்டராச்சன் பட்டாலகனான நித்தவிநோத விழுப்பரையன், ஈராயிரவன் பல்லவரையனான மும்மடி சோழ போசன்,

பெருந்தரங்கோன் சூற்றியான அருமொழிப் பல்லவரையன், அமுதன் தேவனான ராஜவித்தியாதர விழுப்பரையன் என்ற பெயர்களின் பிற்பகுதிகளில் வந்துள்ள நித்தவிநோதன், மும்மடி சோழன், அருமொழி, ராஜவித்தியாதரன் என்பன இராசராசனுக்குரிய பெயர்களாதலின், அற்றைநாளையில் அரசன் அளித்திட அதிகாரிகளும் பிறரும் தம் இயற்பெயரோடு இச்சிறப்புப் பெயர்களையும் சேர்த்து வழங்கியவாறு அறியப்படும்.

இனி, 'தஞ்சாவூர்ப் புறம்படி' 'தஞ்சாவூர் உள்ளாலை' என்வும், வீரசோழப் பெருந்தெரு, ராஜவித்தியாதரப் பெருந்தெரு; ஜயங்கொண்ட சோழப்பெருந்தெரு, சூரசிகாமணிப் பெருந்தெரு, மானவன் மாதேவிப் பெருந்தெரு எனவும், கந்தர்வத்தெரு, வில்லிகள் தெரு, ஆனையாட்கள் தெரு, ஆனைக்கடுவார் தெரு, மடைப்பள்ளித்தெரு, பன்மையார் தெரு, சாலியத்தெரு எனவும், திருபுவன மாதேவிப் பேரங்காடி, கொங்காள்வா ரங்காடி, ராஜராஜ பிரம மாராஜன் அங்காடி எனவும், உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளம், அபிமான பூஷணத் தெரிந்தவேளம், பஞ்சவன் மாதேவியார் வேளம், உத்தம சீலியார் வேளம், அருமொழி தேவத்தெரிந்த திருப்பரிகலத்தார் வேளம் எனவும் வந்துள்ள சாசனப்பகுதிகளால், உள்ளாலை, புறம்படி அஃதாவது உள்நகர் புறநகர் என்னும் பாகுபாடும், அவற்றுள், பலப்பல பெருந்தெருக்களும், தெருக்களும், கடைவீதிகளும், வேறு பல்லிடங்களுங் கொண்டு, தஞ்சைநகர், இராசராசன் காலத்திற் சிறந்திருந்தமை விளங்குதலால், அது எத்துணைப் பரந்து கிடந்ததென்பதை உய்த்துணர்ந்து கொள்க.

இனி, திருவலஞ்சுழியிற் காணப்படும் இராசராசனது இருபத்தொன்றும் யாண்டு (No. 624 of 1902) சாசனத்தில், இவனது திருவல்லத்து அரண்மனை கூறப்பட்டிருத்தலானும், அங்குக் கோட்டையும் அகிழும் இருந்து அழிவுற்றதற்கு அடையாளங்கள் இன்றும் காணக்கிடத்தலானும், தஞ்சை நகர்க்குத் தென்மேற்கிலுள்ள வல்லத்தில் இவனுக்கு அரண்மனை இருந்திருத்தல் அமையுமென ஊகிக்கின்றனர்.

தொடரும்.

உ

# குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்.

திருவாளர், L உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 172-ஆம் பக்கம்)

## செங்கீரைப் பருவம்.

கல்விக்கு......மாந்தைச்கு நாயகனுறந்தைபிரா னகிலமுங்
கண்ணுரமேருவில்லெடுக்கும் புலிக்கொடிகலிக்கள்வனைப் பொருதுபோர்
வெல்விக்குமானதன் மகோதைக்கு மன்னன்முடிகொண்டான்மகற்கு மகனென்
வெற்றிக்கவித்தநிலமண்ணைக்கடக்கவிகல்விண்ணைக்கடக்கவிகலிக்
கொல்விக்கும்யானைகொடு சாளுக்கிவர்க்கமற வேளுக்கிராமமிடறிக்
கொல்லாபுரம்பொருதுகல்யாணமூதெயில்பறித்தேழு கொங்கண முன்னாட்
செல்விக்கும் ராசாதி ராசன்திருப்பெயர செங்கீரை யாடி யருளே
சேரா பெருங்கவிகைவீரோதையாவாழி செங்கீரையாடியருளே. (க)

எரிக்குங் கனல்சொரி வங்காளர் வேழவணி வெங்காள கூடமெனவந்
தீரட்டமும்புரள மாரட்டர்வேழவணி யீரேழு மெண்டிசையிலெண்
கரிக்குந் திடுக்குவர நெற்றிப்புகுந்துபடைமுற்றிப்புகுந்து பொருமக்
காலிங்க யானைகள் கடைக்கூழையிற் கவிழமட்டித்த கைமலைகளால்
விரிக்குங் கடற்குருதி வெள்ளம்பரந்துவட விந்தாடவிப் புடவிபோய்
வேதாள மிட்டவடி பாதாளமுட்டவிழ வீமாபுரத் தொருசரந்
தெரிக்குஞ் சயங்கொண்ட சோழன்திருப்பெயா செங்கீரை யாடியருளே
சேராபெருங்கவிகை வீரோதையா வாழி செங்கீரை யாடியருளே. (உ)

வெஞ்சோரி நன்மதை மிதந்தோடி மேல்கடல் சிவக்கப் புகக்குருதிநீர்
வெள்ளம் பரந்துபல பேராறு கீழ்கடலின் மேன்மே னடப்ப வெதிரே
யெஞ்சாவரண்பெரிய காலிங்க மேழுமேழ் முந்நீர்களேழு மெனவந்
தேறித்தடுப்பமுனை மாறிக் கலிங்கமேழ் பாழ்போக வென்றவொருதன்

பஞ்சாயு தங்களிவி வன்சாது ரங்கபல முற்றுந்த ரைப்பட வடற்
பாடற்பெ ரும்பாணி தேடற்க ருங்கவிகவிச்சக்கரவர்த்தி பரவச்
செஞ்சே வகஞ்செய்த சோழன் றிருப்பெயா செங்கீரை யாடியருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி செங்கீரை யாடியருளே. (௫)

வருத வற்றமனு வேசாத செப்பநெறி யேகாத சீர்த்திமதா
மெற்றாத பேருததி வற்றாத பொன்னிநதி யெய்யாத விந்திரவிபவ
மாறாத மத்தகச மாராத புத்தமூத மாடாத் நிர்த்த நிலைய
மஞ்சாத புண்டரிக மெஞ்சாத யோகபல மாளுத முத்தமிழ்நல
மாறாத கற்பதரு வாராத சித்ரகவி வாடாத வுற்பலவன
மண்ணுத ரத்னகிரி நண்ணுத தத்துவகதி மட்காத சந்திரவலையம்
சீறாத சித்தசனி தீராத பச்சை முகில் செங்கீரை யாடியருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி செங்கீரை யாடியருளே. (௬)

வீரளைவொட்டரு மிரட்டரு மிலேச்சரும் விதற்பரும் வழிப்படவிடா
மாறுட்டரும்......வு.........சனகரும் பரதரும் போய்முடிந்தரமுடிப்
பூநாறு கைதவரு மாகதரு மாளுவரும் லாடருமொருங்கு மடியப்
போரிற் படாததொரு பேரின்மை யால்வடக லிங்கன் புறக்கிட்டநாள்
மேனுளிமத்தருகு சட்டுண்டவேழவணி வெட்டுண்டகைக்குருதிநீர்
விண்மே லெடுத்துவரி மண்மேல் வெறுந்தனி திகாந்தங்கண் முட்டி
சேனுப ராசமுற நிற்கும்பி ரான்மதலை செங்கீரை யாடியருளே [விரியுஞ்
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி செங்கீரை யாடியருளே. (௭)

கூடங்கொ டுத்தகில லோகங்க வித்தவெளி கோண்மண்டி மேற்குவியவோ
கோலுந்தி ரைப்பரவை நாலுங்கி டைத்தனைய பூகங்குலைத்தலையவோ
வாடம்ப ரப்பணில மாரம்ப டப்புலவு மாழங்கெ டச்சொரியவோ
வாறுங்க டற்கழியும் வேறும்ப ணித்தடமு மீனங்தெ விட்டி யெழவோ
மாடங்க ணித்தவெழு பாருங்கு வித்த திறை வான்வென்றெ ழப்பொதியவோ
வாருங்கு லக்கிரியு மாதங்க வர்க்கமிடு மானம்பெ ழப்புகுதவோ
சேடன்க ழூத்தொசியு நாடன்றி ருப்புதல்வன் செங்கீரை யாடியருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி செங்கீரை யாடியருளே. (௮).

வெங்கோள ராவெதிர்கொ டிக்கோளராவெல்வ லத்தின்பு ரத்திடையவன்
மெய்த்தூது செல்லவொரு பொய்த்தூது சென்றொருப தக்குரோணி
[யொன்றொடுமிகும்

சங்கோலி டும்படைகி டந்தூதி டும்படுக ள........................
.........பலவுத்தா குருக்கள்பல யோகத் தனித்தனிபெறப்
பொங்கோ.........தனந்தரு மனே றவொரு பொய்ப்பாசனம்
போயேறி யக்குரிசில் பெரி............தோழியுய்த்தினிதவன்
செங்கோ னடத்தவொரு முட்கோல்பி டித்தவன் செங்கீரை யாடியருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி செங்கீரை யாடியருளே. (எ)

கொங்கைத் துவைத்துவட மண்ணைக்கட.........த்திரட்ட முழறிக்
கோகன்னம் வென்றுகுட வாதாவிகொண்டுவ.........ளுட்
கங்கைக்கு நம்முடைய கோதாவி ரிக்குநடு வெங்கு.........க்
காலிங்கர் யானைகள்க டைக்கூழை யிற்கவிழ முன்வந்த.........
வெங்கைக் களிற்றுபய கும்பத்து முத்துதிர விசையம்ப ணுமணியு.........
விந்தைநிக ரத்துவயிர......த்தொகுதி விண்முட்ட வாள்கொடுகெடுஞ்
செங்கை...............சோழன் றிருப்பெயர செங்கீரை யாடியருளே
சேரா பெருங்கவிகை வீரோதையா வாழி செங்கீரை யாடியருளே. (அ)

## வேறு.

தகரா றுங்குழல் சரி...........ராத
தாளம ரும்பிய நுதலின்வி ளங்கிய சிந்தூ ரந்திரப்
புகர...........விலுஞ்சில செம்பா கங்கோடப்
புகவிழு விஞ்சைய ரிருவரி...........போகப்
பகரவ ரும்படு கொலைமுலை கொண்டிடை யெ...........
பரிபுர மங்கையர் வரையர மங்கையர் பந்தாடுஞ் சாரற்
சிகர...........குட கன்றவ செங்கோ செங்கீரை
தினகர செம்பிய செயதர பஞ்சவ செங்கோ செங்கீரை. (கூ)

கழியவ றுங்குறை துறுமிட...........காடி றும் பூதமபிறக
ககனநி றைந்தெழு கடல்பரு குந்துகள் குன்றே முஞ்சூழப்
பொழியவி ழுங்கட களிறு புரண்டன கண்டார் திண்டாடப்
பொருதுமு டன்கிளை முழுதுமி ழுந்தவர் நெஞ்சே நெஞ்சாகப்
பழுதில்பு ரந்தர குலதா முன்புகு பண்டா ரம்போகப்
பாவைபெ ருந்துணி படவெயில் கொண்டெறி கெம்பீரம்போகச்
செழியர்வி டுங்களி றழிய வெழும்புலி செங்கோ செங்கீரை
தினகர செம்பிய செயதர பஞ்சவ செங்கோ செங்கீரை. (கo)

பருவவ ளங்குயில் பயில்வன பைந்தளிர் கொந்தோ டுங்கோதப்
பருகுபெ ருங்களி யளிகுல பந்திகள் கந்தா ரம்பாடக்
கருவிவி யன்கதிர் களியம ணந்தவர் சந்தா பந்தீரக்
கழிகுரு கின்கிளை கலகமி டும்படி பொங்கோ தம்போகப்
புருவமெ டுஞ்சிலை புரளவ ளைந்தொரு வெஞ்சா பங்கோலிப்
புதுமல ரம்புகள் பொழியம ணந்தவர் தன்றே றென்றேறித்
தெருவின்ம தன்புகு மதலைய பங்குர செங்கோ செங்கீரை
தினகர செம்பிய செயதர பஞ்சவ செங்கோ செங்கீரை. (கக)

செங்கீரை முற்றும்.

---

உ

தமிழ்த்தாய் வாழ்க.

# மதுரைக்காஞ்சி யாராய்ச்சி.

---

திருவாளர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், காரை.

---

## 1. நூலின் கருப்பொருள்.

முன்னுரை :—இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரத்து இருநூறு யாண்டுகட்கு முன்னர் மதுரையிலிருந்து அரசு புரிந்த பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் மன்னனுக்கு, அக்காலத்து விளங்கிய நல்லிசைப்புலவர் பலருட் சிறந்தாராய மாங்குடிமருதனார் என்பார் பாடித் தந்ததொரு பாட்டு இது. இது நவின்றோறும் நயம் பயக்கும்

பெருநூலாய பத்துப்பாட்டினுள் ஒன்று. இதற்கு மதுரைக் காஞ்சி யென்பதுபெயர். ஏனையவற்றை ஆராய்ச்சியின் முடிபிற் கூறுகின்றேன்.

மதுரைக்காஞ்சி யென்பதற்கு மதுரையினிடத்து ஒரு அரசனுக்குக் கூறிய காஞ்சி யென்பது பொருளாம். காஞ்சியாவது, "வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமை சான்றோர் அறையும் குறிப்பினதாம்." இதனை ஆசிரியர் தொல்காப்பியனார்,

"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பின் பன்னெறி யானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே" என்றருளியுள்ளார்.

இதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் தனக்குத் துணையில்லாத வீடுபேறு நிமித்தமாக, அறம் பொருள் இன்பமென்னும் பொருட் பகுதியாலும்; அவற்றின் உட்பகுதிகளான உயிர், யாக்கை, செல்வம், இளமை முதலியவற்றாலும் நிலைபேறில்லாத உலகியற் கையைப் பொருந்தியதோர் நன்னெறியினை யுடையது காஞ்சி என்பதாம் என்பர்.

எனவே, அறம் பொருள் இன்பமென்னும் பொருட்பகுதியும், அவற்றின் உட்பகுதியாய உயிர், யாக்கை, செல்வம், இளமை முதலியனவும் நிலையாமையும், அந் நிலையாதனவற்றைக் கொண்டே நிலையாய பொருளாய வீடுபேற்றினைப் பெறும் விரகும், இக் காஞ்சி யென்பது தன்னகத்தே கொண்டுவிளங்கு மென்பது பெறப்பட்டது.

---

பாட்டின் கருப்பொருள்:—பல்லாண்டுகளாக உலகினர் உயர்த்துக்கூறும் வகை, இவ் வுலகினை யாண்ட உயர்ந்தோர்கள் தோன்றிய குடியிற் பிறந்தவனே! மலைகளையும் காடுகளையும் தமக்கு அரணாகக்கொண்ட மறநெறி அரசர்பலரையழிப்ப, அவர், தன் வலிகண்டு அஞ்சித், தம் நாடுகளை விட்டகன்றனராக, அந் நாட்டு நிலங்களையெல்லாம் கொண்ட பேருதவியும், பொலந்தார் விளங்கும் மார்பும் உடைய வடிம்பலம்பநின்ற பாண்டியன் வழித் தோன்றலே! தென்னவனுய இராவணனைத் தமிழ்நாட்டை

யாளாவாறு பெயர்த்தவர் கிட்டுதற்கரிய வலிமிக்க தொன்முது கடவுளர் அகத்தியராவர்; அவர்க்குப் பின்னர், சான்றோர் தொகையுள் ஒருவராய் வைத்தெண்ணுதற்கு மேவிய சால்புற்ற ஒப்பற்றோய்! சீர்சான்ற உயர்ந்த நெல்லின் பெயரைப் பெற்ற சாலியூர் என்னும் சீரிய ஊரை வென்றுகொண்ட வெற்றிமிக் கோய்! நலம்சான்ற பேரணிகலங்களை யெல்லோர்க்கும் கொடுக் கும் வள்ளன்மை மிக்க பலவாகிய குட்டநாட்டினர் வெல்கோவே! முதுவெள்ளிலை யென்னும் ஊரிலுள்ளார் அனைவரும் தொன்று மொழிந்து தொழில் கேட்கும் வகை, தலையாலங்கான மென்னு மிடத்துத் தன்னை யெதிர்த்த சேர சோழராய பெருநிலமன்ன ரிருவர், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்பாராய குறுநில மன்னரைவர் ஆகிய எழுவரையும், காலென்னுமாறு கடிது பாந்து சென்று, காடு முற்றவும் எரிவாய்ப் புக்குப் படும்படி வென்று, அவர் முரசமுங் கைக்கொண்டு, வெற்றிக்குறியாகக் களவேள்வியும் வேட்ட கொல்லும் வலிமிக்க புகழ்வேந்தே! கொற்கையூர் வாழ்நர் விரும்பும் பொருந! தென் றிசைக்கண் வாழும் பரதவர்க்குப் போர்த்தொழில் செயல்வல்ல ஏறுயவனே! பகைவர் நாட்டைத் தன்னுடாக்கும் பொருட்டு, அழிக்கப்பட்ட அவரது நாடுகளுட் கோடற்பான்மையவான புலங்களிற் பல யாண்டுகள் தங்கி, அவற்றைப் பண்டையின் மேம்படத் தருவனவற்றைப் புரிந்து, வெல்லும் போரினும் சிறந்து நிற்கும் குரிசில்!

கோவே! வடவேங்கடம், தென்குமரி, குணகடல், குடகடல் ஆய இவ் வெல்லையிடைப்பட்ட நிலத்துள்ளோர் தம்முடன் பழமைபல கூறித் தம் மேவல் கேட்குமாறு செய்து, வெற்றி யொடு செறிந்து நடக்கும் கொற்றவர்க்கெல்லாம், நீ, கோனாகும் தன்மை பூண்டுள்ளாய். அன்றியும், நீ, ஒரு பொய்யால் உயர் நிலை யுலகுமுற்றும் ஆண்டுள்ளோர் நுகரும் அமிழ்தொடு பெற லாங் காலம் ஆமையினும், அப் பொய்யினை அறவே கடிந்து மெய்ம்மை சேர்ந்த நட்புச் செய்தலையே யுடையாய். முழங்கும் கடல் எல்லையாக, இடையே பரந்து விளங்கும் உலகத்துள்ளா ரும், உம்பர்நாட்டுத் தேவரும் கூடிப் பகைவராய்த் திரண்டு வரி

னும், அப் பகைவர்க்கு அஞ்சிப் பணிந்தொழுகும் பான்மையினை மேற்கொள்ளாய். தென்புலமெனப்படும் தென்னாட்டு மலைக ளனைத்தும் நிறையும்வகை, வாணன் என்னும் சூரனொருவன் வைத்த விழுநிதி பெறல் நேரினும், நீ, பிறர்கூறும் பழி நமக்கு வருவதாக என்னும் கருத்துடையை யாகாய். சீரிய பொருள் களைப் பிறர்க்குக் கொடுத்தலையே யுள்ளும் நினது நெஞ்சோடு புகழும் விரும்புவாயாக.

அன்னாய்! இற்றைப்போது நின்வெற்றியாற் பெறப்படு வதும், பின்னர் நின்வழித்தோன்றுவார்க்கு உளதாவது மாய கொற்றம், நின் குலத்திற்குரியதும் மேற்றிசைக்கட்டோன்றுவ்து மாகி, எல்லாரானும் தொழப்படும் பழமைசான்ற பிறைத்திங்கள் நாடோறும் சிறக்குமாறு போல, அவர் தம் வழிவழியாக மிகுவதாக. நின் பகைவரது ஆக்கம், கீழ்த்திசைக் கட்டோன் றும் நிறையிருளைத்தரும் மதி நாளும் தேய்ந்தொழிதல் போல் நாடோறும் கெடுவதாக. நின்னிடத்துண்டாகிய மாயையும் இனிக் கெட்டொழிவதாக. சேட் புலமெங்கும் சென்று விளங்கும் நின் சீரியபுகழ் ஒருகாலும் கெடாது நிலைபெறுவதாக.

இனி, நீ ஆளும் இந் நன்னாடு புலவர் பாடும் புகழுடையது. இதன் நடுவண், காண்டற்கினிய ஓவியத்தைக் கண்டாற்போலும் காட்சியமைந்து விளங்குவது மதுரை யென்னும் நல்ல ஊர். இந் நகர்க்கண், நாளங்காடி, அல்லங்காடியெனும் இரு பெரும் நியமங்கள் உள. அவற்றுள் நாளங்காடியின் நனந்தலை யெழும் ஓசை, மேகங்கள் படிந்து முகத்தலாற் குறைதலும் யாறுகள் நிறைந்து பாய்தலால் மிகுதலுமின்றிக்கரைபொருது ஒரு தன்மைத் தாய் ஒலிக்கும் முந்நீரையொப்ப, பலரும் போந்து பலகாலும் கொள்ளுதலாற் குறைதலும், பலரும் மேன்மேலுங் கொண்டுவரக் கொண்டுவர மிகுதலுமின்றி ஒரு தன்மைத்தாய், கணம் எனப் படுவதும், ஏழு நாள்காறும் நடத்தப்படுவதுமாய விழாக்காலத்து, வேறூர் இடத்தில்லாத வெற்றி நெருங்கும் திருநாளும், தீவினை கழுவும் தீவிய நீராட்டும் (தீர்த்தமாடல்) தன்கட் கொண்ட எழு நாளந்தியில், கூடுமந் நாட்டுமக்கள் செய்யும் போராவாரத்தை

ஒத்து இசைக்கும். அல்லங்காடியில் மிகுந்து எழுதரும் ஓசை, அகன்ற இவ்வுலகத்துப் பிறநாட்டு வணிகர் ஈண்டுச் செய்த பேரணிகலங்களைக் கொண்டுபோதல் காரணமாகக் காற்றால் உந்தப்பட்டுவரும் தம் பாய்மரக்கலம் கொணர்ந்த பலவேறுவகைப் பட்ட பண்டங்களைப் பட்டினங்களி லிறக்குங்கால் எழுவதும் இறக்குவா ரிடுவதுமான கல்லென்னும் ஓசையையொப்ப நிறைய இரைமேய்ந்து தம் பார்ப்புக்களையுள்ளிக் கூடுநோக்கி மாலைக் காலத்து மீளும் வேறுபல் பறவையின் பேரிசையை ஒத்து இமிழும்.

இனி, அவ்வூர்க்கண், எழுந்த ஞாயிறு, தன் ஒள்ளிய சுடர்த் திரளின் சினமாய வெப்பத்தைப் பகலெல்லாம் பரப்பிப் பின்னர்த் தணிந்து, அப்பொழுதினைச் சேர்க்கொண்டு குடமுதற்குன்றஞ் (அத்தகிரி) சேர்தலும், கல்லென்னும் மாலைக்காலம், நயந்த காதலர்க்கு எய்தும் மம்மர் நோய்கொண்டு புகுந்து நீங்கும். அக்காலை, முதல் யாமமுங் கழியும். பின்னர் கங்குல் யாமம் எனப்படும் இரண்டாம் யாமமும், கடவுள் வழங்கும் கையறு யாமமாய மூன்றும் யாமமும் கழிய, இரவுக்காலத் திறுதிப்பகுதி யாய விடியல் எய்தும்.

அவ்விடியலில், மறையோதல் பயின்ற அந்தணர், அம் மறையினுட் கூறப்பெறும் வணக்கப்பகுதி, வாழ்த்துப்பகுதிகளை ஆய்ந்து ஓதுவர்; யாழ் வல்லோர், தாளவறுதியை இனிது நுனித்து, நரம்பையும் நன்கு தெறித்து மருதப்பண்ணிசைப்பர்; காழோர் (பரிக்காரர்கள்) கடுங்களிறுகட்குக் கவள மூட்டுவர்; நெடுந்தேர்ப் புரவிகள் பந்தி பந்தியாய் நின்று, புல்லுணாத் தெவிட்டும்; பல்வகைப் பண்டங்களும் விற்கும் கடைகளில், விற்போர் மெழுகு தலைச் செய்வர்; கள் விற்போர், தம் புளித்த கள்ளின் விலையை வாங்குவோர்க்கு உரைப்பர்; கற்புடைய மகளிர் இருள் மாய்ந்து கதிர்விரியும் விடியல் எய்துதலால், அதுபோது செயற் பாலன வற்றைச்செய்தற்கு விரும்பி, தம் கண்களை வெறியோடப்பண்ணி, விளங்கும் மின்னொழுங்கை யொக்கும் பொற்சிலம்பு, தம் செஞ் சீறடியிற் கிடந்து புலம்பப் புறம் போதுவர்; அவ்வமயம், திண்

கவர்படைத்த, அவருறையும் நல்லில்லங்களின் காழொன்று கத வங்கள், திறக்கப்படுகையில், பேரொலிசெய்யும்; கள்ளுண்டு களிப்போர், வெறியால், தட்டமழலைச்சொற்களை (தடைபட்டு வரும் சொற்கள்) வழங்க, கள்ளுண்ணும் பழஞ்செருக்காளர் தம் முழக்கத்தில் அச்சொற்கள் முன்னின்றெழும்; நின்றேத் தும் இயல்பினராய சூதர்கள் வாழ்த்த, இருந்தேத்தும் மாகதர் தம் மன்னன் புகழை நவலுவர்; வைதாளிகள் தத்தம் துறைக்கு உரியனவற்றை முறையே இனிதாக இசைப்பர்; நாழிகை கூறு வோர் நாழிகை அளந்து சொல்லுவர்; பள்ளியெழுச்சி முரசம் ஒருபுடையதிர, ஏறுகள் தம்முள் மாறுபட்டு ஒருபால் முழங்கும்; பொறிமயிர்க்கோழிகள் ஒருசார் வைகறையியம்ப, ஒருசார் வண் டாழ்ங்குருகுகளும், காமுற்ற அன்னச் சேவலும் தத்தமக்குரிய பெடைகளை யழைக்கும்; அணிமயிலும் தம் அம்மென் பெடை யினை அழைப்பான் அகவும்; பிடியொடு கூடிய பெருங்களிறுகள் முழக்கஞ்செய்ய, கரடி முதலிய வலிமிக்க விலங்குகள் கூட்டி லுறையும் வயப்புலியொடு கலந்து முழங்கும். நீலவானத்தின் கண் மிளரும் மின்னின் நுடக்கமும் மாணிழையுமுடைய மது வுண்டு களிப்பு மீதூர்ந்த மகளிர் தம் கணவரொடு புலந்தனராய் அறுத்தெறிந்த பருத்தவடமாய் ஆரத்திற் சொரிந்த முத்துக் களோடு, பொன்னுருக்கும் நெருப்புச் சிந்திய நிலம் போல மாணிக்கம், மரகதம், பொன், மணி முதலாயினவும் பச்சைப் பாக்கும், புதுமணல் பரந்த முற்றத்தில் விழுந்து கிடத்தலால், அவற்றையும் பிற வாடிய பூக்களையும் வண்டுந்தேனும் மொய்த்து ஆர்க்கும்.

அன்றியும், இவ்வூர், வளங்கெழுமிய அரும்பண்டங்கள் பல வற்றோடு, பிறர்தோள் குற்றமாம் வகைப் பெருத்த பெருந்தோள் மறவர் பலரைக் கெடுப்ப அவர் புறந்தந்தோடுங்கால் இடைப் புலமாய போர்க்களத்து வினையோரை யிழந்துநிற்கும் எந்து கோட்டியானைகளும், பகைப்புலத்துக் கவரப்பட்ட பாய்பரிப் புரவிகளும், காய்சினங்கனலும் தறுகண்மை மிக்க கூளியர் (வேட்டுவர்) பகைவருரைச் சுடவெழும் ஒளியில் நிரைகாத் துறையும் வீரமாளவெட்டி ஏந்தியவேலே கோலாகக்கொண்டு

ஓட்டிக்கொணர்ந்த ஆநிரையும், அகநாடு சூழநிற்கும் முழுமுதலரணங்கட் கமைத்துள்ள அணங்குடைய கதவுகளும், நாடோறும் தமக்குச் செல்வமிகுமாறு கையாற்றொழுது வாயால் வாழ்த்திப் பகற்காலத்தே பிறர் திறையாகக் கொண்டுவர வந்த சிரியகலங்களும், அத்தன்மைய பிறவும் கங்கைப்பேரியாறு ஆயிர முகமாகக் கடலின்கட் பரந்ததுபோலப் பரந்து நிற்றலால் ஒருவகையினும் அளந்து முடிபுகாண்டல் இயலாததகைமை யுடையதாய், தன் பொங்கழகினைக் காண்பான் பொன்னகரும் வறிதாகப் புத்தேளிர் வந்தெய்தும் புகழ்படைத்ததாய், நுண்ணிய அறல் பரந்த துறைதோறும் பல்வகைப் பூக்கள் செறிந்த தண்டலைகள் சூழப் பெற்றதாய் நெடுங்காலம்; அடிப்பட்டிருந்த பெரும்பாணர் இருக்கையும், மண்ணுள்ளவளவு மாழ்ந்த நீலமணிபோலும் நீர் நிரம்பிய கிடங்கும், விண்ணுற வோங்கிநிற்கும் பல்வகைப் படைகள் அமைக்கப்பெற்ற புரிசையும், முகில்தவழும் மலைபோல் நிவந்த மாடங்களோடு தெய்வமுறையும் நெடுநிலைகளும், நெய் பலகாலு மிடுதலாற் கருகின திண்ணிய கதவுகொண்டு வையை யாறு இடைவிடாது ஓடுமாறுபோல மாவும் மாந்தரும் இடையறாத வாயிலு முடையது; நான்மாடத்தால் மலிந்த புகழ்கூடும் பெரும்பதியுமாகும்.

இந்நகர்க்கண்,

‘சினைதலை மணந்த சுரும்புபடு செந்தீ
ஒண்பூம் பிண்டி அவிழ்ந்த காவில்
சுடர் பொழிந் தேறிய விளங்குகதிர் ஞாயிற்(று)
இலங்குகதிர் இளவெயில் தோன்றி யன்ன
தமனியம் வளை இய தாவில் விளங்கிழை
நிலம்விளக் குறுப்ப, மேதகப் பொலிந்து,
மயிலோ ரன்ன சாயல், மாவின்
தளிரே ரன்ன மேனி, தளிர்ப்புறத்(து)
ஈர்க்கின் அரும்பிய திதலையர், கூரெயிற்(று)
ஒண்குழை புணரிய வண்டாழ் காதில்
கடவுட் கயத்(து) அமன்ற சுடரிதழ்த் தாமரைத்
தாது படு பெரும் போது புரையும் வாண்முகத்(து)
ஆய்தொடி மகளிர்’

பொற்கலங்களில் மணநாறும் இனிய பானத்தை யெடுத்து நினக்குத்தருவர். நீ அதனையுண்டு, துயில்கொண்டு, பின்னர்ச் செல்வத்தை நினைந்து இன்புறுகின்ற பற்றுள்ளம் உறக்கத்தை யுணர்த்துதலால், அது நினைத்துப் பின்னர் இனிதெழுந்து அரசர்க்குரிய கடன்களைக் கழித்துக் கடவுள் வழிபாடு செய்தல் வேண்டும். அவ் வழிபாட்டை, வல்லோனொருவனாற் செய்யப் பட்டு, எழுதிக்கை செய்யவும்பட்ட ஒரு பாவையினிடத்துத் தெய்வத்தன்மை நிகழ்ந்ததுபோலும் வடிவுடையனாய் நீ விளங்கு வாயாக!

பின்னர், நறுமணங்கமழும் சந்தனம் பூசிக் கதிர்விடும் முத்துவடம் தவழ்ந்து மிளிரும் நின் அகன்றமார்பில், தேனின மும் பிறமூசுவனவும் மொய்ப்ப, கழுத்தினின்றுந் தாழ்ந்த பூக்கள் பல விரவிய மாலையும் உடன் கிடந்து தவழ, வலிகெழுமிய நின் தடக்கையிற் பொற்றொடியும், பொலஞ் செயப்பொலிந்த மணிகள் அழுத்திய மோதிரங்களும் சுடர்விட்டு விளங்க, சோறமைவுற்ற நீருடைக் கலிங்கம் ஒன்று (கஞ்சியிட்டுப் பாலென வெளுக்கச் செய் உடை), மேலணியப்பெறும் கலங்களாற் பொலிவுமிகும் வகை யொழுங்குபெற வுடுத்து, மிக்குவருகின்றவோர் யாற்று நீர்ப் பெருக்கைக் கல்லணை யொன்று நின்று தாங்கினாலொப்பத் தம் படையைக் கெடுத்து மேல்வருகின்ற பகைவர் படைப் பெருக்கினை நடுநின்று தகைந்து, அவரையும் அறவே கெடுத்த, போரே விரும்பும் படைத்தலைவர்கள் வாள்வெற்றி பொருந்திய நின்தாள் வெற்றியை வாழ்த்த, ஒன்று வுலகத்தில் ஓங்கு புகழே ஒன்றும் வண்ணம் நிறுவிய மாறன் * முதலாகப் பகைவரை வென்று கொல்லும் தப்பாத வாளேந்திய இளங்கோசர் ஈறாகப் பலரும் சூழ்வர, யாவரும் புகழும் பேரணிகலம்பூண்ட ஐம்பெருங் கேளிருமுட்பட, மறமிக்க குறுநில மன்னர் பலரும் நெறி மாபு வழாத நின் வாய்மொழி கேட்டு அதற்குத் தகநிற்ப, பொற்புடைய புகழ் விளங்கும் அறங் கூறவையத்தார் நெருங்கி, நின் அறவியல்

* இம் மாறனை இவன் குடியிலுள்ளவோர் பாண்டியனென்றும், ஒரு குறு நில மன்னனென்றும் கூறுப.

டைப் புகழ்ந்தேத்தி, வாழ்த்த, "மறவர், செல்வர், குரிசிலர், வேக்கலர் முதலியோரையும், பெருஞ்செய் யாடவரையும் தம்மின்; ஏனோரும் தம்மின்" எனச் சிலரை வரைந்து கூறியும், வாயிலின் கண் தகையாமல் இவர்போல்வாரும் படையாளர் முதலியோரும் 'வருக' எனப் பொதுப்படக் கூறியும், காட்சிக்கெளியனாய் நாளோலக்கமிருக்கும் பேரகத்தின்கண் வீற்றிருத்தல் வேண்டும்.

அதுகாலை, 'புலவர், பாணர், பாட்டியர், வயிரியர் முதலாயினோர் வருக' என அன்புகனிய வழைத்து, அவர் தம் சுற்றத்தாராய், அவர்களாற் போற்றப்படுபவராய் வரும் பேரிரவலர் அனைவோர்க்கும் நீர் யாரென்றும் அவர்களைக் கேளாது அவர் காட்டின அளவைக்கொண்டு, கொடிஞ்சி நெடுந்தேர்கள் யானையொடுங்கொடுத்து, வேற்றுப் புலத்திலிருந்து கொணரப்பட்ட அரும்பொருள்களை யாவர்க்குமளித்து, அதனூடே, நாட்டில் வாழும் குடிமக்களைப் பெருக்கிப் புரத்தல் வேண்டுமாதலின், நற்பொருணூற்களைக் கசடறக்கற்றுத் தெளிவாயாக! கற்றவறிவினால், நின்புகழே எவ்வுலகத்தும் நின்று நிலவப்பண்ணுவாயாக! மண்டிலமாக்கள், தண்டத்தலைவர் முதலாய சுற்றத்தார்க்கு நடுவே, முந்நீர் நாப்பண் தோன்றும் ஞாயிறு போலவும், பலகலைகளைக் கற்றோரிடைப் பன்மீன் நடுவண் விளங்கும் திங்கள் போலவும், நீ, பொலிவுகூர் சுற்றத்தோடு பொலிந்து இனிது வாழ்வாயாக!

இங்ஙனம், தம்புகழ் எங்ஙனும் பரவும் வகை மலர்தலையுலகினைத் தம்மேவலின் நடத்தி, மக்கட்குரிய மனனுணர்வின்மையால் பிறப்பற முயலாது பயனின்றி மாண்டோர், கரையைப் பொருது இரங்கிக் கனையும் இருமுந்நீர்த்திரையிடும் நுண்மணலினும் பலராவர். அப்பயனின்மையாலே, நீயும் அவ்வாறு கழியலாகாது என்று இவ்வாழ்விற் பெரிதாயிருப்பதோர் பொருளை யான் கூறுவேன்; ஆயினும், அண்ணலே! அஃது என்னால் எளிதிற் காட்டலரிது. அதனை, எல்லாவுலகையும் தன் செவ்வாயிற்றந்து காட்டிய மாயோன்போன்ற, நல்ல யாகங்கட்குக் கூறிய துறையனைத்தும் முன்னரே முடித்துவிட்ட தொல்லாணை நல்லாசிரியராம் தத்துவவுணர்வான் மெய்ப்பொருளுணர்ந்து வீட்

டின்ப நுகர்ச்சிகாணும் ஆசிரியர் பலர் பின்பு கூடின கந்தழியாய கொள்ளையை அவரிடத்தே பெற்று நுகர்ந்த புகழ்சால் சிறப்பினன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யொப்ப நீயும் நல்லாசிரியரிடத்தே கேட்பாயாக! கேட்டு, நீ, அவ்வாசிரியரிடத்துப் பெறும் கந்தழியின் வியப்பும், பின்பு நீ பெற்றமையும் அமைதியும், புகாறு சிறப்பினவாய் எய்தும் நின் தலைமைகள் யாவும் சான்றோர் பலரால் தம் மனவயிற் சொல்லப்பட்டு விளங்க, பெரும! நல்லூழியுள் "இத்துணைக்காலம் இருத்தி" எனப் பால்வரை தெய்வத்தால் வரையாக அறுதியிடப்பெறும் நாள் முழுதும் நீ இனிது பேரின்பம் நுகர்ந்திருப்பாயாக! அதனை நுகராது ஐம்பொறிகட்கும் முன்னிற்கப்படுவனவாய இந்நுகர் பொருள்களோடு நினக்கு என்னவுறவுண்டு! நின்னிடத்துண்டாய மாயை இனிக் கெடுவதாக!! அண்ணலே! நீ நெடிது வாழ்க!!!

தொடரும்.

---

# கண்ணகியும் மாதவியும்.

---

திரு. இராம. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள், கரந்தை.

---

(முற்றொடர்ச்சி. 239 பக்கம்.)

## கண்ணகியின் பிரிவாற்றுமையும் மாதவியின் பிரிவாற்றுமையும்.

கண்ணகியின் பிரிவாற்றுமை மாதவியின் பிரிவாற்றுமை எனும் இவையிரண்டையும் ஒப்பு நோக்குமிடத்து, கண்ணகி தன் கணவன் தன்னைப் பிரிந்ததும் பெரிதும் வருந்தித் தன்னை ஒப்பனை முதலியவை செய்து கொள்ளாது மக்களுக்கு இன்ப நினைவூட்ட எதுவாக விருக்கும் பொருள்களையும் செயல்களையும் வெறுத்துத் தன் ஊழ்வினையை நினைந்து வருந்தியிருந்தனள்.

மாதவியோவெனின், தன்னொடு ...
மெனப் பிரிந்த காரணமறியாது; ...
மழிந்து, உயிரை இழந்த உட...
தென்றலையும் மாலைநேரத்தையும் ...
இல்லாதொழிந்தனனே என்றேங்...
ராண்டினில், ஒருநாளும் பிரியா...
ஆற்றாளாய்த் தன் தோழியிடம் ...
லனை அவ்வினிய மாலைக்காலம் ...
இவ்விருமகளரின் பிரிவாற்றாமை...
கூறியிருப்பது கவனிக்கத் தக்க...
லனை மீண்டும் பெற முயன்றன ... ...ண்ணகி பிரிந்த காதலனை
மீண்டும் பெற முயலாது ... வினையை நொந்து, தன் கணவன்
மீண்டும் தன்னை நாடிவ... நன்னாள் எந்நாளோ என ஏங்கி
யிருந்தனள்.

இவ்விருமகளிரின் ...ய்கைகளையும் கற்புடை மகளிரின் ஒழுக்கம் என்னுமுறை... வைத்துச் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, ஏதேனும் ஏற்றத் தாழ்... டயவாயிருக்குமோ வெனும் ஐயப்பாடு நிகழலாம். கோவல... ன்னை பிரிந்தகாலத்து கண்ணகி அவன் முழுமனத்தையும் ... அவனுக்கு இல்வாழ்க்கையினின்பமும் அருளும் அளி... னைப் பிரிதலில்லா அன்புடையாளுக்குக் கொள்ளப்போதுமான ஆற்றல் அடையாதிருக்கலாம். மணமான பின்னும் தன் கணவனோடு நீண்டநாள் பழகாததுபற்றி அவனிடத்துத் தன் உரிமையைத் தாழ்மையோடு குறிப்பிடப் போதுமான அளவுகூட இடந்தரவில்லை. இவ்விதக் குழப்பமான நிலையில் செய்வதொன்றும் அறியாது தன் காதலன் மீண்டும் தன்னை நாடிவரும்நாள் எந்நாளோவென ஏங்கி இருந்து விட்டனள். இவ்விருவரையும் மணத்தால் ஒன்று சேர்வித்த பெற்றோர்க்கு, இவர்களின் பிரிவுக்காலத்தும் ஒன்று சேர்த்திடும் உரிமையும் கடமையுமுண்டன்றோ? அவ்வாறு அம்முதியோர்கள் ஒன்று சேர்க்கமுயன்றதாகவோ அன்றி மாதவியின் மனத்தைக் கண்டித்ததாகவோ, நூலில் யாண்டும் காணப்பெறாதது, மாதவியின் மனத்தைப் பற்றிய நமது எண்ணத்தை உறுதிப்படுத்து

வலனைக் கணவனாகத் தானே தேர்ந்
ாள். கோவலனும், நீங்குதலில்லா
ன். இளமையின்பம் நுகர்ந்து
ார். இவ்வித இன்பவாழ்க்கையில்
ர். இல்வாழ்க்கையில் யாண்டுபல
கணவனும் மனைவியுமெனும்
ந் நிலையில் தன்னுயிரினும் சிறந்த
ய ஆற்றளாகப் பிரிந்தகாதலனைத்
கன் தோழிகையில் மடலெழுதி
தடுக்க உரிமையிருந்த மாதவிக்கு
அவ்வாறு தேர்ந்தெடுத்த கண ன் தன்னைப் பிரிந்த காலத்து மீண்டும்பெற முயல்வதிலும் அவ்வு மை உண்டன்றோ? எனவே இவ்விரு மகளிருடைய செய்கைக ம் அவரவர் மணமுறைக் கேற்பத்தகுதி உடைத்தெனக்கொள் காடு மாதவியின் செய்கை கற்பின் வரம்பு கடந்த செய்கை ாதெனவுங் கொள்ளல் வேண்டும்.

கண்ணகியின் உடன்போக்கு. ாடச் சென்றவிடத்து மாதவியை வெறுத்துப் பிரிந்த கோவ பல ஆண்டுகளாகத் தான் மறந்திருந்த கண்ணகியை நா அவளுடைய வாடிய மேனியின் வருத்தங்கண்டிரங்கி பெற்றோர் தேடித் தந்த பொருள்கள் யாவையும் மாதவிக்காக்கி வறுமையுற்றேன் என் கண்மணியனையாளாகிய உன்னைக் காண்பதற்கும் என் மனம் நாணுகின்றது” என்றான். கற்பரசியாகிய கண்ணகி தன் கணவன் வறுமையுற்று வருந்துகின்றானென எண்ணி “ஐயனே! ஐயனே!! என்னிடத்திருக்கும் சிலம்புகளை இதோ தருகின்றே”னென்ன மகிழ்வோடு கூறினாள். தன் மனைவியின் அளவுகடந்த அன்பையும் அருளையும் உணர்ந்து மகிழ்ந்த கோவலன் “என் கண்ணே, நீ அன்போடு தரும் அச்சிலம்புகளை விற்று வரும் பொருளையே மூலப்பொருளாக வைத்து வாணிகம் செய்து பொருளீட்ட எண்ணுகின்றேன். அதுபற்றி இவ்விடம் விட்டு மதுரைமாநகர் செல்லவேண்டும். நீயும் என்னுடன்

புறப்படு" எனக் கூறினன். இருவரும் அன்று இருள்செறிந்த விடியற்காலத்தே தம் பெருமைசேர் வீட்டைவிட்டுப் பெயர்ந்து மதுரை நோக்கி நடந்தனர்.

மாதவியின் தனிமை. கடற்கரையில் தன்னைத் தனிமையில் விட்டுச்சென்ற கோவலனிடம், "இம்மடலைக் காட்டி இன்று மாலைக்காலம் நீங்குவதற்குள் ஈண்டவரை அழைத்து வருக" எனப் புகன்று மாதவி தந்த மடலைக்கொண்டு சென்றதோழி கோவலனைக் கண்டு தான் கொணர்ந்த மடலைத் தந்தன[illegible] கண்ட கோவலன் "மாயப்பொய் பல [illegible] வெறுக்கின்றேன், அவள் கூட்டுறவு இனி[illegible] பலவாறு தூற்றி அவளெழுதியனுப்பிய மடலையும் [illegible] விட்டான்.

இச்செய்தி யனைத்தை[யு]ம் தோழியுரைப்பக் கேட்ட மாதவி மணியிழந்த நாகம்போன்[று] செயலற்ற நெஞ்சமொடு வீழ்ந்து இமை பொருந்தாது வருந்திக்கிடந்தனள். மறுநாட் காலை கோவலன் கண்ணகியோடு நகர் நீங்கிய செய்தியை அறிந்த மாதவி, நான் என்ன பிழைசெய்தேன். எதற்காகக் கற்பிற்சிறந்த கண்ணகியையும் அழைத்துக்கொண்டு ஒருவருமறியாது நாட்டை விட்டுச் சென்றார் என எண்ணி அருந்துயாமடைந்தனள்.

அவ்வாறு துய[ரு]ற்ற மாதவி அருகிலிருந்த கவுசிகன் என்பானிடம் மீண்[டு]ம் தன் காதலனுக்குத் திருமுகமொன்றெழுதித்தந்து தாங்[கள்] என்கண்மணியனையானை எங்கிருந்தாலும் தேடிக்கண்டு இத்தி[ரு]முகத்தைக் காட்டுக என அனுப்பினள். ஊக்கமிகு கவுசிகனும் கோவலனை எங்கும் தேடி அலைந்து ஓர்நாள் மதுரையை அண்மிய ஓர் சிற்றூரின் குளத்தருகில் கோவலன் நிற்கக்கண்டு மாதவியனுப்பிய ஓலையைக் கொடுத்தனன். அங்ஙனம் கொடுத்த ஓலைப்படிப்புறத்து மண்மேல் மாதவி குறுநெறிக் கூந்தலாலொற்றியபொறி தன்னுடன் கூடியுறைகின்ற காலத்தே வாசநெய்யுரைத்த தன்மையைத் தனக்கு உணர்த்திக் காட்டியதாதலான் அதனைக் கையாற் கடுநின் விடுவியானுய்ப் பின்னர் விடுவித்து ஏட்டைவிரித்து அதனுட்கிடந்த

அடிகண் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டுங்
குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி.

...கத்தால் இவ்வாறு பலவகை யேதம் பயக்குமென்று ...பதை நினைந்து மனங்குழைந்து அவள் ...த்தில் எனத்தெளிந்து, "கவுசிகரே! என் ...மரடியைத் திசைநோக்கித் தொழுதேனெனச் ...தோடு மாதவியின் மனத்துயரையும் விரைந்து சென்று அகற்றுக" எனச்சொல்லி விடுத்தனர்.

## கண்ணகியின் உடன்போக்கும் மாதவியின் தனிமையும்.

பல ஆண்டுகளாகப் பிரிந்திருந்து மீண்டும் கண்ணகியைக் காணச்சென்ற கோவலன் தான் நீண்டநாள் அவளைப்பிரிந்திருந்த தற்குத்தக்க காரண முரைக்கவேண்டி மாதவியின் அறியாமையைக் குற்றப்படுத்தி அக்குற்றத்தைத் தன்பால் மேற்றி "மாயப்பொய் பல கூட்டும் மாயத்தவளாகிய மாதவியின் கூட்டுறவால் கண்மணி யாகிய உன்னையும் பிரிந்திருந்தேன். என் பற்றோர் தேடிவைத்த பொருளையும் இழந்தேன். இப்பொழுது உன்னைக்காண என் மனம் நாணமடைகின்றது" எனப்பெரிதும் வருந்துவான்போன்று புகன்றனன். கோவலன் அடைந்ததாகச் சொல்லும் நாணம் எவ்வகைத்தாயினுமாகுக. கண்ணகியின் தூய்மையான உள்ளத் தினியல்பறியாக் கோவலன் கண்ணகி தன்னைப் பிழைபடக் கருதி யிருப்பாளோ வெனும் ஐயத்தால் தன் நிலையை இவ்வளவு இழித் துக்கூறிக்கொண்டதோடு அன்பிற்சிறந்த மாதவியையும் குற்றப் படுத்திக் கூறினனேயொழிய உண்மையாகக் கண்ணகியின் தூய உள்ளத்தின்திறனை ஒரு சிறிதாகிலும் கோவலன் அறிந்திருந்தால் இவ்வெற்றுரைகளை அவளிடம் சொல்லியிருக்கவே மாட்டான்.

இவை நிற்க, இவன் மாதவியினிடம் கண்ட குற்றந்தான் என்ன? கடற்கரையில் மாதவி கோவலனோடு இன்புற்றினி திருக்கையில், தன் தோழி வைத்திருந்த யாழை வாங்கிக் கோவலனிடம் தந்தனள். கோவலன் மாதவியை மகிழ்விக்கக் கானல்வரி பாடத்தொடங்கினான். அவ்வாறு கோவலன் பாடிய பாக்கள் அகப்பொருளியலில் களவுத்துறையில் தலைமகன்கூறிய மொழிகளாக இருந்தன. இதுவே போன்று மாதவியும் யாழ்கைக் கொண்டு மிக இனிமையாகக் களவுத்துறையில் தலைமகள் கூறிய மொழிகளைப் பாடினாள்.

கோவலன் மனம் கொதித்து மாயப்பொய் பலகூட்டும் மாதவி வேறு எவன்மேலோ மனம் வைத்திருக்கின்றாளெனப் பிறழ நினைந்து சினங்கொண்டு மாதவியைக் கடற்கரையில் தனிமையாக விட்டுச் சென்றனன்.

"மடலவிழ் கானற் கடல்விளை யாட்டினுள்
கோவல னூடக் கூடா தேகிய
மாமலர் நெடுங்கண் மாதவி" என்றாங்கு விளையாட்டுப்

பூசலை வினையாகக் கருதிய குற்றம் கோவலனுடையதே யன்றிப் பேதையாகிய மாதவியின் பாலதாகுமோ? ஆகாதன்றோ? அதனால் அவ்வாறு கோவலன் மாதவியைக் குற்றமுடையாளெனக் கூறினும் அஃது யாங்ஙனம் பொருந்தும்? பொருந்ாதன்றோ?

மாதவி கோவலனைப் பொருள்பற்றி மணக்கவில்லை என்பதை மணிமேகலை ஊரலருரைத்த காதையில் மாதவி தன் கணவனுற்ற துன்பம் பொருளாய்த் தன்பொருள், சுற்றம், மனை யாவையும் வெறுத்துத் துறவுபூண்டு அறவோர் பள்ளியில் தன்மகள் மணிமேகலையோடு மிருக்க, மாதவியின் நற்றாயால் அனுப்பப்பெற்ற வயந்தமாலை யென்பாள் ஆண்டுற்று மாதவியின் வாடிய மேனி கண்டுளம் வருந்தி "பொன்னேரனையாய் புகுந்தது கேளாயுன்னோடு இவ்வூ ருற்றதொன் றுண்டுகொல்" நின்துறவை நினைந்திவ்வூராரனைவரும் பெரிதும் வருந்துகின்றனர் எனக்கூறக் கேட்ட மாதவி

"காவலன் பேரூர் கனையெரி யூட்டிய
மாபெரும் பத்தினி மகண்மணி மேகலை
யருந்தவப் படுத்த லல்ல தியாவதுந்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅ
ளாங்கன மன்றியு மாயிழை கேளா
யீங்கிம் மாதவ ருறைவிடம் புகுந்தேன்
மறவண நீத்த மாசறு கேள்வி
யறவண வடிகள் அடிமிசை வீழ்ந்து
மாபெருந் துன்பங் கொண்டுள மயங்கிக்
காதல னுற்ற கடுந்துயர் கூறப்
பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவ தறிக." என அறவணவடிகள் அருள

யான் இத்துறவொழுக்கம் பூண்டேன். என் மகளும் இத்தவ வொழுக்கத்திற் செல்வதற்கே உரியவளெனக்கூறும் மொழிகளால் தன் கணவனின் பிரிவினால் மாதவியடைந்த துன்பமும், கண்ணகியிடமும் மணிமேகலையிடமும் அவள்கொண்டுள உயர்ந்த எண்ணமும், மாதவியின் மாசற்ற கற்பின் திறத்தை நன்கு புலப்படுத்துகின்றனவன்றோ? பொருளையே பெரிதெனக் கருதும் பாத்தையெனின் தனக்கிருக்கும் திரண்ட பொருளொடு மற்றெல்லா இன்பங்களையும் அடையலாமன்றோ? இவையனைத்தையும் தன் உயிரினும் சிறந்த காதலனின் பிரிவின்பின் வெறுத்துத் தள்ளித் துறவடைந்த தூய்மைசேர் உள்ளமுடைய ஓர் கட்டழகியைக் கற்புடைய மகளென்பதிலும் கற்பே இவள் உருவம் எனச் சொல்வதே சால்புடைத்து. கோவலன் கண்ணகியைத் தன்னுடன் மதுரைக்கு வரப்பணித்தது போன்று மாதவியை வரப் பணித்திருப்பானேல் இவள், இம்மண்ணுலகாகிய மதுரைக்கு மாத்திரமன்று மற்றெவ்வுலகிற்கெனினும் தன்காதலனுடன் செல்வதே பேரின்பமெனக் கருதிச் சென்றிருப்பாள். கோவலன் மாதவியின் உடல், பொருள், ஆவியனைத்தையும் ஒருங்கே கேட்

டிருப்பினும் மகிழ்வொடு தந்திருப்பாள். மாதவியின் அன்பு நிறைந்த உள்ளத்தைத் துன்பக்கடலில் ஆழ்த்திய கோவலனின் குற்றம் கண்டிக்கத் தக்கதொன்றே யன்றோ.

கண்ணகி விண்ணடைதலும் மாதவி துறவடைதலும். கோவலனையும், கண்ணகியையும் கவுந்தியடிகளிடமிருந்து அடைக்கலம் பெற்றுச் சென்ற மாதரி என்னும் இடைக்குலமடந்தை அவ்விரு காதலர்களையும் அழகிய ஓர் சிறுவீட்டிலிருக்கச் செய்து சமைத்தற்கு வேண்டிய பண்டங்களும், சமையற் பாண்டங்களும் கொடுத்துதவ, கண்ணகி நல்லமுது சமைத்துத் தன்கணவனை உண்ணும்படி செய்து மெல்லிய வெற்றிலைச்சுருளும் அடைக்காயும் தந்து அருகே நின்றனள். அவ்வாறுநின்ற காதலியை நோக்கிப் பொன்னே! கொடியே, புனைபூங்கோதாய், நாணின் பாவாய்! நீள்நிலவிளக்கே!, கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி! உன் சீறடிச் சிலம்பில் ஒன்றைக்கொண்டு போய் மாடமதுரையில் விற்றுவருகின்றேன். நான் திரும்பிவருமளவும் வருந்தாதிரு எனவிடைபெற்ற கோவலன் சிலம்பைக்கொண்டு கடைத்தெருவிற் சென்றனன்.

அங்கு எதிரில்வந்த பொற்கொல்லன் ஒருவனிடம் தன் மனைவி காற்சிலம்பைத்தந்து, இச்சிலம்பை இங்கு விலைக்கு வாங்குவாருண்டோவென வினவினன். அச்சிலம்பை உற்றுநோக்கிய பொற்கொல்லன் இச்சிலம்பு அரசனுடைய தேவிக்கல்லால் வேறெவர்க்கும் இசையாது. இதனை அரசனிடம் கூறி யான் வருமளவும் நீர் இங்கேஇரும் என்று கோவலனை ஓர் குடிசையில் அமைத்துச் சென்றான்.

பொற்கொல்லன் அரண்மனைக்குப் போகும்பொழுது தனக்குள்ளே பல எண்ணங்கள் எண்ணினன். நான் முன்பு அரண்மனையிற் கவர்ந்துகொண்ட சிலம்பு என்பாலுள்ளதென வெளிப்படுதற்கு முன்னமே அக்குற்றத்தை இவன்மீது சுமத்திப் போக்கி விடுவேன் எனக்கரவாடும் நெஞ்சொடு அரண்மனையை அடைந்தான்.

அப்பொழுது அரசன் அரண்மனையில் தன்காதலியின் ஊடல் தீர்க்கும்பொருட்டு அந்தப்புரத்தை நோக்கி இன்பநெறியனுய் விரைந்து சென்று கொண்டிருந்தான்.

அவ்வாறு சென்ற அரசனைப் பொற்கொல்லன் கண்டு வணங்கி "வாழி எம் அரசே! அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்துகொண்ட கள்வன் அச்சிலம்போடு என் சிறு குடிசையில் இருக்கின்ருன்" என்றனன். இதுகேட்ட வேந்தன் வினைவிளைகாலத்தால் காவலாளரைக் கூவியழைத்து அரசமாதேவியின் காற்சிலம்பு அவன் கையிற் காணப்பட்டால் அவனைக்கொன்று சிலம்பைக் கொண்டு வருக எனப்பணித்தனன். அரசனுணைபெற்ற காவலாளரோடு சென்ற பொற்கொல்லன் அவர்களுக்குக் கோவலனைக் காட்டி இவனே அரசமாதேவியின் சிலம்பைக் கவர்ந்த கள்வனென்றும் இவன் கையிலிருக்கும் சிலம்பே அச்சிலம்பென்றும் பொய்கூறிக் காவலாளரைக் கொண்டு கோவலன் வெட்டுண்டிறக்கச் செய்தனன். இவையனைத்தையும் கண்டுவந்த ஆய்ச்சியர் கூறக்கேட்ட கண்ணகி, பொங்கி எழுந்தாள், விழுந்தாள்; "மன்பதை பழிதூற்ற, மன்னவன் தவறிழைப்ப அன்பனை இழந்தேன் யான்" ஐயகோவென அழுதாள். என்காற் சிலம்பை விலைபகரச் சென்ற குற்றமற்ற என் கணவனை நீதியற்ற அரசன் கொலை குறித்தனனே. ஏ! காய்கதிர்ச்செல்வனே என் கணவன் கள்வனு? நான் பத்தினிப் பெண்டிருள் ஒருத்தியாயிருந்தால் என்கணவன் குற்றமற்றவனென இவ்வூரார் அறியச் செய்வேன் என வெஞ்சினம் கூறித் தன்கணவன் வெட்டுண்டிறந்து கிடக்கும் இடத்திற்குச்சென்று காலையில் அவன் மாலையைச் சூட்டிய தன் அழகிய கருங்கூந்தலை அன்று மாலையே அவன் இறந்துகிடந்த இரத்தவெள்ளத்தில் நனைத்து அவன் உடலைத்தழுவி 'பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதே' 'தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக்கிடப்பதே' எனப் புலம்பி அழுதாள். இவ்வாறு தன்கணவன் கொலையுண்டிறக்கச்செய்த அரசன்மேற் சினங்கொண்டு தனது மற்றொரு சிலம்பொடு அரசனிடம் சென்று 'ஏ நீதியற்ற அரசனே! என் காற்சிலம்பை விலைபகரவந்த குற்றமற்ற என்கணவனைக் கொலை

குறித்தனையே! இது முறையோ, இதுவோ உன் செங்கோல்! தேர்வேந்தே! இதோ அச்சிலம்பின் இணைச்சிலம்பு என்கையில் இருக்கின்றது. என் சிலம்பின் உள்ளிடுபரல் மாணிக்கமாகும் எனத் தன்கணவனிடமிருந்து அரசன் கொண்ட சிலம்பைத் தான் வாங்கி உடைத்தனள். உடைத்த பொற்சிலம்பினுள்ளிருந்து மாணிக்கங்கள்சிதறின. தன்தேவியின் காற்சிலம்பின் உள்ளிடுபரல் முத்தென உணர்ந்த அரசன் இம்மாணிக்கங்களை உள்ளிடு பரலாகக் கொண்டசிலம்பு கோவலனுடையதே. பொற்கொல்லன் சொல்லை நம்பிக்குற்றமற்ற கோவலனைக் கொன்ற நீதியற்ற அரசன் இவ்வரி யணைமேலினியிருக்க அருகனன்றென மண்ணில் வீழ்ந்து மாண் டனன். பாண்டியன் இதனொடு தன்சினம் நீங்காத கண்ணகி தன் கற்பின் திறத்தால் மதுரை நகரை எரியூட்டி அழல்மண்டச்செய்த பின்னர் ஒன்றுந்தோன்றுதவளாய் வைகைநதிக் கரை மேற்றிசையோடு பதினன்கு நாட்கள்வரை நடந்து மலைநாட்டி லுள்ள செங்குன்றை யடைந்தனள். அங்கு கோவலன் தேவ உருவோடு கண்ணகிமுன் தோன்றித் தன் காதலியைத் தன் விமானமேற்றி விண்ணுல கெய்தினன்.

மாதவி துறவடைதல். தன் காதலன் பிரிவால் துன்புற்று வருந்தியிருந்த மாதவி கோவலன் மதுரையிற் சிலம்பு விற்கச் சென்று அவ்வூர் அரசனாற் கள்வன் எனக் கொலையுண்டிறந்ததை யும், இத்துன்பம் பொருத கண்ணகி தன் கணவன் குற்றமற்றவ னென ஊராறியச் செய்ததுமன்றி அம்மதுரையைத் தன்கற் பின் திறத்தால் தீக்கிரையாக்கியதையும் உடனிருந்து கண்டுவந்த மாடலமறையோ னுரைக்க அறிந்தனள். இத் தாங்கொணுத் துன்பத்தைப் பௌத்தாசிரியராகிய அறவணவடிகளிடம்சென்று மாதவி முறையிடவே அத்தவப்பெரியார்

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவ தறிக." என்றருளி

மாதவியையத் தவவழியிற் சேர்த்தனர். அன்றே தன் பொருள், சுற்றம், வனப்புயாவையும் வெறுத்துத் துறவுபூண்டதன்றித் தன் மகள் மணிமேகலையையும் தவவழியிற் சேர்த்தனள்.

## கண்ணகியும் மாதவியும்.

தன் கணவனோடு மதுரைக்குச் சென்ற கண்ணகி தன் குற்றமற்ற கணவனை அரசன் கள்வனெனக் கருதிக் கொலை செய்யப் பணித்தான் எனக்கேள்வியுற்றதும் பொங்கிய சிந்தினளாய் அரசனிடம் சென்று தன் கணவன் குற்றமற்றவனென உணரச் செய்து பதினான்கு நாட்கள்வரை படாததுன்பமெல்லாம் பட்டுத்தன்கணவனோடு விண்ணுலகிற்கு விமானத்திற்சென்றனள்.

மாதவிக்கு இச் செய்திகளெல்லாம் மதுரையில் உடனிருந்து கண்டுவந்த மாடலமறையோன் சிலநாட்கள்கழியப் புகாரில் வந்து சொல்லவே தெரியவந்தன. தன் ஒப்பற்ற காதலன் இறந்து பட்டானென அறிந்தவுடனே தன் செல்வம் சுற்றம் யாவையும் வெறுத்துத் தள்ளி தன் உயர்ந்த வனப்பையும் சீர்குலைத்துத் தவநெறியிற் சேர்ந்து மீண்டும் மீண்டும் பிறந்து இத்தகைத் துன்பங்களுக்குத் தான் ஆளாகாதிருக்க இப்பிறவித்துன்பம் ஒழிவதாக வெனத் தவமியற்றி வந்தனள். கண்ணகியைப் போன்று மாதவியையும் கோவலன் மதுரைக்கு அழைத்தேகி யிருப்பானெனின் மாதவியும் கண்ணகியோடு மற்றொரு கண்ணகி யாய் விளங்கியிருப்பாள். கண்ணகியை அழைத்துச் செல்லச் செங்குன்றிற்கு வந்த விமானத்தில் மாதவிக்கும் தேவர்கள் இடம் வைத்தே அனுப்பியிருப்பார்கள்.

மாதவி கோவலனின் மனைவி என்னும் உரிமையில் ஒரு சிறிதும் தவறியவளாகமாட்டாள். எனவே கண்ணகியும் மாதவியும் கோவலனின் ஒரேபடித்தான கற்பும், உரிமையும் அன்பும் உடைய இருமனைவியரேயாவர்.

---

உ

# சுவாமிநாதம்.

---

வெளியிடுவோர்:—

திருவாளர், இ. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள்,

தமிழ்ப்பண்டிதர், திருவையாறு.

---

இந்நூல், ஏறக்குறைய ஓரிரு நூற்றாண்டுகட்கு முன்னர் செந்தமிழ் நாட்டிலுள்ள கல்லிடையூரில் தோன்றிய சாமிகவிராசனெனுஞ் சீரிய புலவரா லியற்றப்பட்டதாகும்; ஐந்திலக்கணப் பகுதியை நன்கினி துணர்த்துவது; ஒவ்வோரதிகாரமுந் தனித்தனி மும்மூன் றியல்களை யுடையது; அந்தாதித் தொடையால் எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தப்பாவால் வெற்றடைமொழிகளைப் புணர்க்காது செய்யப்பட்டுத் திகழ்வது; சொல்லாழமும் பொருளாழமு மொருங்குடையது; பாயிரமும் நூன்மரபும் உள்பட 213 செய்யுட்களை யுடையது.

இவ்வேட்டுப்பிரதி தில்லைப்பதியுறைபுளாகவுடைய திருநெல்வேலி வேளாண்வகையினரும் எனதரிய நட்பாளருமாகிய நீலமேகம் பிள்ளை யென்பவரால் பலவிய நூலுரைகளொடு கிடைத்தது. அவைகளு ளிவ்வேடு மிகப்பழமையுடையது. சிற்சில விடங்களிற் றொடர்மொழிகளும், சிற்சில விடங்களிற் சிறுபூச்சிகளாலரிக்கப்பட்டமையின் எழுத்துக்களுங் காணப்பட்டில. இச்சிறந்த நூலிற்கு, அறிஞராயுள்ளார் பேருரையொன்று, இயற்றியுலகிற் குதவுவராயின், இயல்நூல் பயிலுஞ் சிறாஅர்க்கும் பெரிது முதவியாகும்.

இப்பெயருள்ள நூல் இதுகாறுங் கேட்கப்படாதது. ஆயினும் மூலபாடத்தையாயினும் வெளியிடுசெயல் வேண்டுமெனு மவாமீக்கூர்ந்தமையான் இப்பயிற்சி சிறிதுஞ்சாலா எளியேன் இச்செயல் கைக்கொண்டுள்ளேன். வேறுபிரதி யொப்புநோக்

கற்குமின்று. எல்லாம்வல்ல விறைவன் றிருவருளா லிப்பெருஞ் செயல் முற்றுப் பெறுமாறு அவ்விறைவன்றுளை யென்றுமுன்னித் தொடங்குகின்றேன். அறிஞர் பொறைசெய்வாராக.

---

உ

# சுவாமிநாதம்.

## காப்பு.

திருவுங் கல்வியுஞ் சீருந்த ழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம்ப ழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## நூன்மரபு.

பூமகளும் பாமகளும் போற்றுமிம வான்மகளுங்
கோமகளுங் கொண்டார்கைக் குஞ்சரமே—மாமகிமைத்
தொன்னூற் குளுண்டாய்ச் சுவாமிநாதப் பெயராம்
இந்நூற்குங் காப்பாகுமே.

## சிறப்புப்பாயிரம்.

பூமிசைபன் மொழியின்வேங் கடமுக்க டற்குட்
புணர்தமிழைந் தியணிகண்டாய்ந் தாரெளிதி னுணரத்
தோமின்முன்னூல் வழியொருநூல் வேண்டுமெனத் துறைசைச்
சுடர்மணிசுப் பிரமணிய குருமணிபார்த் தருள
ஆமிதெனக் குருபதமுந் திருக்குறிப்புந் தலைக்கொண்
டகத்தியனைச் சிவசுப்பிர மணியனென வீன்ற
சாமிகவி ராசனதி குலத்தோன்கல் லிடையூர்ச்
சம்பனன்செய் தனன்சாமி நாதமென்றிந் நூலே. (1)

நூல்பதிகங் குற்றமின்மை யழகுமத முத்தி
நுவல்பயன்சூத் திரந்திரட்டோ டுரைதழீஇ யினதாஞ்
சாலுமது முதல்வழிசார் பெனமூன்று முதனூற்
றலைவனா லவ்வழித்தாய்ச் சிலவிகற்பாம் வழிநூல்

மேலவற்றோர் மருங்குபற்றிச் சார்புகா லத்தால்
வேறுபடும் பாயிரந்தான் பொதுச்சிறப்பென் றிரண்டாம்
எலவற்றிற் பொதுவீவோன் றன்மைகொள்வோன் றன்மை
யீதல்கொள லியல்பெனநாற் பகுதிகுல வுறுமே. (2)

குலனருள்வெஃ காமைசுசி யொழுக்கமன்பு தெய்வங்
கொள்கைசெல்வம் வாய்மையெழி லின்றியமை யாமை
யுலகியற்கை யறிதலழுக் காறின்மை மேன்மை
யுரைவன்மை பொறைநிலைமை தோற்றநடு நிற்றல்
கலைபயிலுந் தெளிவுமுக மலர்ச்சியையந் தீர்த்தல்
கரவின்மை பொருளாழ மள்வின்மை கீர்த்தி
நலமுயற்சி யளவுபயன் குணம்பிறவு முடையான்
நற்குருவா மிவற்றெதிர்தூர்க் குருவின்றன் னியலே. (3)

தன்மகன்மன் மகனுசான் மகன்கொடுப்போன் பணிவோன்
றகக்கூரி யன்னிவருட் கொலைகளவு காமம்
வன்மடிநோய் கட்குடிபொய் மிடிசினநூற் கச்ச
மானமந்தம் பிணக்கமட நகைதுயில்வன் கண்மை
புன்மதிதீ துணர்கைபல(ர்) பாற்கற்றிடலச் சுறுத்தல்
புகன்றதுண ராமையின்றிச் சொற்சொற்றூங் குணர்தல்
நன்முறைசூழ்ந் துணர்தல்பத்தி குலாதியினோர் பனவும்
நண்ணினன்கொள் வோனிவற்றி னெதிருளன்கொள் கிலனே.

கொள்பவன்கோ ளுணர்ந்திடங்கா லங்குறித்து விரைவு
கோபமின்றி யோதல்கொளட பொழுதொடுசென் றிறைஞ்சி
வள்ளல்குணங் குறிப்பினிசைந் தகம்வயிறாய்ச் செவியே
வாயாய்நூல் சோறுபுண் பவனில்விரைந் தறிதல்
உள்ளன்முக்காற் கேட்டல்வழக் கறிதல்கூ றியனூல்
உடன்பயிறல் நூல்பலகால் பார்த்திடல்சிந் தித்தல்
பிள்ளையெனக் குருவையுவப் பித்தலக லாமை
பிறர்க்குரைத்தல் பிறிதுறினுண் டொழிதலுநூற் கொளலே. (5)

நூற்பெயர்நூல் செய்தான்பேர் வழிபயனோ டெல்லை
நூலினுத லியபொருள்கேட் பவர்யாப்பா மெட்டும்
பாற்படுங்கா லங்களன்கா ரணமூன்றுந் தொகுத்துப்
பதினொன்றும் பிறவும்வைத்தல் சிறப்புப்பா யிரமாம்
வாய்ப்புறுந்தன் குருத்தன்சேய் தன்னொடுங்கற் றவன்றன்
மாணாக்க னுரைசெய்வோ னதுகூறல் கடனாம்
மேற்படக்கற் றுணர்ந்துதெளிந் தெவர்க்கும்விளங் காத
விளங்கினுந்தான் றனைப்புலவன் புகழ்ந்திடத்த காதே. (6)

தகும்புலவோற் காசவைக்க ணோலைத்தூக் கிடினுந்
தன்வலியோ ராரிடையுஞ் சூழ்சொலிவெல் லிடத்தும்
இகழ்ந்துபிறர் சொலுமிடத்துந் தனைப்புகழ்ந்தோ தலுமுன்
னிசைத்தவழி தொகுத்தலே விரித்தறொகை விரியே
புகன்றமொழி பெயர்ப்பெனநால் வகைத்தாமங் கையர்க்கும்
பொற்பூணின் றெனிலழகு குன்றுதல்போ லெவரும்
மகிழ்ந்துகற்பப் பல்லாற்றாற் பல்பொருளும் விரித்து
வகுக்கினும்பா யிரமில்லா நூற்சீர்குன் றிடுமே. (7)

குன்றமிகை படமாறு கொளப்பின்கூ றியது
கூறல்வெற் றெனத்தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
மன்றவழூஉச் சொற்புணர்த்தல் சென்றுதேய்ந் திறுதல்
மயங்கவைத்த னின்றுபய னின்மைபத்தாங் குற்றம்
இன்றிசுருங் கச்சொலல்வி ளங்கவைத்த னவின்றோர்க்
கினிமைநன்மொ ழிப்புணர்த்த லுதாரணத்த தாதல்
ஒன்றுமலை யாமைமுறை யின்வைப்பே யாழும்
ஒலியுடைமை விழுமியது பயத்தல்பத்தா மழகே. (8)

அழிமறுத்த னேர்தல்பிறர் நூற்குற்றங் காட்ட
லாமிருவர் மாறுகோ ளொருதலையே துணிதல்
கொழிதானுட் டித்தனது நிறுத்தல்பிறர் மதமேற்
கொண்டகற்றல் பிறிதொடுப டான்றன்மதங் கொளலாய்

எழுவகைநூன் மதங்களிங்ங னிவ்வகையா மெனவே
யேற்புழிநன் கோர்ந்துநூற் பொருள்வழக்கோ டுணர்த்தி
வழூவறக்கேட் போர்வியப்பத் தகும்வகையே செலுத்து
மதித்திறந்தந்(திர வுத்)தி யதுவெண்ணுன் காமே. (9)

மேலைநூத லிப்புகுதல் தொகுத்தல்வகுத் துரைத்தல்
விகற்பத்தின் முடித்திடலுய்த் துணர்தன்மாட் டெறிதல்
நூலிடைத்தன் றுணிவுபிறர் மதஞ்சொலல்தா னெடுத்து
நுவறன்முடித் துக்காட்டல் முடிவிடங்கூ றுதலே
சாலெடுத்துக் காட்டெடுக்கு மொழியினெய்த வைத்தல்
தான்மிக்கெ டுத்துரைத்த லெஞ்சுசொல்லின் விரித்தல் —
எலுமுரை யிற்கோட லுரைத்துமென்ற லுரைத்தாம்
எனமொழிந்த துடன்மொழியா ததனைமுடித் திடலே. (10)

முடிந்ததனை முடித்தலிரட் டுறமொழித லேமுன்
மொழிந்துகொளல் பின்னிறுத்த லின்னதன்றீ தென்றல்
உடன்படலே யேதுக்காட் டுத்தொடர்ச்சொற் புணர்த்தல்
ஒன்றெனத்தன் னினமுடித்த லொப்பின்முடித் திடலே
மிடைந்தசொல்லின் முடிவினிலப் பொருள்சொலல்சொற் பொரு
விரித்தலிறப் பகற்றலெதிர் போற்றலுமவ் வகையாம் [ளே
அடர்ந்தசிகுற் றமுதனுன்கும் பல்சிறந்த விவையாம்
அறம்பொருளின் பமும்வீட்டின் பணைதலுநூற் பயனே. (11)

அணைந்தபல்வ கைப்பொருள்சில் லெழுத்தினிற்பே ருருச்சிற்
றுடியினிற் கண்டாங்குச் செறித்தினிது விளக்கிக்
குணஞ்செய்பொருட் டிட்பநுட்பஞ் சிறந்தனசூத் திரமாங்
குறிசெய்கை யிரண்டாய்ப்பிண் டந்தொகுத்தல் வகுத்தல்
இணங்குவிரி புறனடையைந் தினுஞ்சொலல்சூத் திரமாம்
இந்நிலையாற் றெழுக்கரிநோக் கந்தவளைப் பாய்த்து
பணிந்தொரு பருந்தின்வீழ் வன்னவா மோத்துப்
படலமெனச் சூத்திரத்தின் றிரட்டிரண்டென் றுரே. (12)

ஓரினமாம் பொருளையின மணிநிரல்வைத் தாங்கே
யொருவழிவைத் திடலோத்தா மொருநெறியே யன்றிச்
சேர்பொருள்வி ராய்ப்பொதுச்சொற் றொடரினது படலஞ்
செப்புமதி காரமோத் தின்றொகுதி காண்டம்
சோர்வில்பட லத்தொகுதி பாடமதி காரம்
தொகைகருத்துச் சொற்பொருள்சொல் வகைவிரிவி சேடக்
கூர்வினவி டைதுணிவு பயனுதா ரணமே
குருமொழியீ ரேழுறுப்புங் கொளவுரையாங் காணே. (13)

காண்டிகையே விருத்தியென்றவ் வுரையிரண்டா மவற்றுட்
காண்டிகைசொற் பொருள்கருத்து தாரணத்து மவற்றுள்
தூண்டும்வின விடைகொடுஞ்சூத் திரப்பொருட்டோற் றுவவாஞ்
சூத்திரத்துட் பொருளலது மங்ஙனில தமையா
வேண்டுபொருள் யாவையுந்தன் னுரையானுங் குருநூல்
விதியானு மையமற வப்பதித்த வுரையும்
ஈண்டியிட விளக்குவது விருத்திநூல் வரலா
றித்துணையு முன்னுணர்ந்தோ ரினிதுணர்வார் தமிழே. (14)

## முதலாவது எழுத்ததிகாரம்.

### க-வது எழுத்தாக்கமரபு.

தமிழ்தருதென் பொதிகைமலை கயிலைமலை கமலஞ்
சங்கமிவற் றிறைவருக்குப் பொருளைமலர் வாயால்
உமிழ்குருவாய் ஆறெழுத்தோர் எழுத்தாய்ச்செந் தூர்வாழ்
ஒருகுமரன் இருசரணென் னுளத்துறைந்த வளத்தாற்
சிமிழனைய களபமுலைப் பசுமயிலே முதியோர்
செப்பெழுத்துச் சொற்பொருள்யாப் பலங்கார மெனுமைந்
தமிழ்தினிலக் கணவிரிவோ ரொன்றொருமுன் றியலாய்
அடக்கியிச் சுவாமிநா தத்தின்மொழி குவனே. (1)

மொழிக்குக்கா ரணமாகிப் பரையருளான் மூல
முகிழ்நாத காரியமாம் விந்தொலியோர்க் கெழுதின்
எழுத்ததுதான் பெயரெண்முறை பிறப்புருமாத் திரைமுன்
னீறிடைப்போ லிபும்பதமும் புணர்வுமென்று திரண்டாம்
சுழித்தமுதல் சார்புயிர்மெய் குறினெடில்சுக் கினச்
சுட்டுவன்மை மென்மையிடை யறுகுறுக்க முயிர்மெய்
அழுத்தாய்த மீரளபு போலிவிட மமுதம்
ஆண்பெணலி யிவையவற்றுட் பெயரெனவெண் ணுகவே. (2)

எண்முதல்சார் பிரண்டவற்றுண் முதலுயிரொற் றிரண்டா
றிரண்டுயிர்மூ வாறுடலவ் விரிமுப்பா னுய்தம்
ஒண்ணுகுறள் உ இ ஐ ஔ மவ்வாய்த முயிர்மெய்
யுயிரளபொற் றளபெனச்சார் பின்வகைபத் தவற்றுள்
அண்ணுயிர்மெய் யிருநூற்றுப் பதினுறே மூயிரின்
அளபு பன்னென் றெற்றளபே ஊைவோரொன் ருக
விண்முறையா லிருநூற்று காற்பதொன்றவ் விரியாம்
விரியிரண்டுங் தொகுத்திருநூற் றெழுபதொன்றவ் வகல்வே(3)

அகராதி யுயிருற வியுவெவ்வொக் குறிலுங்
தாவீயூ வேயையோ வௌநெடிலே முனியுந்
தருசுட்டா வோவீற்றெய் யாமுதலே யிருபாற்
சாரவினுக் கம்முதன்மூ வாறுமுட லவற்றுள்
இகல் கசட தபறவலி மெலி ஙஞண நமன
இடையரல வழள.......................................
வகரமவிக் கூட்டமவ் வியக்கூட்டை கான்மற்
றவுவக்கூட் டமமௌவிவ் வாறுசந்தி முறையே. (4)

முறைசிறப்பா னினத்தானம் முதனடத்தல் பிறப்பு
முயற்சிபொரு ளளவுருவு மேற்பனவொப் பினமம்
நிறையுயிராற் சூக்குமையா மூலவிந்தாற் பிறந்து
நேர்ந்துதா னனைக்கலந்து சிதறியுயிர் கருதீர்

உறழுவெழுத் தொடுக்குபைசந் தியதாய்நெஞ் சுயிர்சேர்ந்
துரித்தெரித்துள் ளுணர்(வு)வொலி மத்திமையாய்க் கண்டம்
செறியுமுச்சி நாசியுற்று நாவ்வணம்பல் லிதழின்
செயலால்வை கரியாய்வெவ் வேறெழுத்தா யிடுமே (5)

இடையுயிர்கண் மிடற்றினுச்சி வலிமெலிமூக் கவற்றுள்
இயல்வின் அஆ வங்காப்பவ் வங்காப்போ டண்பல்
அடிநாவின் விளிம்புறஇ ஈஎஏ ஐயாம்
அவற்றொடிதழ் குவிவின் உஊ ஒஓஔ உதிக்குந்
தொடாடிநா வடியண்ண முறக்கஙவா மிடைநாத்
துன்னுமிடை யண்ணமுறச் சஞவாகு முடிநா
முடியண்ண முறடணவா மண்பலடி யதினு
முடியுறவாந் தநமீகீ ழிதழுறவாம் பமவே. (6)

யம்புமண்ணக் குழிசேர்ந்த மிடற்றுக்கா லடிநாப்
பற்றயவ்வா மண்ணநுனி நாவருட ரழவாம்
நம்புமண்பன் முதலைநா விளிம்பொற்ற லவ்வா
நாவின்விளிம் பண்ணத்தை வருடளவ்வா மேற்பல்
வம்பிலிதழ் குற்றவவ்வா நுனிநாவண் ணத்தின்
வலிதொற்ற றனவாமோ ரிடத்தினிற்பல் லெழுத்துத்
தம்பிறப்போ தினுமெடுத்தல் படுத்தனலி வுழப்பிற்
றத்தமில்சில் பேதமுள காண்மதியா லுனியே. (7)

உனித்தெரிநெஞ் சொலியானங் காந்தியன்று குற்றக்கீழ்
உயி(ர்ச் சார்)வலிமே லொற்றியல்போல் வருமாய்தப் புள்ளி
தனிக்குறினீங் குயிர்கணமுன் றுய்தமென்றைந் தொடர்க்கீழ்ச்
சார்வலியூ ருக்குறுகு மயமுன்குற ளுத்திரி
பினைபுணைத்த மியாவினிக ரங்குறகு முதலி
டைபின்பொருளை குன்றுமுத லற்றுமௌ வுளவத் திரிந்த
துனைப்பின்வம்மேன் மக்குறுகுந் தனிக்குறில்சார் லளப்பி
னனுத்தகரத் திரிவின்முன்னுய் தங்குறுக்கா யிடுமே. (8)

ஆயுமொற்றெல் லாமுமப்பான் முன்னாருவா யுயிர்வே
றாகிற்கான் மேற்கீழாம் விலங்குகோ டிரட்டாய்
காயம்வெவ்வே றாகியுயி ரளவாயவ் வடிவைக்
காரந்துயிர்பின் னாய்த்தாமுந் துயிர்த்தலுயிர் மெய்யா
மேயவிசை கெடின்மொழிக்கு முன்பினிடை குறிதம்
மினக்குறிலாய் நெடினீளு மையௌவிவ்வுக் குறிலாய்க்
கூயளவா மாய்தம்விய லளகனாண கமனக்
குறிற்கீழா யிடைகடையிக் காங்குறியொற் றதற்கே (9)

ஒற்றுயிரா திகள்பாதத் தாறுறுப்பின் மூக்கூட்
டுழ்மைத்த வடிவெகர வொகரமெய்ப்புள் ளியுமாம்
அற்றநெடி லிரண்டுகுறு கையௌமுத லீரொன்
றரையிடையொன் றாங்குறிலொன் றாய்தமெய்குற் றுகரங்
குற்றிகர மரைமவ்வாய் தக்குறுக்க மூங்கால்
குறித்துணரிற் கண்ணிமைத்த னொடித்தன்மாத் திரைதான்
மற்றளபுக் கொலிக்கெடுநி றைப்பளபாம் பண்ட
மாற்றுவிளி யிசைகுறிப்பு மிகலுமெழுத் தாறுமே (10)

உறுமுயிர்க சதநபம வரியும்உஊ ஒஓ
ஒழிந்தவொடு வவ்வுமீ உஊஒ ஐஔ
வறுமுயிரி னொடுஞவ்வுமல் லவைஇஈ எஏ
யலவின்யவ் வுமாநூற்று நான்குமொழி முதற்காம்
பெறுயமுனி..............................
பின்னிலையே யுயர்ஞணந மனயரல வழளக்
குறுகுமுவ்வோ டறுநான்கா மொங்கவ்வொடாங் கவிற்
கூடியௌவா மெய்யோடே லாதெகர வுயிரே (11)

உயிர்மயக்கு மெய்மயக்கொற் றுயிர்மயக்கொன் றொருமுன்
றொருமொழியிற் றொடர்மொழியி னிடைமயங்கு முயிர்முன்
வியனுயிர்விட் டிசைத்ததொடர்ச் சொலினுமெய் மயக்கம்
வேற்றுநிலை யுடனிலையென் றிருவகைத்தா மவற்றுள்

மயலினூட ணிலேதமிற்றும் ரழவலவீ ரெட்டு
மயங்குநஙத் தனிச்சொ லுரு கசதபநீத் தீரேழ்
இயல்பின்மெய் யொடுமயங்கல் வேற்றுநிலை மயக்காம்
ஈண்டினியொற் றுயிர்மயக்க மவற்றொடளவ மயக்கே. (12)

மயங்குமேன்முன் னர்வவ்வின் மடறமுன் கசப
வரும்னணமுன் கபமவரும் லளமுன்வரும் பகவ
தயங்குயர ழமுன்கபம வதநவரும் லம்முன்
சவுமம்முன் வவுமயங்கு மிருசொலினும் யாழ
வயின்சஞவு னணமுன்வச ஞவுய்ளம்முன் சவ்வும்
வலிஙயவில் பத்தின்முன்னர் ய்வுந்தொடர்ச்சொ லிடையா
முயர்ந்தயர ழமுன்கபம தநசஞங வீரொற்
றுறும்ரழவும் யவின்ஙவ்வுந் தனிக்குறி லுருவே. (13)

தனையுணர்த்தி னெழுத்துமுன்பின் னிடைவிதிநீத் தலுமாங்
தன்மையொன் றெற்றுமையா யப்பொருட்டாம் போலி
இனமதிரண் டிரண்டாயொற் றுமையாநீத் தம்முன்
இயவுறினை யுவவுறினெள மோவவுவே ய யி
மனசதப சதவயவே வமலளவே ஞநவா
மற்றிடைமுன் சஞயமுன்னும் வையியையு மகரம்
மனுகாங்கான் காரணச்சா ரியையெழுத்திற் கொன்று
பலவிறெனன்று பலவியையு மிலதுமா பெழுத்தே. (14)

(முதலாவது எழுத்தாக்கமரபு முற்றிற்று.)